பதிவு எண் 2041

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா

# குடி அரசு

வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0
6 மாத சந்தா ,, ... ரூ 1—12
வெளி நாட்டிற்கு ,, ... ரூ 4—0

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங்குலம் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 1
நீடித்த விளம்பரத்துக்கு தனி விலாசம்

மலர் 3 | ஈரோடு, பிரபவ வரு மார்கழி மீ 10உ (25—12—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 35.

இனம்! இனம்
முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனு இனம்.

எங்கள் 18 காரட் சோல்டு கோல்டு பின்புறம்மிசித்திரவேலை செய்யப்பட்டஜீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனு இனமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனேஎழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

அமேரிக்க காகிதங்களில், பொன், வெள்ளி மெடல் பெற்ற

விதைகள், செடிகள்.

3-வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுபழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனும். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள் :—

20 சாம்பிள் பாக்கெட் ரூ. 2—0—0
10 ,, ,, ரூ. 1—4—0
நாட்டுக் காய்கறி 20 ரூ. 2—8—0

ச. கோ. இ. காதர்மீரா சாயபு;
ஹெட்கார்சரி தோட்டம், சேலம்.

கையில் கட்டும் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன் பேனுவும் இனம்.

நூதனமாக வரவழைத்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புஷமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான காலத்தைக் காட்டும்.
விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.

லண்டன் வாட்ச் அவுஸ்.
3, பார்க் டவுன், (தா) சென்னை.

இந்தியாவின் பூர்வீக மறை ஆராய்ச்சிக்குரிய சிறந்த நூல்கள்.
மதசீர்திருத்தக்காரர்களும் தமிழபிமானிகளும் அவசியம் பார்க்க வேண்டிய புத்தகங்கள்.

இந்திரர் தேச சரிதை— ஆரியர் நமது தேசத்தில் வந்து தேசத்தையும், மதத்தையும், மக்களையும், பாழ்படுத்தியதை விளரித்துள்ளது 0—8—0
விசேஷ சங்கைத்தெளிவு 100 அவசியமும் அருமையுமான சங்கைகளை விளக்கியுள்ளது 0—8—0
திருவள்ளுவர் உண்மை சரிதமும் அவரது மதமும் 0—2—0
திராவிடர் பண்டிகைகளின் விளக்கம் 0—2—0
திராவிடர் விவாகங்களின் விளக்கம் 0—2—6
கிராம தேவதையான அம்பிகையம்மன் சரிதை 0—1—6
ஸ்ரீ கஜமுகனின் உண்மை சரித்திரம் 0—1—6
ஸ்ரீ முருகனின் உண்மை சரித்திரம் 0—1—6
அரிச்சந்திரனின் உண்மை சரித்திரம் 0—1—6
புத்த தருமோபதேச அநுஷ்டான நியமம் 0—1—0
வஜ்ஜிராசூசி என்னும் ஜாதி கண்டனம் 0—1—0
சுக்கிரன் சரித்திர விளக்க விளம்பிகை 0—2—0
யதார்த்த வேஷ பிராமணர் வேதாந்த விபரம் 0—4—0
நூதன ஜாதிகளின் உற்பவ பீடிகை 0—4—0
நிகழ்காலத்திரங்கலும் பெருங் குறவஞ்சியும் 0—2—6
விபூதி விளக்க வெளியும் கபோலீசர் விபரமும் 0—0—6

பூர்வத்தமிழொளியாம் ஸ்ரீ புத்தாது ஆதி வேதம். தமிழில் இதைவிட சிறந்தநூல் வேறு கிடையாது கலிகோ பைண்டுசெய்த பெரிய புத்தகம் 3—0—0
புத்தமார்க்க விளக்கம் 1 & 2 0—5—0
அசோக சரித்திரம் 0—4—0
வருணபேத விளக்கம் 0—4—0
ஸ்ரீ அம்பிகையம்மன் அருளிய திருவாசகம் 0—6—0

ஸ்ரீ ஸித்தார்த்தா புத்தக சாலை
சாம்பியன் ரீப்ஸ் போஸ்ட்
கோலார் கோல்ட் பீல்ட்ஸ்.
Sri Siddhartha Book Depot
Champion Reefs P.O.
Kolar Gold Field S. I.

நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிராகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திராளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங்



செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.

தி. பான்ஸி வாட்ச அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

இனம்! இனம்!!
சாரவீவேகி சதாநந்தன் சம்பாஷணை 'இழவன் குமாரனுஞன்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனமாக அனுப்புவோம்.

ஸ்ரீ சாது இரத்னாசற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

"தாருல் இஸ்லாம்"
வாரப்பத்திரிகை.

இதைப்போன்ற நவீன வாரப்பத்திரிகை இதுவரை வெளிவந்ததில்லை. இது வெகு அழகிய விதத்தில் ஆங்கில வாரப்பத்திரிகைகளைப்போல் நடத்தப்படுகிறது. ஆரிய சமாஜிகளின் விஷமத்தைக் கண்டித்து உண்மையான ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகப்பாடுபடுவது. வருஷசந்தா ரூ. 6 தான். வெளி நாட்டுக்கு ரூ. 7—8—0.

மாதிரிப் பிரதி இனம்.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ்,
தபாற்பெட்டி 15, சென்னை.

இதோ! இதோ!! இதோ!!!
எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப் பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரு. 1000 இனம்.
ஸ்ரீ கோக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்
சிந்தாமணி லேஹியம்.
(அபகாந்த செந்தூரம்)
இந்த லேஹியத்தில் 196 லிதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனனி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயக்கிரத்தின் வாயிலாய்க் கொடுத்து அசல் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏரானமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உஷ்ணாக்கி, கை பாகம், செய்பாகம் தவறுமல் செய்துள்ளோம். ஆகாவிதயத்தில் யாதும் விர்ப்பத்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் வந்த தேசவஸ்ணிலைமையிலும் மேற்படி லேஹிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவுக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.
இந்த லேஹிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.
1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் தினந்தபோதும் உண்டாகும் தாரிதல்லிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித் தவிடும்.
2. தளர்ந்து தவண்டு மெலிவுபட்ட இராஜ கருவிகளாகிய சுரம்புகளை முறுக்கேற்றி செட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்ல தத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. பிடித் தண்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மல்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, நடுவாதம், அரிணம் முதலியவையும் காற்றுப்பற்றி உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.
கண்பர்களே! இந்த லேஹியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, மலோன் ஜெயிய மலாய் ஸ்டேகள், ஜாவா, மோரிஸ், சேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்ற தென பிரசித்தி பெற்றது. தூற்றுக் கணக்கான கதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன் தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்டேல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கல்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேஹியத்தை புசித்து ஆரோக்கணக்கான சற் சாட்சிப் பத்திரமகள் கொடுத்திருக்கிறார்கள்.
ஒரு மண்டலம் 48 நான் சாப்பிடக் கூடிய லேஹிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வீ. பி. சட்டமில்லாத வெளிநாட்டு சேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்ற விரம்பமும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம். எமது விலாசம்: ஸ்ரீ நளம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

தேக ஆரோக்கியத்தைக் கவனியுங்கள்.
குளிர் காலத்தில் தேக ஆரோக்கியத்தைக் காப்பாற்றுவது மிகவும் இன்றியமையாதது. குளிர்கால உபயோகத்திற்கென்றே நானாவிதமான கம்பளிப் போர்வைத் தினுசுகள் ஏராளமாய் ஸ்டாக் செய்திருக்கிறோம். குளிர் காலம் ஆரம்பித்து விட்டதால் ஆர்டர்கள் குவிகின்றன. நீங்களும் உங்கள் ஆர்டரை அனுப்பிவிடுங்கள்

| | | |
|---|---|---|
| கெ. 1. | ஜெர்மன் கம்பிக்கரைப் போர்வை | 1 ரூ. 9—8—0 |
| கெ. 2. | பாரீஸ் பூக்கரைப் போர்வை | 1 ரூ. 10—8—0 |
| கெ. 3. | டைஉயர்ந்தது பெரிய சயில் | 1 ரூ. 16—0—0 |
| கெ. 4. | காஷ்மீர் கை கெசவுப் போர்வை | 1 ரூ. 12—0—0 |
| கெ. 5. | ஜெர்மன் மேகவர்ணப் போர்வை | 1 ரூ. 15—0—0 |

கே. எஸ். முத்தையர் அன் கம்பெனி, மதராஸ்
K. S. MUTHIAH & Co, Export Dept., Post Box 99. MADRAS.

ஆநந்த குணபோதினி.
இரண்டாம் வருடம்.
இது போன்ற கலீன மாதார்தா சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் நிதர்சதமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளே யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்த, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிக்கைக்கினிய, செவிக்கினிய அவகாசவ்சன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000—சந்தாதார்கள்உள்ளது. வருட சந்தா ரூ.1, வெளி நாடு ரு. 1—4—0 மாதிரி இனம். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.
'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலே வீதி, மதராஸ்.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!! புண்ணுய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.
முத்து மரமா.
இரண்டாம்பதிப்பு.
கேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணு ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.
வாலன் புஸ்தகசாலே,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

முன் விலை ரு. 14 இப்பொழுதைரு 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்

மேற்கண்டபடி எத்தஷேப்வேண்டுமானலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல்இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இலவசம்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரு. ஏழுமட்டும்.
CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.
Photo Hand Camera

லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போடோ பிடிக்கலாம். போடோவின் அளவு 3½"x 2½" ஆகும், இக்த மெஷீனை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லாசாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.
Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி.
பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்

# நீதி இலாகாவும் நிர்வாக இலாகாவும்

## வைதிக இலாகாவின் வழியே போகிறது.

கைவல்ய சாமியார் எழுதுவது.

I

இந்த வியாசம் நீளமானது. படிப்பவர்கள் சோம்பலில்லாமல் இருப்பதற்காக மூன்று பாகமாக எழுதுகிறேன். இவை படித்துத் தெரிந்து விடும்படியான விஷயமல்ல. மனதில் பக்குவப்படுத்தி தினமும் விவேகத்தினோடு சேர்த்து மனிதனென்னும் பேருக்குக் காரணமாயிருக்கும் சிந்தனை சக்திவரையிலும் கொண்டுபோய் சேர்த்து விட வேண்டிய அவ்வளவு முக்கியமான விஷயமாகும். நிடத்துடன் புத்தியின் சக்தியை சம்பாதிப்பவன் உடனால். ஆகிவருகிறப் படியேறுன் என்பது அனுபோக வாக்கியம். பல நாற்றண்டு நாம் வாயை மூடிக்கொண்டு அமானப் பட்ட தெல்லாம் ஒன்றுசேர்ந்து கடைசியில் அன்னிய ராஜ்ஜியமாகப் பரிணமித்தது. கை எப்போதும் உடம்பில் சோயுள்ள பிடத்தைப் போய்த் தின்று வது போலவே நம்முடைய கருத்து முழுவதும் நம்மை யாளுபவர்களுடைய ராஜ்ஜிய நெறியில் மசன்றும், பொறுப்பில்லாத அன்னியரின் ஆட்சியிலிருந்து விடுதலே பெறவேண்டுமென்ற பிரார்த்தனை இப்போது உலகத்தில் எல்லா நிசைகளிலும் எழுந்து அடைந்த அனுபோகத்தைக் கண்டும், நாம் பட்ட பாடும் வீணாயின; நாம் அடைந்த பலனு மொன்றுமில்லே. கால சக்தியின் தூண்டுதலால் நம் தோல்விக்கும் அவமானத்திற்கும் சுயமரியாதை இல்லாததே காரணமென்று தெரிந்துகொண்டோம். ஆனபடியினுலேதான் நம்மை எல்லாம் தூண்டும் மானம் நல்லதென்று அசேகர் சொல்லவும் சன சமூகம் ஒத்துக் கொள்ளவும் காரணமாக இருக்கிறது. அக்காரணம் பற்றியே நம்மை அசையாதபடி பலி மிருகம்போலே கட்டிப்போட்டிருக்த ஞாயமில்லாத சாஸ்திர எடுகளையும், காரிய லாபத்திற்குக் காட்டும் வீண் சாஸ்திர தற் புகழ்ச்சிகளையும், பாழ்படுத்தின வருணுசிமங்களையும், பழிக்கிறேரும். ஆகவே பார்ப்பார்கள் சாஸ்திரமென்னும் பிரமையால் உண்டுபண்ணப்பட்ட தைரியமும், புரட்டென்னும் புரோகிதக்கோட்டையும் சுயமரியாதை என்னும் குண்டால் தினைக்கப் படுவதையும் தினைக்கப்படும் என்பதையும் உணர்கிறார்கள். பொது ஜனங்களில் பலர் விஞ்ஞான அறிவின் பயனுகவும் ஞானடைவில் சமத்துவத்தை யடையும் பாதையில் செல்லுவதையும் அறிகிறார்கள். நம் தேசத்தில் மதமே பிரதானமாக இருந்து வருகிறதாலுலும், அதை தடுக்க முடியாத லிதத்திலும், தெரியாமலும், தங்கள் அனுகூடத்த அனுச்சார அக்கிரமத்தாலும், மாறுதலடைந்துகொண்டே வருகிறதையும் அனுபோகத்தில் காண்கிறார்கள். இத்தனையும் கண்டாலும், உண்ட பூனை உறியையே பார்க்குமாம் என்பதுபோல தங்கள் ஆதிக்கத்தை விட்மனம் வராமல் அதையே என்றும் நிலே நிறுத்தி சன சமூகத்தை அடிமை கொண்ட வருணுசிம சாஸ்திரங்களே நிலே நிறுத்துவதற்கு தங்களால் எந்தெந்த விதமான பிரசாரங்கள் செய்யலாமோ அவை யனைத்தையும் செய்து வருகிறார்கள். அதில் ராஜாங்கத்தில் பெரிய பதவிகளே வகிப்பவர்களான சர். சி. பி. ராமசாமி அய்யர் சபா காயகராகவும், ஜட்ஜ் வி. வி. சினிவாசய்யங்கார் பிரசங்கியாகவும் செய்த பிரசாரத்தின் பிரசங்கத்தை கவனிப்போம்.

இவர்கள் இருவரும் நிர்வாக இலாக்காவிலும் நீதியிலாக்காவிலும் முதற் பதவியை வகிப்பவர்கள். இவர்கள் பிரசங்கத்தில் சேர்ந்திருந்த பெரிய வக்கீல்கள் இனி நீதியிலாக்காவிலும் நிர்வாக இலாக்காவிலும் பெரிய பதவியை வகிக்கப்போறவர்கள். இவர்களுக்கு ஆதரவினவர் சர். டி. ஆர். ராமச்சந்திரய்யர். இவர், தொழில் அறிவுன்ன சக்தியம் இவைகளில் யெப்படி இருக்காலும் எல்லா வைதீகத்திலும் முதன்மையான வைதிக சொரூபத்தை மலையானத்துப் பார்ப்பனர்.

நீதியிலாக்காவையும் நிர்வாக இலாக்காவையும் பிரித்துவிட வேண்டுமென்று காங்கிரஸ் தோன்றின நாள் முதற்கொண்டு ராஜாங்கத்தாரிடம் கேட்டுக்கொண்டு வருகிறது. இதுவே ராஜாங்க சீர்திருத்தத்தில் கேள்கப்படும் முதற் கேள்வியாக விருக்கிறது. விவகாரம் வரும்போது பாப்பாரப்பத்திரிகைகளும் இவை இரண்டும் பிரிக்கப்படவேண்டுமென்றே எழுதியும் வருகின்றன. இப்படியிருக்க நிர்வாக பதவியில் பெரிய பதவியை வகிப்பவரான சர். சி. பி. அய்யரும், நீதிபதிகளில் பெரிய பதவியை வகிப்பவரான லி. லி. அய்யங்கார் அவர்களும், வைதிக கோஷ்டிகளில் பெரிய பதவியை வகிப்பவரான டி. ஆர். ராமச்சந்திர அய்யரும், ஆகிய இவர்கள் மூன்று பேரும் இவர்களுடைய மூன்று அதிகாரங்களும் ஒன்று சேர்ந்த ராஜ்ய பரம் செய்தால் 'செத்து மடிந்து சிவலோகம் போனலும், வாழ்ந்து மடிந்து வைகுந்தம் போனலும், பாடுபட்டுப் பணம் தேடி பாப்பானுக்கே கொடுத்து பாழடைந்தாலும், பாப்பானை எங்களுக்கு பாதகாணிக்கை கொடுக்காமல் போகாதே' என்னும் நீங்களே ஒத்துப் போருமே ஒழிய இந்த நீதி உலகத்தில் எல்லாரையும் போல் நம்மையும் மனிதனுகவிருக்க வைக்குமா. இந்த நீதி என்ன யென்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். இது வரையிலும் இந்த நீதியானது எவ்வளவு அளிந்திருள் பிரவேசித்திருக்கு மென்பது ஊகித்துணரவேண்டிய விஷயம். நிர்வாக பதவியை வகிக்கும் சர். சி. பி. அய்யரிடம் வைதீக நீதி போய்ச் சேர்ந்தமையால்லவர கல்பாத்தி முனிசிபால்டி ரோட்டில் ஈழவர்கள் போகக்கூடாதென்ற 144-வது சட்டத்தால் தடுக்கப்பட்டார்கள். ஆரிய சமாஜத்து ஈழவன் கல்பாத்திக்குள் போனதற்காக அடித்த கேஸ் ஐகோர்ட்டுக்கு வந்த பொழுது, முனிசி பாலிட்டி ரோட்டில் எல்லாருக்கும் போக உரிமையும், அடித்தவனுக்கு அபராதமும் வென்னக் கார நீதிபதியாலல்லவா உறுதி செய்யப்பட்டது. அந்த இடத்தில் வி. வி. சினிவாசய்யங்கார் நீதிபதியாக விருந்திருந்தால், நிர்வாக அதிகாரியான சர். சி. பி. அய்யரின் கருத்திற்கும் இவருடைய பூர்வீக இந்து காரீகத்திற்கும் இவர்கள் வைதிக கோஷ்டியின் அபிப்பிராயத்திற்கும் ஒத்தல்லவோ தீர்ப்புக் கூறவேண்டும். இந்த குறுகிய கோணையோடு கூடின ஞாய மில்லாத பாதையில் ஜன சேவை யாத்திரிகர்கள் குறைவின்றி செல்லவும், வானத்திலிருந்து தேசபக்திக்கு வா என்ற சத்தம் கேட்ட உடனே சரியென்று போகவும் எவ்வளவு கஷ்டம் என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள். தேசத்திற்கும் மனித ஜாதிக்கும் தொண்டு புரியப் பல துறைகள் விரிந்து இடக்கும் மற்ற தேசங்களில் வைதிகதன்னலத்தின் தடைகள் இல்லே. அதை நினைத்துதான் வென்னேக்கார அதிகாரிகளையே ஜனங்கள் தாமகன் தாமகன்தான் என்கிறார்கள். இப்படி உலக வாழ்கையில் ஒவ்வொரு அம்சத்திலும் குருமான கொடுக்கோன்மை நடப்பதை ஜனசமூகங்களுக்கு கண்மை யென்ற நம்பியோ, நடித்தோ ராஜாங்கத்தில் சுசாமல் பரிபூரண விடுதலேயும் கேட்கிறார்கள். என்ன வென்னேக் காரனுடைய வார்த்தைக்குப் பெரிய வென்னேக் காரன் காது கொடுக்காவிட்டாலும், பெரியவென்னேக்காரனுடைய தயாளகுணம் கூட நம்மை காட்டுமிராண்டி என்று நினைக்கும்படியாகச் செய்திறதல்லவா?

குருட்டு மதப் பற்றுடையவர்களும், வக்கீல்களும், சூட்சும புத்தி இல்லாதவர்களும், சூட்சும புத்தி யிருந்தும் தனக்குனகூலமானதைப்பற்றி பிற்பவர்களும், "அது பாயிண்டு அப்படி, இது பாண்டு இப்படி, மதலிஷயமும் சட்ட ஞானமும் அவர்களுட்டு உண்டு, விஷயத்தில் சட்டத்தையே கவனிப்பார்கள். சொந்த அபிப்பிராயமும் குமஸ்தாக்கள் தந்திரமாக எழுதி கை யெழுத்து வாங்குவதும் வேறு, உத்தியோக அதிகாரம் வேறு" என்று தர்க்கம் பண்ணினுலும் இந்த பயங்கர வைதீக அதிகாரிகள் நம்மைப்போலவே சதையும் ரத்தமும் உடைய மனிதர். சோப தாபாதினையும் அருயையினையும் வென்ற முனிவர்கள். நாம் மன அதிர்ச்சியிலும், பயத்திலும் நிழலே உண்மை என்று நினைப்பதுபோலவே அவர்களும் நினைக்கிறார்கள். இயற்கை அன்பில்லாமையுடன் கோபமும் வந்து சேர, வரம்பற்ற அதிகாரமும் அதில் கூடப் நிவற்றுடன் தங்கள் சமூகங்கள் முன் நிற்க ரகிய வழிகளையும், அதற்குவேண்டிய சூழ்ச்சிகளையும் கலக்கல், அந்த இடத்தில் சரியான நியாயமும், தர்மமும் இடைக்குமென்று யார்தான் நினைக்கக்கூடும்? இதைத் அறிந்தே இந்த சாஸ்திரம், கூத்திரியனுக்கு ஜாதியில்லே யென்றும், இருக்கப்படாதென்றும் விதித்தது. அப்படி விதித்திருந்தும் அந்த சாஸ்திரங்கள் எல்லாம், சந்தர்ப்பாகனையே குருமார்களுக்கும் ராஜாங்க அதிகாரிகளுக்கும் முறையே பொய் வேஷ பிரசங்கத்திற்கும், உண்பது குடிப்பது உடுப்பது போன்ற போகத்திற்குமே உபயோகப்படுகின்றனவே யொழிய மக்கள் மனதில் மாறுதலான அனுபோகத்தைக்கான உபயோகப்படக்கண்டோமில்லே. ராஜாங்கத்தாரை கோக்கி "சாம்ராஜ்ய சபைகளில் எங்களுக்கு ஸ்தானம் வேண்டும்" என்ற கேட்பதும், ஜனக்களை நோக்கி "ஜாதியாச்சாரங்களிலும் சொந்த காரியங்களிலும் கூட எஜமான் போட்ட கோட்டை மீறி டக்காதே" என்று சொல்லுவதும் ஒரே விதகர்வத்தால் உண்டாவது விநோதமன்றே? இதற்குப் பெயர் வருணுசிம தர்ம புனருத்தாரணம் என்கிறார்கள். வருணுசிம கட்சிக்காரர்கள், நாம் ஒரு கண்ணுல் நன்கி மற்ருெரு கண்ணுல் விழித்திருக்கும் படி அசாத்திய உத்தாவு போடுகிறார்கள். பார்ப்பானத்தவிர்த்தே இவ்வுத்தாவுகன் மற்றெல்லா ஜனங்களுக்கும் போடப்படுகிறது. சட்டத்தை உண்டு பண்ணுகிறவர்கள் சட்டத்திற்கு அடங்கவேண்டியது சத்தியமானுலும், சட்டத்தைச் செய்கிறவர்கள் பெலமும், அதை அதரிக்கிறவர்கள் டெலக்குறைவும், சட்டத்தின்கர்த்தாக்களே சட்டத்திற்குமேற்படுத்தி அவர்களுக்கு வேறு அர்த்தமும், அவ்வர்த்தம் ஞாயமாகவுமே உண்டாகி விடுகிறது. அதுபோலவே பார்ப்பான் சொல்லும் வருணுசிம தர்மம் என்னும் சட்டம் பார்ப்பானுடைய தந்திர புத்தியினுலும் மற்றவர்களுடைய நம்பிக்கையின் அறியாமையினுலும் பாப்பானைக் கட்டுப்படுத்துவதில்லே. மற்றவர் என்றும் அடிமையாக இருக்கச் சொல்லுகிறதே யொழிய பார்ப்பானைக் கட்டுப்படுத்த வகில்லே. கட்டுப்படுத்துவதாயிருந்தால் ஸ்ரீ சி. பி. ஐயரும், ஸ்ரீ வி. வி. ஐயங்காரும், அவர்களோடு சேர்ந்தவர்களும் எப்படி பிராமணர்கள் ஆவார்கள்? எந்த வர்ணத்தின் தருமத்தைச் சேர்ந்தவர்கள்? ஆசிரம தர்மத்தின் எந்த வாசப்படியையாவது எட்டிப்பார்த்திருக்கிறார்களா? இனியாவது எட்டிப் பார்க்க நினைவுண்டா? அவர்களுடைய ஏற்பாடுகளாவது எட்டிப்பார்க்கக்கூடியதாக இருக்கிறதா?

ஆரம்பத்தில் அரசாங்கத்தாரை சுயராஜ்யம் கேட்பதே சர்வ க்ஷேமத்திற்கும் ஆதாரமென்று

இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க

# திருவள்ளுவரும் அறமும்

சிதம்பரனார் எழுதுவது

கட்டுரை 5

மக்கள் நடக்கவேண்டிய வழி அற வழியே யாகும். அதாவது தருமமார்க்கமாகும். மனி தன் பெறவேண்டிய அறம், பொருள், இன்பம் என்ற மூன்றில் இதுவே முதன்மையாக நிற்கின் றது. தீயவழிகளிற் செல்லுவது கடவுள் கருத் திற்கே இயற்கைக்கே எதிரானதாகும். நீய வழிகளிற் செல்வதால் நீங்குதான் பெறமுடியும். என்மை பெற விரும்புவோர் யாவரும் நல்லவழி யிலேயே நடக்க முயலுதல் வேண்டும். பெரு மையையும், செல்வத்தையும் கொடுப்பது அற மேயாகும். ஆகையால் உயிர்கள் எல்லாவற்றிற் கும் அறமொன்றே நெர்ந்த செல்வமாக விருக் கின்றது: இவ்வுறத்தையாவரும் கைகொண் டொழுகக் கடமைப் பட்டிருக்கின்றனர். இதனை (1)"பெருமையையும் தரும்,செல்வத்தையும் கொ டுக்கும். ஆகையால் உயிர்களுக்கு அறத்தைவிட சிறந்த செல்வம் வேறென்ன விருக்கின்றது" (ஒன்றுமில்லை) என்று திருவள்ளுவர் கூறுவதனு லறியலாம்.

அறஞ் செய்வதால் அடையக்கூடிய செல்வத் தைவிடச் நிறந்த செல்வம் வேறில்லை என்பது போலவே அதனை மறந்தால் அதனால் வரும் நீங் கும் பெருந்திங்காகும். ஆகவே யாரும் என் மை நாசத்தக்கதைச் செய்வதையும், நீமை நாச் கூடியதினின்றும் விலகுவதையும் மேற்கொள் ளும் கடமையுடையவராகின்றனர். இதனை (2) "அறத்தைவிடச் நிறந்த செல்வமும் இல்லை. அதனை மறந்தாலிடப் பெரிய கேடும் இல்லை" என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

அற வழியில் நடக்க விரும்புகின்றவர்கள் இன் னின்ன காரியங்களில் அநத்தை மேற்கொள்ள வேண்டும், மற்ற காரியங்களில் எவ்வாறயினும் ஆகலாம் என்று எண்ணுதல் கூடாது. அறத்தி ற்கு அத்தகைய கட்டளையில்லை. அறம் இடைய ருது செய்யக்கூடிய தொன்றாகும். அது எமது கீழுலப் போல் கம்மை லிட்டகலாநிருக்க வேண் டும். தன்னுல் செய்யக்கூடிய அறத்தினை ஒளிக் காமற் செய்யவேண்டும். எந்த வழிகளிற் செய் ய முடியுமோ அந்தந்த வழிகளிலெல்லாம் மறைக் காமற் செய்யவேண்டும். இதனை (3) "முடிந்த வரையிலும்,அறத்தை செய்யக்கூடிய இடம் அப் புடும் போதெல்லாம் செய்யவேண்டும்" என்று திருவள்ளுவர் கூறுவதனுல் அறியலாம்.

உண்மையான அறம் இன்னதென்றறியாது மயங்குவார் பலருளர். தற்கால உலகத்திலும் வேடத்திற்கு உயர்வு தாழ்வு கற்பிக்கப்படுகின் றது. உண்மையான அறவொழுக்க முடையவர் போலி வேடத்தை யணிபவரிருப்பாரையின் அவ ரை உலகத்தார் மதிக்கின்றனரிலர். உதாரண மாக ஒன்று கூறுகின்றேன். ஒருவர் நீய எண் ணங்கள் நிறைந்த இல்லாதவராயும், பிறர்க்கு ஒரு போதும் நீங்கெண்ணுதவராயும், பொது நலம் புரிவதில் ஈடுபட்டவராய விருக்கின்றார். அவர் நற்கால நாகரீகத்தை யொட்டியும், நமது லத் தைக் கருதியும், நீமையிர், உடை முதலியவற் நை யுடையவராயிருந்தால்.அவரை, தங்களிடை ஆசாரமுடையவர்களும், உயர்ந்தவர்களுமில்லை யென்றெண்ணிக்கொண்டிருக்கிற நமது வைதிக க்ஷட்டுப் பெட்டிகள் 'காலி' என்றும், நாத்திக னென்றும், அதிகப்பிரசங்கியென்றும் கூறி வெ றுப்பதைக் கண்கூடாகக்காண்கின்றோம். வஞ்ச கரும், சுயநலமும், அகங்காரமும் கொண்டவர் கன், உருத்திராக்கப்பூனையைப் போலவும், குய முஞ் சமக்கும் கழுதையைப்போலவும், உடல் முழுதும் காம்களையோ, சாம்பலையோ அணி ந்தும், துளசி மணிகளையோ உருத்திராக்க மாலை களையோ நரித்தும், வாயினுல் வென் பெயர்களை யோ நிருமால் பெயர்களையே சொல்லிக்கொ ண்டு மிருப்பவர்களாயின் அவர்கள் நல்லவர்களாக மதிக்கப்படுவதையும் காணலாம். இத்தகைய வேடங்களைக் கிலர் அற மென எண்ணியிருக்கின் றனர். இத்தகைய வேடக்காரற் பயன் ஒரு நிதமுமில்லை, இவற்றுல் உடல் அழுக்குப் படி வதுதான் கண்டபலனுகும். இவ்வேடங்கள் உல கை ஏமாற்றவதற்கு எற்பட்டனவேயன்றி வேற என்று. உண்மையான அறம் மனத்தின் கண் குற்றமில்லாதிருப்பதே யாகும். இதனை (4) "அறஞ் செய்கின்றவன் மனத்தின் கண் குற்ற மில்லாதிருத்தல் வேண்டும். அதுவே எல்லா அறமுமாகும். மற்றைய சொற்களும், வேடங் களும் வெறும் ஆரவாரமாகும்" என்று திருவள் ளுவர் கூறுவதனுலறியலாம்.

அற வழியில் நடக்கின்றவர்கள் முதலிற் கடி யத்தகுந்த குணங்களைக் கடிதல் வேண்டும். அக் குணங்களைக் கடிந்தால்தான் அவர்கள் அறம் புரி வதற்குத் தகுதியுடையவர்களாவார்கள். கடியத் தக்க அந்தக் குணங்கள் "அழுக்காறு, அவா, வெகுளி இன்னுச்சொல்" என நான்காகும். இந்த நான் கும் செய்யக்கூடிய நீமை அனவற்ற தாகும். இவற்றின் நீமைகளைத் திருவள்ளுவரே விரிவா கக் கூறியிருக்கின்றார். பொறுமையுள்ள ஒருவ ருக்கு எப்பொழுதும் மனவமைதியே உண்டா காது. தக்கமும் கவலையும் அவரைச் சூழ்ந்து தன்புறத்திற் கொண்டிருக்கும். மன வமைதி யற்றவருக்குச் நிதியும் இன்பமே உண்டாகாது. இன்ப வாழ்க்கையை அடைவதற்குக் காரணம் மன வமைதி ஆதலால், மன வமைதியைக் குலைக் கின்றபொறுமையை ஒவ்வொருவரும் அகற்றவே ண்டும். இரண்டாவது, அவா. அதாவதனைவிட த ஆசை, கண்ட பொருள்களையெல்லாம் நியா யமற்றவழியில்தனதாகக் கொள்ளவேண்டு மென் னும் கெட்ட எண்ணம்.'ஆசை வெட்க மறியாது' என்றதன்படி ஆசையை நிறைவேற்றிக் கொள்ள த்திய வழியிலும் செல்ல நேரும். ஆகவே ஆசை யையும் ஒவ்வொருவரும் அறவே அகற்ற வேண் டும். அடுத்தது இன்னுச் சொல். அதாவது கடுஞ் சொல். இன் சொல்லால் இனிய செய்கையும், கடுஞ்சொல்லால் கடுஞ் செய்கையும் உண்டாகும். ஆகவே இதனையும் அடியோடகற்ற வேண்டும். அடுத்தது வெகுளி, அதாவது கோடம். எல்லாத் தீங்குகளும் உண்டாவதற்குக் காரணம் கோபம் ஒன்றே. கோபம் இல்லாதிருக்குமாயின் உலகில் நடைபெறும் பல நீச்செயல்களும் நடைபெரு தொழியும். ஆகவே அதனையும் அடியோடகற்ற வேண்டியது அநஞ்செய்வார் கடமையாகும்."

மேற்கூறிய பொருமை, போராை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கும் மனிதர்களிடம் இல் லாவிட்டால், உலகத்திற்கு அரசியல் வேண்டாம், நியாய மன்றங்கள் வேண்டாம், நீதிபதி படைகள் வேண்டாம், கப்பற் படைகள் வேண்டாம், ஆகா யப் படைகள் வேண்டாம், தன்னாசைக் கிளர்ச்சி வேண்டாம், தன் மதிப்புக் கிளர்ச்சி வேண்டாம். உலகம் அமைதியாகத் தானே நடைபெறுமென் பது நிண்ணம். இக்நான்கும் இல்லாநிருப்பது தான் அறமென்று கூறப்படும். இதனை " (5) பொருமை, போராை, கோபம், கடுஞ்சொல் இக் நான்கையும் கீக்கிச் செய்வதே அறமென்று சொ ல்லப்படும்" என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

மக்களின் வாழ்க்கை நிலையற்றதாகும். இத் தனை நாளைக்குத்தான் நாமிருப்போமென்ற கூற முடியாது. இறப்பு என்பது ஒவ்வொரு சமயத் திலும் நம்மைச் சூழ்ந்திருக்கின்றது. இப்போ மூது இறப்பு வருமோ? இன்னுஞ் நிறிது நேரத் நில் இறப்புண்டாகுமோ? இரலில் வருமோ?;பக லில் வருமோ என்ற நிச்சயமில்லை. நமது வாழ் நான் நீர்மேற் குமிழியாகும். வானில் நோன் றும் மின்னலைப் போன்றதாகும். ஆதலால் உயி ரோடிருக்கும்போதே நல்லறங்களைச் செய்துவிட வேண்டும். நாளை செய்வோம், பிறகு செய் வோம், மறு நான் செய்வோம் என்று காலங்கட த்துதல் நமது வாழ்க்கையின் உண்மை நிலையை உணராத அறியாமையின் கூற்றேயாகும். நமது உயிரோடு தொடர்த்து நின்ற உயிர்க்கு நன்மை தருவது அறமொன்றே.ஆதலால் அதனை உடனே செய்ய ஒவ்வொருவரும் முந்தவேண்டும். இதனை (6) "பிறகு செய்வதைப்பற்றி ஆராய்வோம் என் நிருக்காமல் உடனே அறஞ்செய்க. அவ்வறம் உயிர் போகுங்காலத்தும் அவ்வுயிருக்கு உதவியா கும்" என்று திருவள்ளுவர் கூறுவதனுல் அறிய லாம்.

அறஞ் செய்கின்றவர்களுக்கே இவ்வுலகிற் பெ ருமை மிகுநி. அவர்களை எல்லா மதங்களும் புகழ்ந்து கொண்டாடும். இக்காலத்திலும் நில மடச்சாமியார்கள் பல்லக்கிலேறிச் செல்வதைக் காண்கிறோம். இவர்களது மடத்தில் பண்டைக் காலத்தில் வாழ்ந்த பெரியார்கள் மிகுந்த அற வொழுக்க முடையவர்களாயிருந்தமையால் அவர் களை உலக மக்கள் நிறப்புச் செய்யும் பொருட் டுப் பல்லக்கிலேற்றி விழாச் செய்து கொண்டா டுகாயினர். ஆனதால் நிருவள்ளுவர், அறஞ் செய்வதால் அடையும் பெருமைக்குப் பல்லக்கில் ஏறியிருப்பதனையும், அதனைத் தக்குவோனையும் உதாரணமாகக் கூறி அறத்தின் மேன்மையை விளக்குகின்றார். இதனை 7 "அறத்தின் பயன் இன்னதென்று வாயினுற் கூறவேண்டியதில்லை. பல்லக்கில் ஏறிச்செல்கிறவனைக் கொண்டும், அதனைத் தாக்குன்றவனைக் கொண்டும் அறிந்து கொள்ளலாம்" என்னும் குறளால் அறியலாம்.

ஆனுல் இக்காலத்திய வஞ்சகத்துறவிகள், தம் னை மற்றவர்கள் பெருமையாக மதிக்கவேண்டு மென்ற மோக எண்ணத்துடன் பல்லக்கிலேறிக் கொண்டு வக்தியப்பிப் பொருள் பறிக்கின்ற னர்.

நமது வாழ் நாள் வீணுகக் கழியாமற் காப்பாற் நவேண்டுமாயின் அறஞ் செய்யவேண்டும். அறஞ் செய்கின்றநில் கழிக்கின்ற நாட்களே பயனுடை ய நாட்களாகும். அஃநில்லாமற் கழிகின்ற நாட் கள் வீணுட்களாகும். வாழ் நாட்களை வீணுட்க ளாக்கமற்றபடிப்பதற்கு ஒரு பெருங் கல்லுண்டு. அக்கல்லே யிட்டுத் தப்போமாயின் வீண் நாட் கள் அடைபட்டுப்போம் அக்கல் அறமொன்றே யாகும். இதனை 8 "அறஞ் செய்யாமற் கழி கின்ற நாட்கள் உண்டாகாமல் எப்பொழுதும் அறஞ் செய்து கொண்டிருந்தால் அதுவே ஒரு வன் வாழ்நாட்களை வீண் வழியிற் செல்லாமற் நடுக்கின்ற கல்லாகும்' என்று திருவள்ளுவர் கூறு வதனுலறியலாம்.

மக்கள் யாவரும் அடைய விரும்புவது இன்ப மே. தன்பத்தையடைய விரும்புவார் ஒருவரு மிலர். அவ்வின்பத்தை ஒவ்வொருவரும் நக்க

இதன் தொடர்ச்சி 17 ம் பக்கம் பார்க்க

# இதிகாசங்கள்.

(திரு. சந்திரசேகரப் பாவலர் எழுதுகிறார்.)

இதிகாசங்கள் என்ற சொல்லுக்குப் பொருள் பழங்கதைகள் என்பது. பழங்கதைகளெல்லாம் இப்பொழுதைத் தலைப்பின்கண் வருமோ என்றால் அவைவாரா. இராமாயணம், பாரதம் என்ற இரண்டுமே இதிகாசங்களெனப் பெயர் பெறுவன. இவை இரண்டும் வடநாட்டில் அரசாண்டு வந்த ஆரிய மன்னர்களது சரித்திரங்கள். இவைகளை நன்றாக ஆராய்ந்து படிப்பதால் பழைய காலத்திலிருந்த ஆரியர்களது பழக்க வழக்கங்களும் நீதிமுறைகளும் இன்னும் அவர்களைப்பற்றிய எனைய செய்திகளும் நன்கு புலனாகும். ஆதலின் முன்பு இத்தலைப்பிட்டு அவ்விரண்டு நூல்களையும் ஆராயத் தொடங்குவோம். இவ்வாராய்ச்சியைப் படிப்போர் இதனை ஆராய்ச்சிக் கண்கொண்டு நோக்கவேண்டுகின்றோம். இவ்வாராய்ச்சியில் ஆரியர் தங்கள் தெய்வங்களுக்குக் கொடுத்துள்ள குணவர்ணனைகளை விளக்கும். முதற்கண் இராமாயணத்தை எடுத்துக்கொள்வோம்.

## இராமாயணம்.

இராமாயணம் என்பது இராமன் என்ற ஆரிய மன்னனுனின் வரலாறு. தற்காலம் இவ்வரலாற்றை அறியாதவர் இலர். இது அவ்வளவு தூரம் ஆரியர்களால் தமிழ் நாட்டில் பரப்பப்பெற்றுள்ளது. தமிழ் மக்களிற் பெரும்பாலார் இவ்விராம சரித்திரம் தம்மவர்களைச் சேர்ந்த சரித்திரமென்றும், இராமபிரான் திருமாலின் அவதாரமாகிய தம் தெய்வமென்றும் நினைத்துப் பாராட்டும்படி ஆரியர் செய்து விட்டனர். இப்போது இச்சரித்திரம் பல வீடுகளில் வித்வான்கள் படிக்க பலர் கூடிப் பத்திரிகைத்தையேடும் கேட்கப் பெறுகின்றது. அவ்வாறு படிக்கும் வித்வான்களும் கேட்கும் அறிஞர்களும் இக்கதையின் உண்மையை அறிய வேண்டிக்கொள்ளுகின்றோம்: அவர்கள் தயவு செய்து மேலே வரும் ஆராய்ச்சிக் கட்டுரையைக் கவனித்துப்படிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம், அவர்கள் படிப்பதெல்லாம் தமிழ் மகனாகிய பெரும் புலவர் கம்பர் பாடிய இராமாயணக்கதையே. கம்பர் தாம் பாடியுள்ள இராமகதையைப் படிப்போர் அது முழுதும் உண்மைதானு என்பதை அறிந்து கொள்வதற்காக வடமொழியிலுள்ள இராமாயணத்தையும் படிக்க வேண்டுமென்று அதன் பெருமையை முதலில் எடுத்தோதுகிறார். ஏனென்றால் கம்பர் தாம் பாடியுள்ள பாடல்களில் சில இடங்களில் தம் கற்பனையை மாற்றி எழுதியிருக்கிறார். புலவர்களில் மிகச்சிறந்தவரிலொருவராகிய கம்பர் இக்கதையைப் பாடியபின்னரே இது தமிழ் மக்கள் பெரும்பாலாரால் படிக்கப் பெற்றது. கம்பர் நிறப்புப்பாயிரத்துப் பாடியுள்ள மேலே வரும் கவிகள் கவனிக்கற் பாலன.

"வய்ய மெண்ணெ யீகழ்வு மர்செனக்
கெய்த வும்மிதி யம்புவ நிம்பாதெனிற்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே"

"தேவ பாடையி னிக்கதை செய்தவர்
மூவரானவர் தம்முளு முக்கிய
நாவினருரை யின்படி கான்றமிழ்ப்
பாவி னலித னார்த்திய பண்பரோ".

தமிழ்ப் பெருமக்கள் வாலாறுகள் பலமலிந்து கிடப்பவும் அவைகளைப் பாடாது அந்நியராகிய ஆரிய வரலாற்றைப் பாடியதால் தம்மை வையம் பிற்காலத்தில் இகழும் எனவும் தமக்கு மாசுவந்தெய்தா மெனவும் தெய்வப் புலவராகிய அவர் அறிந்திருந்தனர் போலும். வால்மீகி முனிவருடைய இராமாயணக் கதையைப் பாடத்தொடங்கியவர் பல இடங்களில் சில செய்திகளை மறைத்தும், சில செய்திகளை மாறுபடுத்தியும் கம்பர் பாடுகிறார். அவைகளை அங்கங்கே வரும்போது எடுத்துக்காட்டுவோம். இங்கே நாம் வால்மீகி சென்ற வழியே வழியாகக் கதையைப் பின்பற்றி ஆராய்வோம்.

### பாலகாண்டம்.

இராமாயணம் ஏழு காண்டங்களாகப் பிரிக்கப் பெற்றுள்ளது. அவையாவன பாலகண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம், உத்தர காண்டம். இவைகளில் முதலாவதாக பால காண்டத்தை முதலில் ஆராய்வோம்.

இராவணேசுவரனுல் துன்பமடைந்த தேவர்கள் யாவரும் இந்திரரோடும் கான்முகனுலகடைந்து தங்கள் குறையைத் தெரிவித்துக்கொண்டிருக்கனர். அப்போது திருமாலும் அங்கே வந்து சேர்ந்தார். உடனே கான்முகனும் தேவர்களும் அவரை பூமியில் மனிதனுகப் பிறந்து இராவணனைக் கொன்று வரவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். அவ்வேண்டுதலுக்குத் தாமும் இசைந்து அவர்களை நோக்கித்திருமால் "தசரத மன்னருக்கு மகனுகப் பிறந்து இராவணனைக் கொன்று பதினுராயிரம் ஆண்டு வாழ்ந்து பின்னர் இங்கே வருவேன்" என்று கூறினர். அவ்வாறே தசரதனுக்கு மகனுகப்பிறந்தார். இவ்வாறு பிறப்பதற்குக் ஆதாரமான மற்ற காரணங்களையும் ஆராய்வோம். அவை:—

(1) தர்கால் திருமால் பிருகு முனிவருடைய மனைவியைக் கொன்றுவிட்டார். அதனுல் அம் முனிவர் திருமாலை நோக்கி மனிதனுகப்பிறந்து மனைவியை இழந்து வருந்தும்படி சபித்து விட்டார். இது முதற் காரணம். இது வால்மீகி ராமாயணம் உத்தர காண்டம் ஐம்பத்தோராம் சருக்கத்தில்வுள்ளது. அங்கே விவரமாக ஆராய்வோம். இதே செய்தி மகாலக்ஷ்மி புராணம் உபதேச காண்டம் அறுபத்து நாலாம் அத்தியாயத்திலும் கூறப்பெற்றுள்ளது.

(2) சலந்தராசுரனுக்கு மனைவியாகிய பிருந்தையைச் சேரவேண்டும் என்னும் காதல் மிகக் கொண்டதிருமால் அவ்வசுரன் இறக்தமைகண்டு ஏவனுடலில்முழைந்துகொண்டுஅவளின்ப துகர்ந்துகொண்டிருந்தார். சில நாட்களில் அவ்வசுரன் அக்கற்பாரி இன்னுரென அறிக்துகொண்டு, "மாயையினுல் என்னோடு கூடி, அதனுல் பிதர் மனையாளைப் புணரவென்னும் குற்றத்திற்குன்னாயிய எ திருமாலே! உன் மனைவியைப் பகைவன் வஞ்சனையா லெடுத்துப் போகக்கடவன். என் கணவன் உடம்பினைச் சுரங்களால் நீ கொண்டு வந்ததனுலே நீயும் குரங்குகளோடு சேர்ந்து காட்டில் அலையக்கடவாய்" என்று சபித்தான். பின் உடனே அவன் தீக்குளிர்ந்த செட்ட சன் உடலை சாம்பராக்கினுன். இச்செய்தி மகாலக்ஷ்மி புராணம் தக்க காண்டம் இருபத்து மூன்றும் அத்தியாயத்தன்னது. பின் திருமால் அவன் சாம்பலிற் கிடந்து புரண்டனர். அதன்பின் அச்சாம்பலில் மூன்றந்தனையை யணித்து மயக்கம் தீர்த்தனர் என்ப. இது இரண்டாவது காரணம்.

(3) ஒரு பிரதோஷ வேளையிலே திருமால் மனித உடம்போடு திருமகளைப் புணர்ந்துகொண்டிருந்தார். அப்போது சோதனைக்குச் சென்ற அந்புதாக்ஷன் என்னும் வெகணத் தலைவன் அவரை நோக்கி "வீயாடா" என்று கேட்டான். அதற்குக் கொஞ்சமும் வெட்கமின்றி விலகாமல் திருமால் அவன்மேலிருந்தவண்ணமாகவே "கேட் பதுயாடா" என்றனர். இவ்வெறுக்கத்தகுந்த செயலைக் கண்டு மீண்டு அத்தலைவன் இச்செய்தியை கந்திபிராளிடம் தெரிவித்தான். உடனே கந்தி தேவர் அத்திருமாலை பூமியில் இராமனுகப் பிறந்து மனைவியைப் பிரிந்து வருந்தமாறு சபித்தனர். இது செய்தி வெகுசியத்து மூன்றும் அம்சந்த இரண்டாம் காண்டம் நாற்பத்து மூன்றும் சருக்கத்தில் காண்க. அச்செய்யுள் வருவாறு:—

"அவனே நீ யாவனடா வென்ற கேட்டே
னம்புயப்பெண் னைத்தழுவ வீங்க வில்லா
னெவன மாதடன்கூடி பிலச்சை யின்றி
யென்னே நீ யானடா வென்ற கேட்டான்.
கவனமுற மினனர்த்த னென்று கண்டேன்
கருத்தி லவன்றனைத்தன்ள வல்லேனெம்மான்
வெனருன்சே ருனதாணருத்து மீண்டேன்
தேவரிலீதொருபுதமை யவன்பாற் கண்டேன்"

"மன்னவன்றன்மைத்தனு மிராமனுவி
வத்த பிறர் நிடக்கடவனுகு மன்றே"

இது மூன்றுவது காரணம்.

இது போன்ற தொரு செய்தி வெரகியம் 3ம் அமிசம் 2ம் காண்டம் 4ம் சருக்கத்திலும் காணப்படுகின்றது. அதாவது வைகுண்டத்தில் திருமால் பிரதோஷ வேளையாகிய மாலைக்காலத்திலே திருமகளைப் புணர்ந்து கொண்டிருக்க, அங்கே பிருகுமுனிவர் அவரைக் காணச் சென்றனர். அப்போது தடுத்த கருடனைச் சாம்பராக்கி அம்முனிவர் உள்ளே தழைந்தார். அவர் வருவதைக்கண்ட திருமால் நீங்காமல் புணர்ச்சியிலிருந்தபடியே அவரை வாது கிற்கும்படி கைகாட்டித் தடுத்தனர். உடனே பிருகு முனிவர்

"எங்காளு மினிய வந்தி வேளை தன்னி
லேங்கிழையைப் புணர்வரோ ளனக்கப் புத்தி
சொன்னுரா ருன்மத்த முண்டோ வென்று
ளையா தவன்றுன்மா தவினை நோக்கிப்
பன்னுரும் பிரதோடச் தனிலுன்னும்
பகர்த்தனோர் தரிசித்தோர் பரவல் செய்தோர்
தன்னுத நிரயத்திற் புகுவா ரென்று
குழ்தோபத் தாற்சாபஞ் சொல்லிப் போனன்"

மேலே கண்ட சாபங்கள் பலிக்குங் காலம் வர, நிருமால் தேவர்களின் வேண்டுகோளின்படி பூமியில் மனிதனுகப் பிறந்தார். தொடரும்.

டிடக்டாஸ்
அல்லது
துப்பு இரகசியம்
அறியும் கருவி.

இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவன் செய்யும் காரியங்களையும் அவன் அறிந்து கொள்ளாமலேயே இன்னுமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை எகாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவனை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரிதத பக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் ஷே நருவி வீலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வத்தாவன்றிக் கண்டிப்பாய் வி. பி. வில அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம். ஜி. டி. மதுரால்.

# ஆலய வழிபாடு.

கோவை
ஸ்ரீமான் சி எம். ராமச்சந்திரம்
செட்டியார் B A B L அவர்கள்
எழுதுவது

நமது தென்னிந்திய ஆலயங்களில் நடக்கும் சில ஒழுங்கீனக்களைக் குறித்துச் சிறிது ஆராயலாம். திருக்கோபுரத்தை வணங்கச் செல்லும் ஒருவன் கோபுரத்தைப் பார்த்தவுடன் தேங்காய் விழுந்து படியவேண்டும். கோபுரத்தைக் கண்ட மாத்திரத்தில் கடவுள் நினைவு மனதில் விழும். உடனே அன்பினாலே மேலிட்டவனுய் கடவுளை நினைத்து வணங்க முயற்சிக்கிறான். கோயிலின் சுற்று மதில்களும் ஆலயத்தின் அமைப்பும் அவன் மனதில் ஒன்றுக அழுத்தினால். கோயிலின் கடலில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திக்கு மதில்களும், கோபுரவாயிலும் கொண்ட ஆலயம் எவ்விதம் இருப்பிடமாக இருக்கிறதோ அதுபோல உன்னுள் இருக்கும் ஈசனுக்கும் உன் தேகம் இருப்பிடமாக ஆலயமாக இருக்கிறது. இதை நீ அறிந்து கொள் என்று கோயில் வழிபடுத்தோறும் கோபுரமும் மதிலும் காட்டிக்காட்டுகின்றன. ஆகவே கோபுரமும், மதிலும் தாம் இருக்கத்தக்க நன்னிலைமையில் இருந்தாலன்றே ஒவ்விதப் படிப்பினை எடுத்துக்காட்ட வல்லதொழிலைச்செய்யக்கூடும். அனுல் இக்காலத்தில் கோபுரங்களும் மதில்களும் எவ்விதம் இருக்கின்றன. அநேக கோயில்கள் பழுது பார்க்க ஆளில்லாமல் இடிந்து விழுந்தநிலையில் இருக்கின்றன. மதில்கள் மீது மரம், செடி, கொடி புல், பூண்டுகள் முளைத்து வளர்ந்து, அவைகளால் பெறு பிராணிகள் சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன: கோபுரங்கள் இடிந்துவிழுந்த சுத்தப்பட்டுஇருப்பதால் அருகில் உள்ள மதில் இடிந்து அதன் வழியாக பக்தர்கள் உள்ளே செல்லவேண்டியிருக்கின்றது. பிரசித்திபெற்றகோயில்களிலேயே இவ்விதமிருக்குமானுல் ஏனைய பெறு கோயில்களைக் குறித்துச் சொல்லவேண்டியதேன்? தொண்டருட் சிறந்த பெரியதொண்டர் வாழ்ந்த திருச்செங்காட்டங்குடியில் கோபுரம் விழுந்தநிலையில் இருக்க அருகில் மதில் இடிந்த வாயில் செய்திருந்தால் அதைக்காணச் செல்லும் எவன் மனந்தான் நடுங்காது? ஆனுல் இக்கோயிலுக்குச் சொத்து நில், பணவருவாய் இவைகளில் குறைவு கிடையாது. பொருள் எல்லாம் உற்சவாதி ஆடம்பரங்கட்கே செல்லுதலானுல் கோயில் பழுதுபார்க்கத் தோன்றுமோ? போதாக்குறைக்கு நியாயம் தலங்களுக்கு இக்கோயிலுடைய பரிபாலனம் இழுத்தடிக்கப்பட்டிருக்கிறது. நிற்க, வழிபடச்சென்ற தொண்டன் கோபுரத்தை வணங்கித் திருக்குளத்தில் குளிப்பாடச் செல்லுகிறான். எனினில் கூடவுள் வழிபடுகிறவன் உள்ளுய்ம்மையோடு வெளித் தூய்மையும் கைக்கொள்ளல் வேண்டும் அன்றே? நற்காலத்தில் இத்திருக்குளங்கள் எவ்வாறு வாய்த்திருக்கின்றன? அவைகளே கேரில் கண்டு ஒருவன் தானன்றி எவனும், அவைகளைக் குத் திரு என்ற அடைமொழி கூடாதென்றே சொல்லுவான். ஏனெனில் தற்கால மேற்பாவையில் அவைகளை விட்டு 'திரு' நீங்கி விட்டது. அவைகளில் உள்ள நீர் பாசம் பிடித்து அழிந்த பொருள்கள் விழுந்த சாக்கடையினும் கடைகொண்ட நாற்றமுள்ளதாய் விளங்கி நிற்கும். இறங்குதுறைகளோ பாசமும் சேறும் பிடித்து, பல் தலைக்குதல், எச்சில் உமிழ்தல், முகம் கழுவுதல் முதலான செய்கைகளால் அசுத்தமாகிக் கையினுல் நீரை முகக்கவும் அறுவறுப்பான தாகத் தோன்றும். பெரும் புண்ணிய க்ஷேத்திரங்களிலும் இக்கொடுமையைக் காணலாம். திதம்பாத்தில்லைக்கை, மதுரையில் பொற்றமரைக்குளம், ஸ்ரீரங்கத்தில் திருக்குளம் முதலியவைகளைத் தரிசித்தவர்கள் அவைகளின் நிலைமையை என்றும் மறவார்கள். ஆகம நூல்இவ்வித அபரிசுத்த நிலையில்தான் தீர்த்தங்களை வைக்கச் சொல்லி ஏவுகின்றனவோ? என்று பரிபால னத்தாரை வினவவேண்டும். தீர்த்தம் ஆடி உடம்பைத் தூயதாக்கிக்கொண்ட ஒருவன் கோயிலின் பிராகாரத்தை வலஞ் செய்யப் போகிறான். வழிபாட்டின் விதிப்படி வெறுங்காலில் தான் நடந்து போகவேண்டும். ஒரு அடி வைத்தவுடன் கொறுஞ்சி முள் சுறுக்கென்று தைக்கும். மற்றோர் அடியோ புல்லின் மீது மெதுவாகப் படியும். ஆனுல் உடனே ஒரு பூச்சியோ, புழுவோ, தேளோ கொட்டும். இவ்வித நிலையில் பிராகாரங்கள் இருப்பதை யாகமகர்த்தர்கள் அறிந்திருந்தால் வலம்வருவதற்கு தோற் செருப்புப் போட்டுக்கொள்ளலாம் என்று விதியும் ஏற்படுத்தியிருப்பார்கள். இவ்வித நிலைமை நீங்கிப் பிராகாரங்கள் சுத்தமாக இருத்தல்வேண்டுமென்றே தவராச பிரகாசரியான அப்பர் சுவாமிகள் எப்பொழுதும் உழவாரத்தினுற்தொண்டு தாமே புரிந்தவர்களானர். இத் திருத்தொண்டை வேறு யாராலும் செய்வித்தல் கௌரவக்குறைவென்று பரிபாலனத்தார் நினைப்பார்களேயானுல் நம் ஆலயங்களின் ஒழுங்கு எத்தன்மையில் இருக்கிறது பாருங்கள்.

பிராகாரத்தைச் சுற்றிவரும் தொண்டனுக்கு உட்கோபுரங்கள், மண்டபச் சுவர்கள், தளவாடங்கள் கண்ணுக்குத் தென்படுகின்றன. ஈசன் ஆலயங்களின் அமைப்பு ஒழுங்கு என்னே! எங்னே!! என்று வியந்து நிற்கும் அவன் மனத்தில் அவைகளின மீது படிந்திருக்கும் தூசு, குப்பை, ஆல கிழுதுகள், புல்லுருவிகள், இடிந்து விழுமசெங்கற்கள் இவைகளின் காட்சி விளக்குமானுல் அவனது மனநோக்கம் எங்குசெல்லும். பெரும்பான்மையாக வைஷ்ணவக்கோயில்களும் இவ்விளக்கத்தில் சேர்ந்திருக்கின்றன. அப்பர் அவதரித்த திருவாமூரிலும், சுந்தரர் அருள்பெற்ற திருவெண்ணெய்நல்லூரிலும் இக்காட்சியைக் கண்டால் இதற்கு வேறு உதாரணம் வேண்டாம்.

வாழைப் பழத்தோலின் மீதும் சிந்தின பஞ்சாமிர்தத்தின் பருமியின் மீதும் தெரியாமல் கால்வைக்கும்போது (வழுக்கி விழும்போது) மடியிலிருந்தத்தேங்காய் பழங்கள் குங்கு பறித்துப்போகக் கண்ட பழனி சென்ற பக்தன் எவனுக்குத் தான் அச்சமயத்தில் கடவுளின் நினைவு வரும்? இவ்விதம் தொண்டர்களின் மறதிக்குக் காரணமாவார் யாவர்? ஆகமத்தில் சொல்லிய படிக்கும், நடவன் மார்கள் கடந்து கூட்டிய படிக்கும், ஆலயங்களைச் சிரகவைக்காத கொடுமையே யன்றே?

ஆலயவழிபாட்டிற்குச் சென்ற தொண்டன் பிராகாரத்தை வலம் வருகையில், தீர்த்தத் தொட்டியை யணுகி ஈசர நாமஞ் சொல்லி, தீர்த்தம் எடுத்துக் கண்ணுக்கு ஒத்திக் கொண்டு தலையிலுந்தெளித்துக்கொண்டு குடித்தும் விடுகிறன். பரம மூர்த்தியின் மீது விழுந்து ஒழுகிவருவதாகிய அப்பரிசுத்த தீர்த்தம் தான் இங்கே இருக்கத்தக்கது. அதனது அருமை பெருமைகள் அத்தொண்டனுக்கே தெரியும். ஆனுல் இக்காலத்தில் அத்தீர்த்தத்தொட்டியைக் கண்ணுல் கண்டவன் என்றும் மறவான். உலகத்தில் உள்ள சகல வியாதிகளையும் தரத்தக்க கிருமிகள் அவ்விடம் வாசம் செய்யத்தக்கதான நிலைமையில் இருக்கிறது. கற்றமோ வெகு தூரம் அடிக்கும். நீருக்கு வெளிப்போக்கோ கிடையாது. தொட்டியை சுத்தம் செய்வதோ "ஆடிக்கொரு முறை அமாவாசைக் கொரு முறை தான்" கர்ப்பக் கிருகத்தில் எழுந்தருளி இருக்கும் குஞ்சுகளும், அதன் உடம்பிலிருந்து வரும் நில பொருள்களும் அங்கு நிரந்தரமாக வசிக்கும். எலி, பூனை, தேரிஞ்சி, கரப்பான் முகலிய ஜந்துக்களும் அவைகளின் உடம்பிலிருந்து வெளியாகும் நில பொருள்களும், அழுகின பதார்த்தங்கள் முதலிய பல அசுத்தங்களும் அத்தொட்டியின்கண் இருக்குமாயின் அத்தீர்த்தத்தின் மகிமையைப்பற்றி யான் கூறவேண்டியதில்லை! அதன் அன்பு மேலீட்டினுல் உட்கொள்ளுகிறவர்களுக்குச் சிக்கிரமாக மறுமை கொடுக்கவல்ல வல்லமை யதற்கு ஏற்பட்டிருக்குமல்லவா? இத்தீர்த்தத் தொட்டிக்கு எப்பொழுது தான் விமோசனம் ஏற்படுமோ அறியகூடவில்லை.

தொண்டன் பிறகு அர்த்த மண்டபத்துக்குச் செல்லுகின்றன். உள்ளே இருட்டினுல் வழி நன்றுகத் தெரியாது. அதிலும் ஜன நெருக்கடியில் தடுமாறி உள்ளே செல்ல வேண்டியிருக்கிறது. சக்கி விட்டு நிற்பார்களா? கிடையாது. பிராமணர்களாக மட்டும் இருந்தால் உள்ளே சென்று எல்லோரையும் மறைக்கும்படியாக நின்று சேவிக்கலாம். ஸ்ரீயோர்களாயின் இருட்டில் தட்டுத் தடுமாறிக்கொண்டு நிற்க வேண்டியது தான முறை. இருட்டு மயத்தினுல் அங்கங்கே தூரிஞ்சில்கள் தார்சில் ஒட்டிக்கொண்டு தொங்கிக்கொண்டு அவைகளின் அசுத்தமும் நிலத்தில் படிந்திருக்கும். ஜனங்கள் மூச்சுவிட்டுக்கொண்டு இருத்தலினுலேயே ஆகாசம் முழுதும் சூடாகிக் கண்கள் சிவந்து தலைவலியெடுக்க ஆரம்பிக்கும்.

இதன் நடுவில்சுவாமியின் திருமேனியை தரிசிக்கக்கூடாமல் தத்தளிக்கும் தொண்ட

இதன் தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க

## தூத்துக்குடி திரு. சோமசுந்தரம் பிள்ளை

"நவசக்தி"யில் எழுதிய

# "இந்து மதமும் வைக்கம் வீரரும்"

என்ற கட்டுரைக்குச் சமாதானம்.

ஸ்ரீமான் தூத்துக்குடி கா. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் "இந்து மதமும் வைக்கம் வீரரும்" என்பதாக ஒரு வியாசம் 7-12-27 தேதி 'நவசக்தியில்' எழுதியிருக்கிறார். அதற்கு சமாதானமாக பல கனவான்கள் ஆராய்ச்சி மூலமாகவும் மற்றும் பொதுவாகவும் வியாசங்கள் எழுதி பிரசுரிக்க நமக்கு அனுப்பியிருக்கின்றார்கள். நாம் அவற்றை அவ்வியாசம் தோன்றியபத்திரிகைகளுக்கு அனுப்பும்படி எழுதிவிட்டோம். நம்மையும் பிரசுரிக்கும்படி வற்புறுத்தினால் ஒருக்கால் பிரசுரிக்கலாம். ஆனாலும் அவைகள் பிரசுரமாகுமுன்பு நமது சமாதானத்தை தெரிவிக்க விரும்புகிறோம். அவ்வியாசத்தின் சாராம்சத்தை முதலில் சுருக்கமாக குறிப்பிடுவோம்.

1. "நாயக்கர் பேச்சிலும் எழுத்திலும் இந்துமதத்தை மனம் போனவாறு இழித்து கண்டித்து வருகிறார்.....

2. பிரமணரல்லாதார் முன்னேற்றத்திற்கு என்று கூறும் முறையில் அவரது சுற்றறுல் அச்சமூகத்தாருக்கு எவ்விதமதஉணர்ச்சியும் அற்றுப்போகும்.....

3. மத உணர்ச்சியற்று நாஸ்திகம் பரவும்படி செய்வதே இவரது தொண்டாயிருக்கின்றது.....

4 இத்தொண்டின் பயனுப் தேசாபிமானிகள், மாதரபிமானிகள் ஆகியவர்கள் மனம் புண்படுகின்றது.....

5a. இவர் ஆராய்ச்சிசெய்து பேசுகிறாரா

b. அல்லது மக்களை வேறுமதத்திற்காவது விரட்டியடிக்கப் பேசுகிறாரா? என்று எண்ணவேண்டியிருக்கிறது.....

6 (a) பக்தி, மூடநம்பிக்கை என்கின்ற படுகுழியில் என்கின்றார். (b) அப்படியானால் பற்பல அற்புதங்களைச் செய்து உலகத்தை வாழ்விக்கவந்த திருஞானசம்மந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், பன்னிரு ஆழ்வார் முதலியோர்கள் எல்லாம் இக்கப் படுகுழியில் வீழ்ந்தோர்கள் போலும்.....

7. சைவம், வைணவம், சமணம், பௌத்தம், துவைதம், அத்வைதம், விசிட்டாத்வைதம், வீர சைவம் முதலியன இந்து சமயம் என்ற விரிந்த மதத்தின்பாற்படும் என்பது யாவரும் அறிவர். இது நாயக்கருக்கு தெரிந்தும் தெரியாததுபோல் பேசி மக்களை மயக்குகிறார். "இந்து மதம்" என்கின்ற பெயர் எப்படி வந்ததென்பது சுவாமி விவேகானந்தர் சொல்லியிருக்கிறார்.....

8. மத சம்மந்தமான எந்த ஆலயும் பார்க்க யாருக்கும் தடையில்லை. எல்லாம் கடையில் விற்கின்றது. யாரும் நாக்கை அறுக்கவுரட்டார்கள்.....

9. கோவிலை நாயக்கர் கூத்துச்சாலைபோல் நினைக்கின்றார்.....

10. கல் மனதையும் கரைக்கும் படியான சக்தி சில ஆலயங்களில் இருப்பதை நாயக்கர் அறிவாரா.....

11. இக்கலிகாலத்திலும் பல இடங்களில் எத்தனையோ அற்புதங்கள் நடக்கின்றன.

12. விசேஷ காலங்களில் லட்சக்கணக்கான ஜனங்கள் கால்வலி மெய் வலி பார்க்காமல் நடந்துபோய் சுவாமி தரிசனம் செய்து ஆனந்தபரவசமாகின்றதை பார்க்கின்றோம்.....

13. அதை நிவர்த்திக்காமல் இந்து மதம், பக்தி கோவில் முதலிய எல்லாவற்றையும் அழித்துவிட முயல்வது அறிவுடமையாகாது.....

14. கௌதமர் இந்து மதத்திலுள்ள சில குறைகளை உணர்ந்து சில சீர் திருத்தங்கள் செய்து போதித்தார். அதுதான் பௌத்த மதம்.

15. அதுபோல் நாயக்கர் தமக்குத் தெரிந்த சீர் திருத்தத்தைக் கொண்டுவந்து ஜனங்கள் நம்பத்தக்கது இன்னது, அது சரிக்கவேண்டியது இன்னது என்று தெளிவாகச் சொல்லி ஒரு மதத்தை ஸ்தாபிக்கட்டும்....." என்று எழுதுகிறார்.

நமது சமாதானம்:—

அவற்றுள் (1) "நாயக்கர் இந்து மதத்தைக்கண்டிக்கிறார்" என்பது.

ஆம் கண்டிக்கிறோம். இந்த மதம் என்பதாக ஒரு மதம் இல்லையென்றும், இந்து என்கின்ற வார்த்தையே நமது பாஷை அல்லவென்றும், வட சொல்லிலோ மற்றெந்த சொல்லிலோ இந்து என்கின்ற சொல் இல்லையென்றும், (இதைஒப்பாமலும் போகியஆதாரம் காட்டாமலும் இந்த என்கின்ற ஒரு வார்த்தையிருப்பதாக யாராவது வாதாடுவதானாலும்) அது இந்தியாவிலிருக்கும் மனிதரை குறிப்பிடுதன்றும், உதாரணமாக, பங்காளத்தில் இருப்பவன் பங்காளி, குஜராத்தில் இருப்பவன் குஜராத்தி, மலையாளத்திலிருப்பவன் மலையாளி என்பது போலவும், பிரன்சு தேசத்தவனை பிரன்சு என்றும் ஜெர்மனிதேசத்தவனை டச்சு என்றும், ஜப்பான்காரனை ஜப்பானி என்றும், ஜர்மென்காரனை ஜெர்மன் என்றும் அழைப்பதுபோல் இந்து என்பது இக்காட்டு மனிதனை குறிக்கும் சொல்லாகும் என்றும், இந்தியாதேசத்தவன் இந்து என்றும் இந்தியன் என்றும் அழைக்கப்படுவதோடு இந்தியா தேசத்திற்கும் ஆரிய பாஷையில் இந்துஸ்தானம் என்றே வழங்கப்படுகின்றது என்றும், எனவே இந்து என்கின்ற சொல்லானது இந்தியா நாட்டில் வசிக்கின்ற எல்லா மக்களையே குறிப்பிடுவதே அல்லாமல் அது ஒரு குறிப்பிட்ட ஜாதியையோ அல்லது மதக்காரரையோ குறிப்பதல்லவென்றும், அல்லாமலும் தேசத்தின் போரல் மதமேயிருப்பதாகாம் அறியவில்லை என்றும் (இவற்றையும் ஒப்புக்கொள்ளாமலும் ஆதாரம் காட்டாமலும் இதையுமறுப்பதானாலும்) இந்து என்கின்ற பாஷையைப் பார்த்தாலும் அது ஆரிய பாஷையாகவே இருப்பதாலும் அது தமிழ் நாட்டு உச்சரிப்புக்கே பொருத்தமற்றவாகவும் இருப்பதால் அது நமது மக்களுக்கு எவ்வகையிலும் சம்மந்தப்பட்ட சொல்லுமல்ல என்றும் அநேக தடவைகளில் சொல்லியும் எழுதியும் வந்திருப்பதை ஸ்ரீமான் பிள்ளை அறியாரா என்று கேட்கின்றோம். இதையும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், ஆங்கில அகராதிகளில் அதாவது ஆரியர்கள் ஒப்புக்கொண்டு பழக்கத்தில் வைத்திருக்கிற—ஆரியர்களாலேயே எழுதப்பட்ட அகராதிகளிலும், இந்து என்கின்ற பதத்திற்கு அர்த்தமாக இந்தியன், இந்தியாவில் வசிப்பவன், ஆரியன், ஆரியக்கொள்கை, ஆரிய மதம், ஆரியரை பின்பற்றுவோன், பார்ப்பனீயத்தில் நம்பிக்கையுள்ளவன், மகமதிய னல்லாதவன், அதாவது மகமதியர்களுக்கு எதிரானது, என்பது போன்ற பொருள்களே குறிக்கபட்டிருக்கின்றனவே யல்லாமல் நம்மெல்லோரையும் கட்டுப்படுத்தத் தக்க ஒருமதம் என்கின்ற பொருளில் அல்ல.

தவிர இந்து மதம் என்கின்ற வார்த்தையானது ஆரியர்களின் சமயம் பழக்கம் வழக்கம் என்பது முதலியவைகளைக் குறிப்பிடும் வேதம், சாஸ்திரம், புராணம், கதை என்பவைகள் முதலிய எவைகளிலாவது அல்லது தமிழ் மக்களின் பழக்க வழக்கம் என்பது முதலியவைகளைக் குறிப்பிடும் பழந்தமிழ் ஆதாரங்கள் என்பவைகள் எவைகளிலாவது இருக்கதாகவோ, இருக்கின்றதாகவோ யாரவது சொல்லத் கூடுமா? என்று கேட்கின்றோம். ஆகவே பொருளற்றதான ஒரு வார்த்தையை ஒரு சமயம் என்பதாக ஏற்றுக்கொண்டு அதற்கு அரசாங்கமானதும், மனித இயற்கைக்கும், கோமைக்கும் பொருத்தமில்லாததுமான விஷயங்கள் நிரைத்துவைத்திருக்கும் புத்தகங்களை ஆதாரங்கள் என்பதாக வைத்துக்கொண்டு அதைக் கடவுள் சொன்னார் என்பதாக அதனிடம் குருட்டு விஸ்வாசத்தைக் காட்டிக்கொண்டு இருப்பதோடு அதை நமது தலையிலும் சுமத்த வந்தால் அதற்கு நாம் எப்படி சம்மதிக்க முடியும்?

(2) தவிர இப்படிச் செய்வதால் பார்ப்பனரல்லாத மக்களுக்கு எவ்வித உணர்ச்சியும் அற்றுப்போகும் என்பது.

அற்றுப்போனால் குற்றமில்லை. சகல மத உணர்ச்சியும் அற்ற மனிதத் தன்மையான சுயமரியாதை உணர்ச்சி மாத்திரம் வந்தால் போதுமானது. எந்தவிதமான மத உணர்ச்சிக்கும் மனிதன் அடிமையல்ல. மதம் என்பது அவனவன் இஷ்டத்தைப் பொருத்தது. மனிதத் தன்மை உணர்ச்சி வந்துவிட்டால், அல்லது அதற்கு விரோதமாயிருப்பவைகளை அழித்துவிட்டால் அவசியமான உணர்ச்சி வந்தே தீரும். இதற்கு யாரும் கவலைப்பட வேண்டியதில்லை.

(3) நாஸ்திகம் பரவி விடுமே என்று பயப்படுவது.

இந்த இடத்தில் நாஸ்திகம் என்றும்

என்? என்று கேட்கிறோம். கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்று சொல்வதால் நிகமானல் அதைப்பற்றி யாவரும் கவலைப்பட வேண்டியதில்லை. கடவுள் என்பதாக ஒன்று இருக்குமானல் அதை இல்லாமல் செய்துவிடவோ இல்லையென்று எண்ணும்படி செயதுவிடவோ எந்த மனிதனும் முடியாது. அப்படி ஒரு சமயம் எதாவது ஒரு மனிதன் கடவுள் என்பதாக ஒன்று இல்லாமலோ இல்லை என்று எண்ணும்படியோ செய்து விடுவானுல், அப்பொழுது உண்மையிலேயே கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்றதான் அர்த்தமே யொழிய ஒரு மனிதனது செய்கையினுல் கடவுள் இல்லாமல் போய்விட்டது என்பது அசம்பாவித மானதாகும்.

தவிர கடவுள் உணர்ச்சியை ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்குப் புகுட்டவேண்டும் என்று சொல்வதானுல் அப்படிச்சொல்லுபவர் உண்மைக் கடவுளை அறியாதவர் என்றுதான் அர்த்தம் கொள்ளவேண்டும்.

தவிரவும் சூரியன் இல்லை, சந்திரன் இல்லை, என்று ஒரு மனிதன் சொல்லிக் கொண்டுதிரிவானுல் அதன் மூலம் மக்களுக்கு சூரியன் சந்திரன் என்கின்ற உணர்ச்சியற்றுப் போகுமா என்று கேட்கின்றோம். எத்தனையோகோடி வஸ்துக்களில் இரண்டு வஸ்துக்களை எப்படி ஒரு மனிதன் இல்லாமல் செய்யமுடியாதோ அதுபோலவே கடவுள் என்பதாக ஒன்று இருப்பதாய் ஸ்ரீமான் சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் உண்மையில் உணர்வாரானுல் கண்டிப்பாய் அதை மற்றொருவன் அழித்த விடுவானென்றோ, மக்களுக்கு அவ்வுணர்ச்சியில்லாமல் செய்து விடுவான் என்றோ அவர் பயப்படுவதாகச் சொல்வது கேலிக் கூத்தேயாகும்.

4. நாயக்கர் இப்பிரசாரத்தால் தேசமத அபிமானிகள் மனம் புண்படுகின்றது என்பது.

இதற்கு நாம் என்ன செய்ய முடியும்? இமயமலை பனியால் மூடப்பட்டு குளிரால் அவஸ்தைப் படுகின்றது என்று அதற்கு யார் கம்பளிப் போர்வையைப் போற்றி, குப்பை செத்தைகளை அரித்துப்போட்டு கொடுப்புவைத்து குளிர்காயவைக்கமுடியும்? எரிமலை நெருப்பு ஜ்வாலையில் கஷ்டப்படுகின்றது என்று அதற்கு யார் கண்ணீர் ஊற்றி குளிர்ச்சி செய்ய முடியும்? அதுபோல அவரவர்கள் தன்மைக்கு ஏற்ற பலனை அவரவர் அடையவேண்டியதுதானே ஒழிய வேறில்லை.

பேசாமல் உட்கார்ந்து கொண்டிருக்கும் எந்த தேசமாவது அபிமானியையும், யோக்கியமாய் நடந்துகொள்ளும் எந்த தேச மத அபிமானியையும் நாம் கண்டிலும் நிகழ்ப்பதில்லை. நம்மால் அவர்கள் மனம் புண்படவும் நியாயமில்லை. அப்படிக்கில்லாமல் மக்களை ஏமாற்றவென்றே வெளிவரும்போது மாத்திரம் நாம் சும்மா இருக்கமுடியவில்லையே ஒழிய மற்றபடி நமக்கு யாசனையையும் புண்படுத்த நினைத்து இத்தொண்டை நாம் ஆரம்பிக்க வில்லை என்பது உறுதி.

5ஆ நாயக்கர் ஆராய்ச்சி செய்து பேசுகின்றார் என்பது.

நாம் 10-வது வயதிற்கு மேல் எத்தப் பள்ளிக்கூடத்திலும் படிக்க வில்லை. நமக்கு புத்தக ஆராய்ச்சி இல்லை. நம் சக்திக்குள்ள அறிவு என்பதைக் கொண்டு நடுகில் என்ப திலிருந்து ஆராய்வதன் மூலம் அறிவதும், ஆராய்ச்சிக்காரர்கள் என்பவர்களை சந்திக்க கேர்ந்தபோது கேட்டு அறிவதுதானே ஒழிய வேறில்லை என்பதைக் கண்ணியமாய் ஒப்புக்கொள்ளுகிறோம்.

b இவர் வேறு மதக்களுக்கு மக்களை அனுப்ப முயற்சிக்கின்றார் என்பது.

மதம் என்பதாக ஒன்றை நித்திய பொருளென்றோ, தத்துவப்பொருளென்றோ நாம் கருதுவதில்லை. மதம் என்பது எதுவும் ஒரு மனிதன் அல்லது சில, பல மனிதரின் அபிப்பிராயம் என்பதாகவே கருதுகிறோம்.

தவிர அது எவ்வளவு வேண்டுமானுலும் தோன்றவும் மறையவும் கூடியதே தவிர நிலைத்ததல்ல. அது ஒரே மனிதனின் அடிக்கடி மாறுபட்ட அபிப்பிராயக்களாகவும், பலமனிதர்களின் ஒன்றுபட்ட அபிப்பிராயங்களாகவும், பல்காலவ்களில் பல மனிதர்களின் பலமாதிரியான அபிப்பிராயங்களாகவும் இருக்கலாம். மதமானது எந்த மனிதனையும் தனக்கு அடிமைப்படுத்தத் தக்கதல்ல. ஒரு மனிதன் அவன் வாழ்காளில் பல மதத்தை தழுவலாம்; பல மதத்தை உண்டு பண்ணலாம்; பலமதத்தை நிராகரித்தலாம்; பல மதத்தை அழிக்கலாம். இதனுலெல்லாம் ஒரு மனிதன் பாவியாகிவிடமுடியாது, கெட்டவனும் ஆகிவிட முடியாது. ஆகவே எந்த மனிதனை எந்த மதத்திற்கு போரும்படி யார் சொன்னலும் அதில் ஒரு குற்றமும் இல்லை. அன்றியும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு மதம் இருக்க வேண்டியதோ கற்பிக்கவேண்டியதோ அவசியம் என்பதாக நாம் நினைக்கவில்லை.

ஏனெனில் அறிவுள்ள மனிதனுக்குத் தனதுவாழ்க்கைக் கேற்பகொள்கைகளை ஏற்படுத்திக்கொள்ளத்தெரியும், தெரிந்ததான் வருகிறது.

அறிவில்லாத மனிதனுக்கு இன்ன மதம் தான் சொந்தம் என்று சொல்லவோ அவன் இன்னமதத்தில்தானிருக்கவேண்டும் என்று சொல்லவோ யாருக்காவது அதிகாரமிருப்பதாகச்சொல்லுவதானது,கோழிக்குஞ்சுக்கு நாக்கைக்கொண்டு போக கருடனுக்கு பாத்தியமா, கழுருக்குப்பாத்தியமா, இராஜாளிக்குப் பாத்தியமா என்று முடிவு செய்யும் நியாயத்தைப் போன்றதுதான் என்பதே நமதபிப்பிராயம்.

மதமோ சமயமோ அவ்வக்காலங்களில் ஏற்பட்ட மனிதர்களால் அவ்வக்காலங்களின் நிலைக்குத்தக்கபடி அவ்வவ்விடத்திய சீதோஷ்ண முதலிய கால நிலைக்கு ஏற்றுப் போல் நிர்ணயமாக்கப்பட்டதே ஒழிய எக்காலத்திற்கும் எல்லா மனிதர்களுக்கும் எல்லா இடத்திற்கும் எல்லா நிலைக்கும் இதுவே தான் ஏற்றது என்பதாக ஏற்பட்டதல்ல என்பதே நமதபிப்பிராயம். ஆகவே காலம் இடம்,மக்களின் அறிவுநிலை இவைகளுக்குத் தக்கது போல் தானுகவே மாறிக்கொண்டு தான் வரும். இதைப்பற்றி யாரும் சிந்திக்கவேண்டியதில்லை.

6. மூட பக்தி மூட நம்பிக்கை என்கின்ற படுகுழி என்பது.

இதில் மூட பக்தி மூட நம்பிக்கை என்று சொல்வதைப்பற்றியாரும் கஷ்டப்படவேண்டியதில்லை. மூடபக்தி மூடநம்பிக்கை என்பதின் கருத்து என்ன? ஒரு மனிதன் தன் அடைய நடவடிக்கைகளைப்பற்றி கவலை எடுத்துக்கொள்ளாமல், தனக்கு இன்ன இன்ன காரியங்கள் ஆகவேண்டும் என்று நினைத்துக்கொண்டு ஒரு கடவுளை வணங்குவதும், அதன்பெயர் உருவம் குணம் சக்தி இவைகளை கட்டுப்படுத்துவதும் மூட பக்தி என்பதே நமது அபிப்பிராயம். அதோடு நாம் கடவுளுக்கு இன்னது செய்தால் நமக்கு இன்னது கிடைக்கும் என்கின்ற வியாபார நோக்கத்துடன் செய்யும் காரியங்கள் எதுவும் மூட நம்பிக்கை என்பதே நமதபிப்பிராயம்.

அதுவும் தவிர சுவாமி காரியம் நடக்க வேண்டும், சுவாமியைப்பற்றி மக்களுக்கு அறிவிக்க வேண்டும், சுவாமிக்கு இன்னது இன்னது செய்யவேண்டும், சுவாமியைத் தோத்திரம் பண்ண இன்ன இன்ன மாதிரி இருக்க வேண்டும் என்பதுவுள் போன்ற தெல்லாம் மூட பக்தி மூட நம்பிக்கையில் பட்டது என்பதே நமதபிப்பிராயம்.

அன்றியும் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் காரியத்தின் தன்மையை கவனிக்காமல், சுவாமி சாப்பாற்றுவார், சுவாமி கொடுத்துவிடுவார், சுவாமிக்கு பொருத்தமாக இருக்கவேண்டும், சுவாமி அறிய சொல்லுகிறேன், சுவாமி தலையில் பாரத்தைப் போட்டு செய்கின்றேன் என்பது போல ஒவ்வொன்றையும் சுவாமி தலையில் போடுவது ஆகிய விஷயங்கள் எல்லாம் மூட பக்தி மூட நம்பிக்கை என்பதே நமதபிப்பிராயம்.

b. அப்படியானுல் பல அற்புதங்கள் செய்து உலகத்தை வாழ்வித்த அப்பர் சுந்தரர் முதலிய நால்வர்களும் ஆழ்வாராதிகளும் மூட பக்தி படுகுழியில் விழுந்தோர்களா என்பது.

அவர்கள் எப்படி இருந்தாலும் நமக்கு என்ன. முதலாவது அவர்களைப்பற்றிய தை நமக்குத்தெரியாது. தவிர அவர்கள் நடவடிக்கைகள் சாதாரண மனிதத்தன்மைக்கு மீறினதாக சொல்லப்படுகிறது, அதை நாம் நம்புவதால் பயன்என்ன? நம்பாததால் நஷ்டம் என்ன? யார் இருந்து அந்த சமயம் பார்த்தவர்கள்? அந்தக்கால மக்கள் அறிவு மூன சக்தி ஆகியவைகள் எப்படி இருந்தது? இவைகள் எல்லாம் விவகாரத்திற்கு இடமில்லாமல் சொல்லக்கூடியதாயிருந்தால் நம்புகின்றவர்கள் நம்பட்டும். மலே சமுத்திரமாக மாறியிருக்கின்றது, சமுத்திரம் மலையாக மாறியிருக்கின்றது, காடு காடாயிருக்கின்றது, காடு காட்டாயிருக்கின்றது என்கின்றார்கள்? அப்படியிருக்கையில் இவைகள் எங்கு எப்போது நடந்தது என்பதும் எப்படி தெரிந்ததென்பதும் சுலபத்தில் முடிவு செய்யக்கூடிய காரியமல்ல. உதாரணமாக,

முதலையுண்ட பாலனை வாவமைத்ததை சொல்லும்போது அந்த காலத்தை முதலை எப்படிப்பட்டது, குழந்தை எப்படிப்பட்

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

## மலாய்நாட்டிலும் கோயில் பார்ப்பனரின் அக்கிரமம்.

16-12-27 தேதி வெள்ளிக்கிழமை காலையில் கோலாலம்பூரிலிருந்த சரீக ஆரோக்கிய மாதின் பெருட்டு பினாங்கில் கடற்கரற்று கொள்ள வந்திருக்கும் கோலாலம்பூர் டாக்டர்திரு. வில்லலிக்கம்அவர்கள் இவ்விடத்திலுள்ள சிவன் கோவிலுக்குச்சென்று பெருமாளேவழிப்படச் சென்றவர் அவ்விடத்திலுள்ள அர்ச்சக பார்ப்பனனிடம் 5 வெள்ளி பெறுமான கோட்டைக் காட்டி அதற்குச்சில்லரை இருக்கிறதாவென்றுகேட்ட தற்குப் பார்ப்பனன் இருக்கிறது தாருங்கள் எனப் பெற்றுக்கொண்டான். பிள்ளையவர்கள்கோட்டை அவனிடம்கொடுத்துஅர்ச்சனை செய்துவிட்டு மீதியைத்தரும்படி கேட்டார். அப்பார்ப்பனன் அந்த கோட்டை பெற்றுக் கொண்டு அப்படியே ஆகட்டுமென திரு. டாக்டர் பிள்ளையவர்களை கர்ப்பக் கிருஹத்திற்கு வெளியில் கற்பிரிருக்கு மிடத்திலிருத்திவிட்டு தான் உள்ளே சென்று வாய்க்கு வந்ததை தப்போ சரியோ ஒரு நிமிடம் உளறிவிட்டு கற்பூரம்கொளுத்தி ஒரு சுற்று சுற்றியதும் அதை வாயினால் ஊதி அணைத்துவிட்டு வெளியில் வந்து பிள்ளையவர்களை அம்மன் கோவிலுக்கும் சுப்பிர மணியர் கோவிலுக்கும் அழைத்துச் சென்று முன் போலவே செய்துவிட்டு கடைசியாக அர்ச்சக பார்ப்பனன் பிரசாதம் கொடுக்கும்போது 20 காசுமெதக்கில் 2ம்பக்கு 2ம் பழம் 2ம் கொடுக்க வந்தான். திரு. டாக்டர் பிள்ளையவர்கள் இந்தப் போசாசைப் பேப்பிடித்து சுயகல பார்ப்பனின் ஆடாத செயல்களைக் கண்டு மனம் பொருதவராய் அவனிடம் ஒன்றும் பெற்றுக் கொள்ளாமல் திரும்பிவந்து விட்டார்கள். இவ்விடத்தில் ஒரு வெள்ளி என்றால் நம்ம ரூபாயில் 1-9-0 ஆகிறது. 5 வெள்ளிக்கு ரூ. 7-13-0 ஆகிறது. தேங்காய் பழம் வைத்து அர்ச்சனைசெய்ய இவ்விடத்தில் 10 காசு என்று ஒரு திட்டம் வரையறுக்கப் பட்டிருக்கிறது. 10 காசு என்றால்ரூ0-2-6. மூன்று கோவிலுக்கும் சேர்த்து திரு. பிள்ளையவர்களிடம் பார்ப்பனன் பெறவேண்டியது ரூ. 0-7-6 அதாவது 30 காசுதான். இதற்கு இப்பார்ப்பனன் பிள்ளையவர்களை அங்கிய காட்டார் வனஎண்ணி 4வெள்ளியும் 80காசுகம்எடுத்துக் கொண்டு 20காசுமட்டும்மீதினைக்கொடுத்த தணிகரமானசெயலை என்னென்றுச் சொல்வது.

உண்மை விளம்பி.

## ஸ்ரீ முத்துக்குடி சைவசித்த ந்த சபை.

இச்சபையின் 44-ம் ஆண்டு விழா, மீசம் மார்கழித்திங்கள் 16,17-ம் நாட்களில் நடைபெறும். அவ்விழாவின் போவைக்கு வாலாஜாபேட்டை சரகம் பள்ளிக்கூட டிப்டி இன்ஸ்பெக்டர் திரு. ஆ. சச்தொனத்தம்பிள்ளை பி. ஏ. எல். டி. அவர்கள் தலைமை வகிக்க அன்புடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அன்பர்கள்வந்து விழாவினைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

காரியதரிசி.

## புதுப்பாளையம் காந்தி ஆசிரமத்தின் அறிக்கை.

இரண்டரை ஆண்டு உற்பத்திரூ. 226000
ஒரு வருஷத்திய லாபம் ,, 17000

இந்த ஆஸ்ரமமானது ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியாரின் மேல்பார்வையில் தவக்கப்பட்டு 1925 ல் வேலை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பம் முதற்கொண்டு கதர் அபிவிருத்தியில் மிகவும் முற்போக்கடைந்திருக்கின்றது. நமது பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டஅதன் அறிக்கைப்பத்திரத்தில் அகில இந்திய கதர் போர்டாரால் கடனுக் கொடுக்கப்பட்ட 40000 ரூ மூலதனத்தைக்கொண்டு இந்த இரண்டரை வருஷத்தில் 226064 ரூ பெறுமானமுள்ள கதரை உற்பத்தி செய்திருப்பதாகத் குறிப்பிடப்பட்டிருப்பதுடன் உற்பத்தியான கதரின் விலைமதிப்பில் 100க்கு 37 ரூ பஞ்சு சாயம் ஆகிய வைகளுக்கும் 28 ரூ தாற்போருக்கும் 26 ரூ நெய்வோர்களுக்கும் 6 ரூ தொண்டர்களுக்கும் 3 ரூ இதரசெலவுகளுக்கும் சேர்த்திருக்கிறதாக குறிப்பிட்டிருக்கிறது. சென்ற 1-10-26 முதல் 30-9-27 வரை ஒரு வருஷத்தில் ரூ 16911.1-10 லாபம் கிடைத்திருக்கிறதாக தெரிகிறது.

தவிர சென்ற ஒரு வருடமாக ஆஸ்ரமத்தில் ஒரு சிறு வைத்திய சாலையும் ஏற்படுத்தப்பட்டு கடந்து வருகிறதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவைகளை பார்க்கையிலும் மகிழ்ச்சியடையின்றோம்.

கதர் அபிவிர்த்தியில் கவலையுள்ள எவரும் இவ்வாஸ்ரமத்தின் அறிக்கையைப் பார்த்தால் மகிழ்ச்சியடையாமலிருக்க முடியாதென்றே சொல்லுவோம்.

## கும்பகோணம் பார்ப்பன நாகரீக முதிர்ச்சி.

### தெருவில் பேண்கள் நடனம்.

சென்ற 14-12-27ல் இவ்வூரிலுள்ள பல பார்ப்பன பெரிய கும்பங்களிலுள்ள 9 வயது முதல் 16 வயதுவரையிலுள்ள பல பெண்கள் அலங்கரித்துக்கொண்டு ஆடல், பாடல், கோலாட்டம் முதலியவைகளை சென்ற ஒரு மாதமாக ஒவ்வொரு இல்லத்திலும் கடித்து சுமார் 200, 300 ரூ. வரையில் வசூலித்துக்கொண்டு இதுவரையில் நடைபெறாத ஓர் காட்சியை அடியிற் கண்டவாறு இன்று நடத்தினார்கள்.

பல இளம் பெண்களும், பருவமடைந்த பெண்களும் முகத்தில் சோல் பவுடர், உயர்ந்த வாசனை சென்டு முதலியவைப் பூசி அழகுசெய்து கொண்டு, பல பார்ப்பன வக்கீல்களும், பெரிய உத்தியோகஸ்தர்களும், வந்தீகளும் புடைசூழ, பாண்டு வாத்தியம், மேளவாத்தியம் இவ்வும் பலவித மான வான வேடிக்கைகளுடன் ஒவ்வொரு சத்தியிலும் நின்றகொண்டு சிறிர், ஆடல்,பாடல் கோலாட்டம், பின்னல் முதலிவைகளைப் அப் பார்ப்பனப் பெண்கள் கடிக்கவும் டை பார்ப்பன பெண்களின் தாய்மார்கள் பின் பாட்டுகள் பாடவும், இன்னும்பலதூர்ப்பாட்டுக்களுடன் வர்வலம் சென்றார்கள். நாகரீகம் முதிர, முதிர வெள்ளையர்களேப்போல் (பால் ஆட்டம்) ஆணும் பெண்ணும் சேர்ந்து ஆவேச பழக்கத்திற்கு வந்து விடும்போல் இருக்கிறது. அந்தோ! என்னே பாரப்பன நாகரீகத்தின் முதிர்ச்சி!

## ராவ்பஹதூர். இராமனுதன் செட்டியாரவர்களின் ஞாபகச்சின்னம்.

காரைக்குடி என்னும் ஸ்தலத்தில் தனவைசிய குலத்திலுதித்த ராவ் பஹதூர் எஸ். எ. எஸ். ஆர். எம். இராமனுதன் செட்டியார் அவர்கள் நமது தஞ்சைமாகருக்கு வந்து சுமார் 12 வருஷகால மாகிறது. இக்காலத்திற்குள் இக்கனவான் இக்கு ஓர் பாங்கு ஸ்தாபித்து, அதன்மூலமாகத் தமது வியாபாரத்தை வீருத்திசெய்திருப்பது ஓர் புறமிருக்க, பொது ஜன நன்மையை நாடிப் பல கவுரவஸ்தானங்களையும் வகித்வ்ளார்.

சிலகாலம் தஞ்சையில் ஆனரெரி மாஜிஸ்திரேட்டாகவும், முனிசிபல் கவுன்சிலராகவும், தேவஸ்தான கமிட்டி மெம்பராகவும், திருவாரூர் தேவஸ்தான போர்டு பிரசிடெண்ட்டாகவும் இருந்து வந்தனர். இப்போதும் தஞ்சை தேவஸ்தான போர்டு பிரசிடெண்டாகவும் டிஸ்டிரிக்ட்போர்டு தாலுக்கா போர்டு மெம்பராகவும், வர்த்தக பாங்கு டைரெக்டராகவும், ஸ்ரீ சுதர்சன சபா பிரசிடெண்டாகவும், இராமனுதபுரம் ஜில்லா தேவஸ்தான கமிட்டி மெம்பராகவும், காரைக்குடி ஆனரெரி மாஜிஸ்திரேட்டாகவும் இருந்து வருகின்றனர். ஆகவே இக்கனவானை இத்தென்னட்டில் அறியாதாரொருவருமிலர். இவரது குணநிசயங்களை நன்கு மதித்துக் கவர்ன்மெண்டாரும் இவருக்கு "ராவ் பஹதூர்" என்ற பட்டமும் கொடுத்திருக்கின்றார்கள்.

முக்கியமாய் இவரது பெருந்தன்மையையும் உதாரத்துவத்தையும் செவ்வனே அறிந்திருக்கும் இத்தஞ்சைகார் வாசகரின் உள்ளத்தைவிட்டு இவரது ஞாபகம் அகலாது என்னென்றைக்கும் நீலத்திருக்குமாறு நமது செட்டியாரவர்கள் தம் சொந்த ஜவேஜிலிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய் செலவுசெய்து தஞ்சையில் ஓர் பெரிய ஹால் கட்டுவித்து. அதற்கு "ராவ் பஹதூர் ராமனுதன் செட்டியார். ஹால்" எனத்திருநாமம் சூட்டி, அதன் திறப்பு விழாவை தஞ்சை டிஸ்டிரிக்ட் கலெக்டர் கனம் இராமமூர்த்தி அவர்களைக்கொண்டு கானது பிரபவ வருஷம் கார்த்திகை மாதம் 29 தேதி புதவாரம் மிக்க விமரிசையாய் நடத்திவைத்தனர்.

"ராமச்சந்திரன்"

## கணித சோதிடம்

பரிதி கணிதப்படி கணிதஞ்செய்து பலன் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் தாட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஜாடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி ஜாதகன் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னுசென்று மனது கலைமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூல்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக சகலையாவது நடிதம் எழுதும்போதையாவது தெரிவியுங்கள்.

நே. ஜோதிடம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

இடமின்மையால் இவ்வாரம் சில முக்கிய விஷயங்கள் பிரசுரிக்க முடியாததற்கு வருந்துகிறோம்.



அஞ்சுதலிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு ருது
னெனத்தையும் தவிர்ப்பாயாயில்
செய்தவம் வேறெறண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஹூ மார்கழி 10-உ

## சென்னையில் ஏமாற்றுந் திருவிழா.

இவ்வாரத்தில் சென்னையில் மக்களை ஏமாற்றுந்திருவிழாக்கள் பல ஆடக்கப்போவதாக விளம்பரங்கள் எங்கு பார்த்தாலும் பறக்கின்றன. இதைக்கண்டு அநேக ஆயிரமக்கள் வெளியூர்களிலிருந்து சென்னைக்கு போகவும் கூடும்; சர்க்கார் காரியாலயங்களுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் விடுமுறை காளானகர்களும், வக்கீல்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும்ஓய்வுகாலமானதாலும்வியாபாரிகளுக்கும் வேறு ஒழிக்க காலமானதாலும் வியாபாரிகளுக்கும் வேலை இல்லாத காலமானதினாலும் ரயில் சத்தமும் இதை உத்தேசித்து குறைக்கப் பட்டிருக்கிறதினாலும் இம்மக்களை அவ்விளம்பரங்கள் கலபமாக கவர்ந்து விடுவதில் அதிசய மொன்றுமில்லை. இம்மக்கள் அல்லாத பிரபுக்களுக்கும் சக ராசிகளுக்கும் இம்மாதிரி ஒரு சந்தர்ப்பம் கிடைப்பதே அறிதானதால் அவர்களும் இதில் கலந்து இக்கூட்டத்தில் காணப்படுவதில் அச்சரியமுமில்லை. ஆனால் இவ்வேமாற்றுந் திருவிழாக்களின் நிர்வாகிகள் யார்? கொள்கைகள் என்ன? அதனால் மக்களுக்கு ஏற்படும் பலன் என்ன? என்பவைகள் நான் இதை கவனிக்கத்தக்கது.

இத்திருவிழாவின் விளம்பரத்திற்கு பங்கு எடுத்துக்கொள்ளாத பத்திரிகைகளே நமது நாட்டில் மிக மிக சொற்பம் எனினில் மனிதன் இது சமயம் நம் நாட்டில் வாழவும் பத்திரிகைகள் நடைபெறவும் இத்திருவிழாக்களின் தத்துவமே ஜீவாதாரமாய்ப்போய் விட்ட தால் இவ்விளம் பரத் தொழிலில் இருந்து விலகுவது அநேக பத்திரிகைகளுக்கும் பத்திராதிபர்களுக்கும் கலபமான காரியமல்ல. ஆகலால் அதன்பல னாக குறைந்த அளவு 10 அல்லது 15 ஆயிரம் மக்களுக்காவது குறையாமலாவது வெளி நாடுகளிலிருந்தும் வெளி ஊர்களிலிருந்தும் சென்னைக்குப்போவார்கள் என்பது உறுதி. இவர்களுக்கு ஏற்படும் ரயில் சார்ஜ் போக்கு வரத்து செப்பந்தி சில்லரை சாமான் வேடிக்கை பார்த்தல் முதலிய செலவுகள் குறைந்தது 15,20 லக்ஷம் ரூபாய்க்கு குறையாது என்றே சொல்லலாம். இத்திருவிழாக்களின் நிர்வாகிகளோ படித்தவர்களும் முதலாளிகளும் என்றுதான சொல்லவேண்டும். இவர்களது கருத்தோ உத்தியோகம்பார்ப்பதும் பணம் சம்பாதிப்பதுமே யல்லாமல் வேறொன்றிருக்க நியாயமில்லை.

காட்டில் எப்படி வியாபாரம் விர்த்தியாகி தக்கலாபம் கிடைப்பதற்கு என்ன வியாபார சங்கங்கள் இருக்கின்றனவோ விவசாயம் பெருகி கல்ல பலன் உண்டாவதற்காகவும் விவசாய சங்கங்கள் இருக்கின்றனவோ மற்றும் ஒவ்வொரு தொழிலுக்கும் உத்தேசத்திற்கும் எப்படி ஒவ்வொரு சங்கங்கள் இருக்கின்றனவோ அதுபோல் ஆங்கிலம் படித்தவர்களுக்கு உத்தியோகங்கள் பெருகவும், அதனால் கல்ல பணம் சம்பாதிக்கவும்கருதி படித்தவர்களால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட சங்கமே காங்கிரசாகும். இதை அறியாத அறிவாளி நமது நாட்டில் இருப்பான் என்று சொல்லவே முடியாது ஆனால் மற்ற சங்கங்களுக்கு பொது ஜனங்கள் சம்மத்தமில்லாமல் இருக்கும்போது காங்கிரசு என்கின்ற உத்தியோகம் சம்பாதிக்கும் சங்கத்திற்கு மாத்திரம் ஏன் பொது ஜனங்கள் சபமத்த மேற்பட்டது எனகின்ற கேள்வி பிறக்கலாம். அப்படியானல் அது சரியான கேள்விதான். மற்ற சங்கங்களுக்கு பலன் ஏற்படுவது அத்தச் சங்கங்களின் முயற்சியினுலேயே அல்லாமல் மற்றெருவர் கொடுப்பதால்ல. ஆனல் உத்தியோகவிஷயமோ அப்படியல்ல, உத்தியோகம் வேண்டுமென்று கேட்பது மாத்திரம் போதாது. சர்க்காரையும் உத்தியோகங்களுக்கு உற்பதிபண்ணும்படிக்கும் தங்களுக்கு கொடுக்கும்படிக்கும் செய்யவேண்டும். அதற்குஏற்படும்செலவை பொது மக்கள் பொருக்கவேண்டியிருக்கிறபடியால் பொது ஜனங்கள் தகாருக்கு வாமனும் இருக்கவேண்டும். ஆதலால் பொது ஜனங்கள் கேட்பதை பேல கேட்பதற்கும் பொது ஜனங்களின் பிரதிநிதிகள் என்பது போல அடைவதற்கும் வழி ஏற்படுத்த வேண்டியது அவசியமாயிருக்கின்றபடியால் பொது ஜனங்களின் இதில் கலரும்படி செய்யத்தக்கசுழ்ச்சிகளை செய்யவேண்டிய அவசியமும் இக்கூட்டத்தாருக்கு ஏற்பட்டுவிட்டது. அதற்கு ஏற்றுப்போல் படித்த கூட்டத்தார்களைடையே அதிகாரமும் செல்வாக்கும் இருக்கிறபடியால் இதற்கு எதிர்ப்பு இல்லாமல் செய்வதிம கலபமாய் விட்டது. அதோடு படிப்பு இல்லாதவர்கள் எங்கிலாறு கூட்டத்திலும சிலருக்கு இதனுல் ஜீவனம் கிடைக்க இப்பொழுது வழி ஏற்பட்டு விட்டதால் அவர்களில் சிலரும் இதில் கலர நேர்ந்தால் பொதுஜனங்களும் நமபி கலந்துகொள்ள இடமுண்டாய் விட்டது. இவ்வளவு தானே தவிர இதனுல் தேசதநிதிகோ மக்களுக்கோ எவ்வித பலனும் ஏற்பட்டதமில்லை ஏற்படப் போவ்தமில்லை என்று தைரிய மாய்ச் சொல்வோம். ஆகவே இம்மாதிரி உத்தியோகம் சம்பாதிக்கும் சங்கமாகிய காங்கிரசின் பலனுல் படித்த கூட்டத்தாருக்கு அரசாங்க உத்தியோகங்களும் அரசாங்க நீதி நிர்வாகங்களால் பிழைக்கும் வழிகளும் அதிகப்பட வேண்டியிருந்ததால் படித்த கூட்டத்தார்மற்றமக்களின் பிழைப்பைப் பற்றியோ தொழிலைப் பற்றியோ ஒரு நிதானம் கவனியாமல் பொது மக்களையும் சேர்த்துக்கொண்டு தங்கள் காரியத்திலேயே கண்ணும் கருத்துமாயிருந்ததால் மற்ற தொழில் பிழைப்புகள் எல்லாம் அடியோடு மறைந்து போகவும் கேரிட்டு இது சமயம் மனிதனின் வாழ்க்கைக்கு உத்தியோகம் என்கின்ற ஒரே மார்க்கம் தவிர வேறு மார்க்கம் இல்லாமல் போய்விட்டது. வேறு எதாவது இருப்பதாய் கருதினுல் முதலாளிகள் மேலும் மேலும் முதலாளி ஆகத்தக்க வியாபாரமும் ஒரு மார்க்கமாய் இருப்பதாகச் சொல்லலாம். அதுவும் பணக்காரனுக்கு ஏற்றதாய்ப் போய்விட்டதால் யந்திர மயமாய் விட்டதால் வியாபாரத்தின் பலனும் சாதாரண மனிதனுக்கு ஒரு பலனும் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

விவசாயமும் அதுபோலவே. உணவுப் பொருள்களாக விவசாயம் செய்யப்படுவது பெரிதும் மாறி மேல்நாட்டுத் தொழில் நிறத்திற்கு உதவும்படியான மூலப் பொருள்களாய்ப் போய்விட்டதால் விவசாயக் காரனுக்கு உணவுப் பொருள் கிடைப்பதற்கு மார்க்கமில்லாமல் பணமாய் கிடைக்க கேரவும் அதை அவன் பாழாக்கத் தகுந்த பல வழிகளும் நிலைமைகளும் தாராளமாய் ஏற்படவும் அந்நிலை மூலம் அப் பணத்தை சீக்கிரத்தில் இழந்து விட்டுத் தவிக்கவும் இவைகளிலும் இடமில்லாதவர்களுக்கு அடியோடு வேறு மார்க்கங்கள் இல்லாமல் மக்கள் கூட்டம்கூட்டமாய் நாட்டை விட்டு வேறு நாட்டுக்கு வயிற்றுப் பிழைப்புக்காக கூலிகளாய் போகவுமே ஏற்பட்டு விட்டது. ஆகலே இதுதான் இந்திய காங்கிரசின் பலன், இதை ஒருவாவது சிந்தித்துப்பார்த்து இக்கொடுமைகளை ஒழிக்க முயலுவதையே காணும். அன்றியும் இப்படித்த கூட்டத்தார் மக்களையும் நாட்டையும் ஏமாற்றி இப்படி பாழ் பண்ணுகிறார்களே என்கின்ற கவலையும் யாருக்குமே கிடையாது. மகாத்மா என்னும் ஸ்ரீ காந்தியவர்களே இப்புரட்டுக்கு உதவிசெய்து வாழ வேண்டிய அவசியத்தில் வீழ்ந்துவிட்ட பிறகு இனி யாரை நாம் குற்றம் சொல்வது என்பது விளக்கவில்லை.

கொஞ்ச காலத்திற்கு முன் மாயவரத்தில் முன்சிப்பு வேலை பார்த்த ஸ்ரீ வேதநாயகம் பின்னர் அவர்கள் ஒரு உபமானம் சொல்லி இருக்கிறார். அதாவது ராயனை சதை இல்லாத வெறும் எலும்பை கடித்துக் கொண்டிருக்கும் பொழுது அவ்வெலும்பின் முனைகள் அந்ராயின் பல் ஈறுகளில் பட்டு அதனுல் வரும் இரத்தத்தை எலும்பிலிருந்து வரும் சாரமாக நினைத்துக்கொண்டு விடாமல் எலும்பைக் கடித்துக் கொண்டேயிரு

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூட்டம்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் கூட்டமும் அதில் கடந்த விஷயங்களும் 'தமிழ் நாடு' பத்திரிகையில் பார்த்தால் விளங்கும்.

எவ்வளவு தந்திரமாகவும் ஒழுங்கினமாகவும் தேர்தல்கள் கடந்தி இருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும்போது காங்கிரஸ் தலைவர் என்பவரான ஸ்ரீ சீனிவாசய்யங்காரின் யோக்கியதையைவிட அதில் கலந்து கொண்டவர்களின் யோக்கியதையே பெரிதும் கவனிக்கத்தக்கது.

கோவையில் கூடிய பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் காங்கிரஸில் சேரப்பிரயத்னம் செய்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றியவுடன் பார்ப்பனர்கள் தங்களுக்கு அடிமைகள் அல்லாத வேறு யாரும் காங்கிரசிற்குள் நுழைந்து விடாதபடி எவ்வளவுதிட்டங்கள் ஏற்படுத்தினார்கள் என்பதை பொது வாழ்வில் கலந்துள்ள யாரும் அறியாமல் இருக்க முடியாது. காங்கிரஸில் சேர்க்கும் இரண்டுகளை தாங்களே தங்களுக்கு வேண்டியவர்களுக்கே னியோகித்து தங்கள் சொற்படி கேட்பவனே மாத்திரம் சேர்க்கும்படி கட்டளை இட்டதை யாராவது மறுக்க முடியுமா? அப்படி இருந்தும் தங்களுக்கு வேண்டாதவர்கள் யாராவதுளந்திர்வாகக்கமிட்டி லிபிலாவது சேர்ந்து விட்டால் அவர்களை ஒழிக்க வேறு கமிட்டிகளை ஏற்படுத்தச் செய்து ஏற்கனவே ஏற்பட்ட கமிட்டிகளை செல்லுபடி யற்றதாக்கினதை யாருக்காவது தெரியாது என்று சொல்லமுடியுமா? அதேகாலமாய் ஒவ்வொரு வரிலும் இரண்டு கமிட்டி ஏற்பட்டதும் தங்களுக்கு வேண்டியதை வைத்துக்கொண்டு மற்றதை நீக்கியதும் யாருக்காவது தெரியாது என்று சொல்லமுடியுமா? இந்தியா முழுவதையும் எடுத்துக் கொண்டாலும் தமிழ் நாட்டில் காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்கள் செய்தது போன்ற அயோக்கியத்தனங்களும் அக்கிரமங்களும் வேறு எங்காவது நடந்ததாகக் காட்ட முடியுமா? அல்லது தமிழ் நாட்டிலாவது இந்த 5, 6 வருஷ காலத்தில் இப்படி நடந்ததாக யாராவது காட்ட முடியுமா? இதை யாராவது கவனித்தார்களா? இதனால் ஏற்பட்ட மானக்கேட்டைப்பற்றி யாராவது சிந்தித்தார்களா? கொஞ்சமும் மானமும் ரோஷமும் இல்லாமல் இவ்வயோக்கியர்களுடன் கூடிக்குலாவ ஒவ்வொருவரும் முயற்சித்தார்களே ஒழிய கேள்வையாவது சமயமரியாதையையாவது யாராவது கவனித்தார்களா என்று கேட்கின்றோம். ஸ்ரீ வரதராஜலு சென்ற வருஷத்திற்கு முன் வருஷம் காங்கிரஸ்கமிட்டி நிர்வாகஸ்தானத்திலிருந்து ராஜினாமா கொடுத்து விலகினது எதற்காக? இப்போது மறுபடியும் அக்கூட்டத்திற்குள் புகுந்து குலாவி மறுபடியும் நிர்வாகசபை அங்கத்தினரானது எதற்காக என்றே கேட்பதுடன் முன்தரம் ராஜினாமா கொடுத்தகாலத்தில் அக்கமிட்டியில் இருந்த அயோக்கியத்தனங்கள் இப்போது மாறி விட்டனவா அல்லது தான அக்கமிட்டிக்கு தக்கவராகி விட்டாரா? என்று கேட்கின்றோம். இந்த ஆறுமாதகாலமாக தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியையும் அதன் நிர்வாகத்தின் யோக்கியதையையும் மக்கள் விடாமல் குற்றம் சொல்லிக்கொண்டே இருந்ததைப் பார்த்து விட்டு தானும் சில சமயங்களில் சொல்லிக் கொண்டும் இருந்து விட்டு இப்போது திடீரென்று அதற்குட் புகுந்த காரணம் என்ன என்பதை சொல்லுவாரா? திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் வர்கள் இவரோடுகூட இவ்வளவு சமீபகாலமாகொடுத்து வெளியேறி இருந்த அவரைப் பற்றி கொஞ்சமாவது நினைத்தாரா? ஒன்றுமில்லாமல் தனக்கு இடம் கிடைத்தே போதும் என்று எல்லாவற்றையும் மறந்து விட்டு சகலத்தையும் உதிர்த்து விட்டு கமிட்டி நிர்வாகத்திலும் எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும் இடம் சம்பாதித்துக் கொண்டதின் அர்த்தம் என்ன என்றுதான் கேட்கின்றோம். ஸ்ரீமான் அண்ணாமலை பிள்ளையும், குப்புசாமி முதலியாரும், தெய்வநாயக அய்யரும், தங்கமீரான் சாயபுவும், தீர்த்தகிரி முதலியாரும் இந்த அயோக்கியக்கூட்டத்திற்காக எவ்வளவு பாடுபட்டார்கள் என்பதை யாராவது வர்ணிக்கமுடியுமா? அப்பேர்ப்பட்டவர்களே அக் கூட்டத்தில் கலந்துகொண்டு இருப்பது தங்கள் சுயமரியாதைக்கு லாயக்கில்லை என்று தைரியமாய் எழுந்து வெளிவந்திருக்கும்போது ஒரு வேலையும் செய்யாமல் சும்மாவதற்கு கொண்டிருந்த ஸ்ரீமான் வரதராஜலு அங்கு இருக்கே தீரவேண்டியதின் ரகசியம் என்னவென்பது நமக்கு விளங்கவில்லை. அல்லாமலும் அங்கு ஏற்பட்ட தகராறுகளினிமித்தம் செய்ய முயற்சித்ததாகவும் "தமிழ் நாடு" பத்திரிகையிலேயே காணப்படுகின்றது. ஆகவே அரசியல்வாழ்வு என்பதில் எவ்வளவு தூரம் காணபரமும் யோக்கியப் பொறுப்பும் இருக்கவேண்டும் என்பதை இதனாலேயே மக்களுக்கு விளக்கவில்லையா என்றுகேட்கின்றோம். சென்னைப்பார்ப்பனர்கள் வெளி காட்டிலிருந்து வரும் ஆசாமிகளிடம் ஸ்ரீமான்களான வரதராஜலுவையும், ஜார்ஜ் ஜோசப்பையும், ஷாபி மகமது சாயபுவையும், ஜய வேலுவையும் கூட்டிக்கொண்டு போய் இதோ பார் தமிழ் நாடு மக்களின் பிரதிநிதிகள் என்று ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வராக அதாவது பார்ப்பனரல்லாத இந்த என்பதற்கு ஸ்ரீ வரதராஜலுவையும் திருவைவர்எப்படிதருகிஜார்ஜ்ஜோசப்பையும், மகமதிய ரென்பதற்கு ஜனாப் ஷாபி மகமது சாயபுவையும், ஒடுக்கப்பட்ட வகுப்பார் என்பதற்கு ஸ்ரீ ஜயவேலுவையும் காட்ட ஏற்பாடு செய்து கொண்டார்கள் அதற்கு இந்த கனவான்களும் உதவி செய்து விட்டார்கள் இவர்களுக்கும் பார்ப்பனர்கள் ஏதாவது பிரதி உபகாரம் செய்வார்கள் என்பதல்லாமல் இந்த பிரதிநிதிகளால் இந்த சமூகங்களுக்காவது காட்டிற்காவது காதொடிந்த ஊசி அளவு பலனுண்டா என்பதை யோசித்துப்பார்க்கும்படி பொது ஜனங்களை வேண்டிக் கொள்ளுகின்றோம். எவ்வளவு காலத்திற்குத்தான் இம்மாதிரி கடவுக்களை காட்டி சுயநல வாழ்க்கை பெற்றுக்கொண்டு பொது ஜனங்களை ஏமாற்றி வருவது என்று பொது ஜனங்கள் நினைத்துகொண்டிருக்கிறார்கள் என்பதும் நாம் கொஞ்சமும் அறியக்கூடாத நிலையில் இருந்து வருகின்றோம்.

அதுபோலவே பொருள்காலி என்பதும் எவ்வளவு மோசமான ஏமாற்றுத் தொழில் என்பதை யாராவது உணருகின்றார்களா என்றுதான் கேட்கின்றோம்.

பல தாரிகளும் இன்ன உற்சவத்திற்கு வருவார்கள் என்று எண்ணிக்கொண்டு உற்சவத்திற்குப் போகிறவன் எப்படி ஏதாவது ஒன்றில் மிழுந்து கெட்டுப்போக இடமுண்டாகின்றதோ அதுபோல் காங்கிரசின் பேரால் அன்னிய நாட்டுச் சாமான்களின் பொருள் காலி கடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஒரு ஆகாரமே போதாதா காங்கிரசும் கண்காட்சியும் படித்தவனும் பாமரனும் சேர்ந்து செய்கின்ற ஏமாற்றுத்தனமா என்பதற்கு உதாரணம்? என்று கேட்கின்றோம்.

இக்காங்கிரஸால் இன்னும் எவ்வளவு வரி உயரப் போகின்றதென்றும் இவ்வன்னிய நாட்டுப் பொருள் காட்சியினால் இன்னும் எத்தனை தொழிலாளருக்கு தொழில் அற்றுப்போகப் போகின்றதென்றும் யாராவது கவனிக்கிறார்களா? விளக்கில் பூச்சிகள் போய் விழுகின்றதைப்போல் எல்லா மக்களும் ஆசையில் போய் விழுந்து அம்மாய்கையில் சிக்கி விடுகின்றார்களே ஒழிய இதை வெளியில் யாராவது கவலை இருக்கின்றதா? ஸ்தாபமிருக்கின்றதா? போதாக்குறைக்கு ஒவ்வொரு பத்திரிகையும் மக்களை சென்னைக்குப் போகும்படியும் காங்கிரசுக்கு போகும்படியும் சொல்லுகின்றதே என்னே வெட்கக் கேடு! வெட்கக் கேடு! வெட்கக் கேடு!!!

---

## ஸ்ரீ T A சோமசுந்தரம் செட்டியார்

கோயமுத்தூர் ஸ்ரீமான் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் அவர்கள் தம்பியும் கோயமுத்தூர் பெஞ்சி கோர்ட்டு பிரசிடெண்டுமான ஸ்ரீமான டி. ஏ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் சென்ற வாரம் நிமோனியா காயலா ஏற்பட்டு மிக சிரமயத்தில் காலமாய் விட்டதைக்குறித்து மிகவும் வருந்துகிறோம். அவரது குடும்பத்தாருக்கு நமது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## மகாத்மாவைப்பற்றி "தமிழ் நாடு" வின கவலை.

"தமிழ் நாடு" பத்திரிகையானது 16-12-27 தேதி உதயசூரியனில் கண்ணோட்டம் என்னும் தலைப்பின் கீழ் ஒரு வியாசம் எழுதி இருக்கின்றது. அதில் ஸ்ரீமான் காந்தி அவர்களை மகாத்மா என்று சொல்லாமல் வெறும் காந்தி என்று சொல்வதால் தனக்குப் பெரிய கவலை ஏற்பட்டு விட்டதாகக் காட்ட வெளிவந்த உலகம் போற்றும் உத்தமர்களில் மகாத்மா காந்தி ஒருவர் என்றும், அதை மறுப்பவர் ஒன்று இழி குணம்படைத்தவராக இருக்கவேண்டும் அல்லது மதியற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதும் எழுதியிருந்தது.

மகாத்மா காந்தி என்பதைவிட ஸ்ரீமான் காந்தி என்று சொல்வதால் இழிகுணப் பட்டமும், மதியற்ற பட்டமும் வருகிறதும் வரட்டும் நமக்கு அதைப்பற்றிக் கவலையில்லை.

ஸ்ரீமான் காந்தியைவிட மக்களுக்குள் வருணம் ஒன்று உண்டு. அதாவது அவை களின் பிறவியில் ஏற்படுகின்றன. அந்தந்த வருணத்தாருக்கும் ஒவ்வொரு தர்மம் உண்டு. அதைத்தான் அவனவன் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார் என்பதாக நாம் உணர்கிறோமோ அன்றே அவரிடம் மகாத்மா தன்மை அங்கு இல்லை யென்று நிர்மானித்து விட்டோம். அதிலும் சூத்திரன் என்பவன் அடுத்த ஜென்மத்தில் தான் பிராமணனுப் பிறக்கலாம் என்கின்ற அவருடைய நிச்சய சித்தாந்தமாய் நம்மை மாற்றியது. மகாத்மா பட்டம் ஒருவரின் அபிப்பிராயத்தையும், நடவடிக்கையையும் பொருத்துத்தான் வழங்கப்படுவதேதவிர வேறும் ஒருவருக்காக வழங்கப்படுவதல்ல என்பதை உணர்ந்தவர்களுக்கு இவ்விஷயத்தில் கவலை ஏற்பட நியாயமில்லை. மகாத்மா என்கிற பட்டத்தை நீக்கி நாம் எழுத ஆரம்பித்த இன்றைக்கு சுமார் இரண்டு மாதம் ஆகின்றது. இதுவரையும் சகித்துக்கொண்டிருந்த தமிழ் நாட்டிற்கு இந்த வாரம் திடீரென்று கவலை தோன்றி உடன் "இழிகுணத்தையும்" "மதியீனமையையும் கண்டுபிடித்து எழுதியிருப்பதற்கு இரகசியமான காரணம் நிலையல் போகவில்லை. அதை நாங்களே சமயம் வெளியிடுவோம்.

ஒவ்வொரு பட்டமும் அவரவர்கள் அபிப்பிராயத்தாலோ நடவடிக்கைகளாலோ ஏற்படுவதும், அவைகள் மாறுபடும்போது மாறுபடுவதும் வழக்கமாகவே இருந்து வந்திருக்கின்றது. மற்றபடி எல்லாருக்குமே பட்டம் என்பது அவரவர்களின் அறியாமையினால் ஏற்படுவதும், விஷயம் தெரிந்த உடன் மறைந்துபோவதும் வழக்கமாக இருக்கின்றது. இதுவரையில் எத்தனையோபேர்கள் தலைவர்களாகி மறுபடியும் நீசப்பதற்கே அருகர்களல்லாதார்களாய்ப் போயிருக்கின்றார்கள் என்பதை யோசித்துப் பார்த்திருந்தால் 'தமிழ் நாடு' வுக்கு இவ்விஷயத்தில் இவ்வளவு கவலை ஏற்பட்டிருக்க நியாயமே இருந்திருக்காது.

தனி கடவுளின் அவதாரமாகவும், மகாத்மாவாகவும் தோன்றினதாகச் சொல்லப்பட்ட நிருஷ்ணன் என்பவன் கடைசி காலத்தில் ஒரு காட்டில் ஒரு வேடனால் கொல்லப்பட்டு அழுவாரற்றச்சென்ற காரிக்கிடந்ததாக வுள்ள விஷயமுகூட அறிந்திருந்தால் இம்மாதிரி காரியத்திற்காக ஒருவரை இழிகுணம் என்றும் மதியீனம் என்றும் எழுத நியாயம் கிடைத்திருக்காது என்போம். ஆனாலும் நம்முடைய இந்த சமாதானமெல்லாம் 'தமிழ் நாடு' பத்திரிகைக்கல்ல. ஏனெனில் அது பழைய குப்பையைதோடிப் பார்த்து குற்றங்கள் கண்டுபிடிக்கின்றவேலையில் முனைந்து இருக்கின்றது. ஆகலால் அதற்கு இச்சமாதானங்கள் ஒரு உணர்ச்சியையும் கொடுக்காது என்பது நமக்குத் தெரியும். ஆனால் அதைக்கண்ணுற்றவர்கள் எவராவது இருக்கவே இதை எழுதுகின்றோம்.

## ஸ்ரீ R. K. ஷண்முகம் செட்டியார் கவனிப்பாரா?

காங்கிரஸ் கிரீட் என்னும் முக்கிய கொள்கையில் ஜாதி வித்தியாசத்தை ஒழிப்பதையும் ஒரு கொள்கையாக திருத்தவேண்டுமென்று காங்கிரசுக்கு பொர்சுசெய்வதாக சேலம் மகாநாட்டில் தீர்மானித்த தீர்மானத்தை காங்கிரசில் பிரேரேபிப்பதாய் ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம்செட்டியார் ஒப்புக்கொண்டபடி காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் அவர் பிரேரேபணை கொண்டு வருவாரா? என்பதை கேட்கின்றோம்.

இப்பிரேரேபணை காங்கிரசில் நிறைவேறாது என்பது நமக்கு தெரிந்திருந்தாலும், நிறைவேறினாலும் அதனாலேயே பிரயோஜன பலன் ஏற்பட்டுவிடாத என்பது உறுதியானாலும், மக்களுக்குள் சமத்துவம் ஏற்படவேண்டியது காங்கிரசின் நோக்கமல்ல வென்பதையும், சுயராஜ்யம் சுயராஜ்யம் என்று சொல்லி படித்தவர்கள் உத்தியோகம் பெற வேண்டியதுதான் அதன் நோக்கம் என்பதையும் ருஜுவாக்க இதுவும் ஒரு சந்தர்ப்பமாகுமே என்கின்றஆசையால் தான் இதை ஸ்ரீமான் செட்டியார் அவர்களுக்கு ஞாபகமூட்டி கவனிக்கும்படி வேண்டுகின்றோம்.

## ஆல் இண்டியா போஸ்டல் டைரி.

புதுவருஷ வரவேற்பின் அறிகுறியாக அகில இந்திய தபால் & R. M. S. சங்கத்தின் மதுரை வட்டத்தார் நமக்கு அன்புடன் அனுப்பிய அகில இந்திய தபால் டைரியை வர்தனத்துடன் ஏற்றுக்கொண்டோம். அது தபால் விஷயமான சங்கதிகளும் இங்கிலீஷ், தமிழ், மலையாள, மகமதிய, வங்காள முகலிய ஒன்பது தேதிகளும், மக்களுக்கு உபயோகமுள்ள அநேக விஷயங்களையும் கொண்டு 448 பக்கங்கள் கொண்டதாய், நேஷில் அடங்கக்கூடிய அழகில் அழகான காலிகோ பைன்டுடன் விளங்குறைது. சங்கத்தின் ஐக்கியத்தையும் அபிவிர்த்தியையும் பாராட்டுகின்றோம்.

## கோயமுத்தூர் பள்ளபாளையம்.

இந்திர குல வேளாளர் பால போத தமிழ் சங்கத்தின் 30 வது ஆண்டு விழா.

இவ்விழாகோவை நில்லா பிரபலவர்த்தகரும் முனிசிபல் கவுன்சிலரும் தாலுக்காபோர்டு மெம்பரும் சென்னை தாசேகவுண்டர்கம்பினியின் சொந்தக்காரருமான ஸ்ரீமான் S. N. பொன்னே கவுண்டர் அவர்கள் அக்கிராசனத்தில் மிகவும் விமரிசையாய் நடைபெற்றது. அச்சமயம் கோயமுத்தூரிலிருந்து ஸ்ரீமான்கள் நில்லா போர்டு பிரசிடெண்ட் சி எஸ் இரத்தின்சபாபதிமுதலியார் M L C அவர்கள், கோவை வைஸ்சேர்மன் அருணாசலம் செட்டியார் அவர்கள், கவுன்சிலர் C V V சுப்பயசெட்டியார் அவர்கள், பழனிச்சாமி நாயுடு, ஈ வெ ராமசாமி நாயக்கர், அழகிரிசாமி நாயுடு, T R சுக்கிரம் பிள்ளை ஆகியவர்களும் மற்றும் பல கனவான்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

ஆரம்பத்தில் ஸ்ரீமான்கள் பொன்னையா கவுண்டர் அவர்களுக்கும் ஈ வெ ராமசாமி நாயக்கருக்கும் வரவேற்பு பத்திரங்கள் வாசித்து கொடுத்த பின், காரியதரிசியின் அறிக்கைப் பத்திரம் வாசித்து, தலைவர் தம்மீண்ட அருமையான உபன்யாசத்தை படித்தார். பிறகு ஸ்ரீமான் டி. ஆர். சுக்தரம் பிள்ளை பி. எ. அவர்கள் ஜாதியின் தற்கால நிலைமை என்பதைப்பற்றி ஆராய்ச்சிக்கரள் கொண்ட ஒரு அறிய சொற்பொழிவை நிகழ்த்தினார். ஸ்ரீமான் அளகிரிசாமி நாயுடு அவர்கள் 'நமது மூடவழக்கங்கள்' என்பதைப்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். பிறகு ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் 'மக்கள் முன்னேற்றம்' என்பதை பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். இதில் மக்கள் முன்னேற்றத்திற்கு முக்கிய இடையூறாய் இருப்பதாகமது மதமும் நாம் கடவுளை அறிந்திருக்கும் முறையுமே என்பதாக சுட்டிக்காட்டி இவ்விரண்டும்அடியோடுஅழிக்கப்பட்டு புதிப்பிக்கவேண்டும் என்பதாக ஒன்றரை மணி நேரம் பேசினார். பிறகு திரு. பழனிசாமி நாயனாரால் தலைவர்பேரிலும் நாயக்கர் பேரிலும் சில பாட்டுகள் பாடப்பட்டு வந்தனோசாரம் கூறி சந்தனம் வெற்றிலை பாக்கு பழம் கற்கண்டு வினியோகிக்கப்பட்டு கூட்டம்மாலை 8 மணிக்கு இனிதுமுடிந்தது.

ஸ்ரீமான் நாயக்கர் அவர்கள்உபன்யாசத்தை அனுசரித்து, ஸ்ரீமான் டி. ஆர். சுக்திரம் பிள்ளை அவர்கள் கேட்டுக் கொண்டதின் படி, மறுநாள் நடக்க இருந்த ஸ்ரீ நடராஜ சுவாமி புஷ்ப அலங்கார வர் வலதிற்கு செய்ய உதேசித்திருந்த புஷ்பச்செலவு வகைகளில் பெரும் பகுதியை நிதத்தில் அதை கல்விக்கு செலவுவதாக்அச்சமூகப் பிரமுகர்கள் ஒப்புக்கொண்டதான்து மிகவும் குறிப்பிடத்தக்கது. ஒரு நிருபர்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி).

டது என்பதை யார் நிர்ணயிப்பது. நரி குதிரையான கதை சொல்லும்போது அக் காலத்திய நரிக்கும் குதிரைக்கும் உள்ள வித்தியாசம் அக்காலத்திய மக்கள் கண்ணி ன் நிலைமையும் அறிவின் நிலையும் யார் அறிந்தவர்கள்.

சமுத்திரத்தில் கல்லைக்கட்டி போடப் பட்டவர் தண்ணீரில் மிதந்தார் என்கின்ற கதையும், ஓலை எழுதி ஆற்றில் போட அது எதிர்த்து வந்தது என்பதுமான கதை களும் அப்படியேதான்.

இதுபோலவே ஆழ்வாராதிகள் சங்கதி யும் வைத்துக்கொள்ளலாம். இதை எல் லோரையும் கும்பும்படி கட்டாயப்படுத்த யாருக்கு அதிகாரமிருக்கின்றது. இன்ன மும் ராமாயணம், பாரதம் முதலிய கதைக ளையும் எடுத்துக்கொண்டு விவகாரம் பேசப் புறப்பட்டால் அவைகளுக்கு முடிவுதான்?

அரபியன் நைட் என்கின்ற கதையை யும் Fairy tales என்கின்ற மோகினிக் கதைகளையும் வேறு ஒருவர் நம்முன் தோன் றி, அவர்களும் சில நாயன் மார்கள் ஆழ்வா ராதிகள் கடவுள்கள் அவதாரங்கள் என் கின்றவைகளின் பெயரால் சொல்லவந்தால் யாருக்கு அவைகளை மறுக்க அதிகாரம் இரு க்கின்றது. எனவே "ஒருகாலத்தில் நடந்தது என்கின்ற விஷயம்" இப்போது யாருக்கு என்ன பலனைக்கொடுக்கும் அது பொய்யா மெய்யா என்பதாகுவதில் செலவாகும் நேரம் கடவுளுக்கோ மதத்திற்கோ மக்களு க்கோ என்ன பலனைக் கொடுக்கும் என்பது தான் இங்கு கேள்வியே ஒழிய அதன் உண் மையைப்பற்றியே முழு விவகாரமும் அல்ல. எவ்வளவோ கஷ்டப்பட்டு உண்மை கண்டு பிடிக்க முயற்சித்தால் பிறகு நிமிஷென்ன தத்துவார்த்தம் வேறே வந்து குறுக்கே விழுந்து எல்லாவற்றையும் கெடுத்துவிடுகின் றது. ஆதலால் நம்முடைய எண்ணத்தால் வார்த்தைகளால் நட வடிக்கைகளால் நாம் அன்னியருக்கு உதவுவது எப்படி, அன்னி யர் கஷ்டத்தை நிவர்த்திப்பது எப்படி, என்கின்ற காரியத்தில் காலத்தை செலவழி க்க வேண்டுமென்று எண்ணியே மூட பக் தி மூட நம்பிக்கை என்பதோடு எட்டில் உள்ள அற்புதங்களைப் பற்றியும் கவலை வே ண்டாம் என்கின்றோம்.

7. சைவம், வைணவம், சமணம், பௌத் தம், துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வை தம், வீர சைவம் முதலியன எல்லாம் இந்த மதத்தில் பட்டது என்பது.

அப்படியானால் திருஷ்டவம் மகமதியம் ஆரிய சமாஜம், தியோசபி, பிரம்ம சமாஜம், பார்சிகம் முதலியவைகளான மற்றும் சில மதங்கள் இதில் என் ஸ்ரீமான் பிள்ளையவர் களால் சேர்க்கப்படவில்லையோ நமக்கு தெ ரியவில்லை.

தவிர சைவ மதம் என் சமணர்களைக் கழுவேற்றிற்று என்பது நமக்கு விளங்க வில்லை. பௌத்த மதத்தை என் பார்ப்ப னர்கள் விரட்டி அடித்தார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

சங்கராச்சாரி மதமான ஸ்மார்த்தமதத்தி ற்கும் சைவமதத்திற்கும் என் சண்டை நிக ழ்கின்றதென்பது நமக்குத் தெரியவில்லை. வைணவத்திற்கும் சைவத்திற்கும் பரத்து வத்தகாரர் என் நடை பெறுகின்றது என் பது நமக்குப்புலப்படவில்லை. ஆளுக்கு ஒரு விதமான சூறிகள் என் என்பதும் தெரிய வில்லை. பௌத்தர் என் கடவுளைப் பற்றி பேசவில்லை என் பதும் தெரிய வில்லை, ஒரு மதக்கடவுள் மற்றொரு மதக் கடவுளை என் பூசித்தார் என்பதும் தெரிய வில்லை. இன்னும் இவற்றின் உட்பிரிவும் கடவுளகளும் அவைகளின் நடவடிக்கைக ளும் எப்படி ஒரே மதமாகுமென்பது நமக்கு படவில்லை. ஆதலால் இந்த மதத்திற்கு இவைகள் மாத்திரம் உட்பிரிவு என்பதை யோ இவைகளெல்லாம் ஒரே மதம் என்ப தையோ ஒப்புக்கொள்ள முடியாது. ஒப் புக்கொள்வதாலுமாம் சொல்வதனல்லாம் மேல்கண்ட மதத்தில் பட்டவர்களே. ஒவ் வொரு சமயத்தில் ஒவ்வொருவர் சொன்ன தாக அந்தந்த மதக்காரர்களே சொல்ல நாம் கேட்டிருக்கின்றோம். ஆகையால் நாம் சொல்லுவதைப் பற்றி இது என்ன மதமோ என்றுயாரும் கவலைப்படவேண்டியதில்லை.

இந்து மதம் என்கின்ற பெயர் எப்படி வந்தது என்று விவேகானந்தர் சொல்லியிரு க்கிறார் என்பது.

அவர் எதையோ சொல்லி யிருக்கலாம், எந்த அர்த்தத்திலேயோ சொல்லியிருக்க லாம். இப்பொழுது நமக்குத் தெரியவே ண்டாமா? என்பதுதான் கேள்வி. ஸ்ரீமான் பிள்ளை அவர்களுக்கு தெரிந்தால் சொல்லட் டும். பதில் சொல்ல முயலுகிறோம்.

8. மதசம்மந்தமான எந்த நூலையும் பார் க்க யாருக்கும் தடையில்லை என்பது.

பார்க்கவேண்டும் என்கிற ஆசை ஒன்றும் நமக்குஇல்லைநாம்சொல்வதென்னவென்றால் மதப்படி நடப்பதாக ஒருவன் ஒப்புக்கொண் டால் வேதத்தைப் பார்க்க முடியுமா என் பதுதான் கேள்வி. பார்க்க மதம் இடம் கொடுக்கின்றதா என்பதுதான் கேள்வி. அப்படி இடம் கொடுக்குமானால் எவ்வள வோ பழய மதம் என்று சொல்லப்படுவதான இந்துக்கள் என்போர்கள் என்ன கார ணத்தினால் இதுவரை 100க்கு 5 பேருக்கு மேல் படிக்க முடியவில்லை என்பதையும் அப்படிப் படித்திருப்பதும் இந்த அரசாங் கம் அல்லாத வெளிநாட்டார அரசாங்கத்தி னால அல்லது மதத்தின் உதவியினாலா என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டு கின்றோம்.

9. கோயில்களைச் சுத்தச்சாலை என்று காயக்கர் சொல்லுகின்றார் என்பது?

ஆம் அப்படித்தான் சொல்லுகிறோம். ஏனெனில் கோயிலுக்குள் மாத்திரம் தான் இருக்கின்றது என்பதாக ஒரு விசேஷமும் இல்லை என்றும், ஏதாவது இருப்பதாகச் சொன்னால் பொய்யும், புரட்டும், கூடா ஒழுக்கங்களுக்கு சௌகரியமும் மாத்திரம் இருக்கின்றதெனவுமே சொல்லுகின்றோம். இது நம்முடைய 30 வருஷத்திய கோவில் நிர்வாக அனுபவம்.

10. கல் மனதையும் கரைக்கும்படியான சக்தி சில ஆலயங்களுக்கு இருக்கின்றது என்பது.

அது வந்த ஆலயத்தில் என்று ஸ்ரீமான் பிள்ளையவர்கள் சொல்வார்களானால் மெத்த உபகாரம்.

தவிரவும் எவ் மற்ற ஆலயங்களுக்கும் அச்சக்தி இல்லாது போயிற்றென்பதையும எடுத்துச் சொன்னாலும் அதை விட உப காரமாயிருக்கும் என்று தெரிவித்துக்கொ ள்ளுகின்றோம்.

11 இக்காலத்தில் பல இடங்களில் எத் தனையோ அற்புதங்கள் நடக்கின்றன என் பது.

நம் நாட்டில் எங்கே என்ன விதமான அற்புதங்கள் நடக்கின்றன என்பதை காட்டி ருஜுப்பிப்பாரானால் அதற்கு ஏற்படும் செ லவு முழுவதையும் கொடுத்து ஏற்றுக்கொ ள்ளத்தயாராயிருக்கின்றோம். அப்படி இல் லா விட்டால் குருட்டு நம்பிக்கைக்கும், மூட பக்திக்கும் ஸ்ரீமான் பிள்ளை அவர்க ளே சாட்சியாவார்கள்.

12. பல்தலங்களுக்கு விசேஷ காலங்க ளில் லட்சக்கணக்கான ஜனங்கள் நடந்து போய் ஆனந்தபரவசர்களாகிறார்கள் என்பது லட்சக்கணக்கான ஜனங்கள் நடந்துபோவ தாலேயே ரோஸ்தலம் உயர்ந்தராய் விடாது.

சுகநிர்வாணமாய் எண் ணை தேய்ப்பதாக ஸ்நானம் போட்டால் தாரை வேஷக்காரன் ஆணியிருந்தாலும் கொட்டகை நிரை ஆட்கள் கூடி விடுகி றார்கள். வெறு தூரத்தில் இருந்து பணம் கொடுத்து பார்த்து விட்டுப்போகின்றார்கள்.

இன்ன கள்ளுக்கடையில் கல்லபோதையு ள்ளகள்ளு விற்கிறதாகபையடித்தால் நிற்க க்கூட இடமில்லாமல் ஆள்கள் பல இடங்க ளில் இருந்து வந்து குடித்து மெய்மறந்து தெருவெல்லாம் புரண்டு கொண்டிருக்கிறார் கள். வண்டிமேலே ஏறுவது கூட தெரிவதில் லை. அதுபோலவே பீபிள் பார்க்க வேடிக்கை க்கு எதையோ பேர் போகிறார்கள். அதுபோலவே காங்கிரஸ் என்றும் கண் காட்சி சபை என்றும், காந்தி என்றும், சங் கராச்சாரி என்றும் மாமாங்கம் என்றும், மௌனா என்றும் எத்தனையோ பேர் போகி ன்றார்கள். இதனெல்லாம் இடத்திற்கு மகத்துவமா? அந்த ஆள்களுக்கு மகத்துவ மா? என்ன வென்று ஸ்ரீமான் பிள்ளை சொல்வாரோ தெரிய வில்லை.

13 மதம் கோவில் பக்தி முதலியவற்றை அழித்துவிட நாயக்கர் முயலுவது அறிவு டமையாகாது என்பது.

யோக்கியமான மனிதன் உலகத்தில் வாழ் வதற்கு இவைகள் வேண்டுமென்றே அவசி யம் இல்லை. இப்போதைய மதம், கோவில், பக்தி முதலியவைகள் மக்களுக்கு எவ்வித பலனையும் ஒழுக்கத்தையும் கொடுப்பதமில் லை, கெடுதியும் செய்கின்றது. எனவே ஏதா வது ஒரு காலத்திலாவது அவைகள் அழிய கோரிட்டால் யாரும் கவலைப்பட வேண்டிய தும் இல்லை. தவிர கோவில்கள் இல்லாத காலததில் மக்கள் இவ்வளவு அயோக்கியர் களாக இருந்தார்கள் என்றும் மக்களை மக் கள் இவ்வளவு கொடுமைப் படுத்தினார்கள் என்றும் ஆராய்ச்சிக்காரர்கள் சொல்வ தில்லை.

14. கௌதமர் இந்தமதத்திலிருந்தே சிரார்த்தம் செய்திருக்கிறார். அதுபோல் நாயக்கர் செய்யட்டுமே என்பது.

கௌதமர் கொள்கைகளை ஒப்புக்கொண்டு அதன்படி நடப்பவர்களிடம் நமக்கு அதிகாரமில்லை.

அவர் எந்த மதத்தைச் சொன்னார் எந்த கடவுளைச் சொன்னார், எந்த கோவிலைச் சொன்னார், எந்த உற்சவத்தைச் சொன்னார், எந்த ஜாதியைச் சொன்னார், எந்த பக்தியைச் சொன்னார் என்பதை பின்னேயவர்கள் சற்று யோசித்துப் பார்ப்பாரானால் இவ்வளவுதூரம் கவலைப்பட்டிருக்க மாட்டார் என்றே சொல்லுவோம்.

அவர்களிடத்தில் எப்படி நடந்துக் கொள்வது என்பதைத்தான் சொல்லியிருப்பார் என்று நினைக்கிறோம்.

15 நாயக்கர் புதுக் கொள்கைகளைக் கொண்டுவந்து சிரார்த்தம் செய்யட்டுமேனபது.

நாம் எவ்வித புதுக் கொள்கைகளையும் கொண்டுவர வேண்டும் என்கின்ற எண்ணமில்லை. இப்போது இருக்கும் ஆபாசக் கொள்கைகள் ஒழிந்தபிறகாவது நல்ல கொள்கைகள் ஏற்பட்டிடும் என்கின்ற நம்பிக்கை நமக்கு உண்டு. கருக்கிச் சொன்னால் மனிதனை மனிதன் இழிவு படுத்தவதும் பலத்தினால் அடக்கி ஆளுவதும் ஒழிய வேண்டும். இதுபோலபலஒழிவதற்குஇடையூறு இருக்கும் எதுஒழிவதானாலும் நமக்குக் கவலையில்லை. நமது கவலை சமமரியாதையும் அன்புதான்.

மற்றும் அவர் வியாசத்தில் உள்ளவைகளுக்கும் இவற்றல் சமாதானம் இருக்குமென்று நினைக்கின்றோம். எவ்வளவு சுருக்கியும் வியாசம் அதிகமாக நீண்டு விட்டதால் இதுசமயம் இத்துடன் நிறுத்தி விட்டோம்.

## ஸ்ரீத்துக்குடி சைவசித்தாந்த சபை.

இச்சபையின் 44-ம் ஆண்டு விழா, கிழ் மார் கழித்திங்கள் 16,17-ம் நாட்களில் கூடுபெறும். அவ்விழாவின் பேரவைக்கு வாலாஜாபேட்டை சாகம் பள்ளிக்கூட டிப்டி இன்ஸ்பெக்டர் திரு. சு. சச்சிதானந்தம்பிள்ளை பி. ஏ, எல். டி. அவர்கள் தலைமை வகிக்க அன்புடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அன்பர்கள்வந்து விழாவினைச் சிறப்பிக்க வேண்டுகிறோம். காரியதரிசி.


மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd.

ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷே கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்ட்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.

சிருங்காரமான போட்டோ படங்கள்.

பாரில் மாதர்கள், ஐரோப்பிய மாதர்கள் முதலோரின் அழகையும், அவர்களின் வினோத உடை பாவனைகளையும் விளக்கும் பொட்டோ கார்டுகள் படுக்கையறையைச் சிறப்பிக்க ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமானவை. படங்களைப் பார்க்கப்பார்க்கப் பேரின்பம். உயர்ந்த கலர் தினேஸ் படங்கள். பல ரகங்கள் கொண்ட டஜன் கார்டுகள் விலை ரூ. 1-15-0.

ப்ரேஞ்சு வாசனைக் கார்டுகள்.

வாசனைப் புட்டி வேண்டுமென்ற அவசியமில்லை. எப்பொழுதும் உயர்ந்த வாசனையோடு கூடிய ஷே கார்டுகள் டஜன் ரூ. 1 தான்.

நி: கிருஷ்ணா ஏஜன்சி,
26, வெள்ளாளத் தெரு, புரசபாகம், மதராஸ்.

குடி வெள்ளி நகைகள்

இனம்! 1928-வது காலண்டர் இனம்!
துப்புரவான வேலைகள்.

எங்கள் சொந்த பார்வையில் தயார் செய்யப்படும் சொக்க வெள்ளி தண்டை, கொலுசு, செயின், அரஞ்கொடி, கெல்காதரச் கொடி, பீலி வகையருக்களும், இமிடேசன் செப்பு கம்மல், கடுக்கன், தோடு வகைருக்களும், அல்பட்டு ஜரிகை பேட்டு வேலைமானம் பட்டு லேஞ்சுகளும், வெண்பட்டுவகையருக்களும் இமிடேசன் பட்டு சேலை, ரவிக்கை, டாவினி 1, 2, 3 கெ. லேஞ்சுகளும், இன்னும் பலவித இனுசுகளும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விலை குறைத்து இருக்கிறோம். வேண்டியதற்கு ஆர்டர் எழுதினுல் உடனுக்குடன் வி. பி. யில் அனுப்பி வைக்கிறோம். விபரம் வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் கேட்டளாக் இனுமாய் அனுப்பப்படும்

விலாசம்,
தொ. வெ. சென்னி செட்டி & சன்ஸ்
சப்ப் & ஜவுளி வியாபாரம்
குகை, சேலம். (S. India)

தந்தி விலாசம் "சராப்" சேலம்

தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டுலட்சத்து ஐம்பதினுயிரம் ஜனங்களுக்குச் சலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொடுத்தும், இதைப்போன்ற அநேக புத்தகங்கள் பின்னல் பணம் பறிக்கும் பொருட்டு அநேகரால்தயார்செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், நிகரற்றதும், நற்சாட்சியும், ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும், சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாட்சிப் பத்திரம் வாங்கப் பட்டதுமான எமதுழிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க்போட்டுள்ள

ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)

வெளி வந்த சுமார் 2000 காப்பிகள் இரண்டு வாரங்களுக்குள் பறந்துபோய்விட்டன. உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இது ஒன்று தான். இது மாதர்களுக்கும் வியாபாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மிகவும் முக்கியமானது. இப்பதிப்பில் மிகவும்சிரமப்பட்டு அணுமுதல் 3,000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்குப் போடப்பட்டிருக்கிறது. எக்கள் ஆங்கில ஆசானேபேரல் பலபோலிப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. ஆங்கில ஆசான் என்ற பெயர் டார்த்தும் இப்படக்தில் கட்டியுள் ளடே டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள். உண்மையான ஆங்கில ஆசான் இதுதான்.

800 பக்கம் முழு காலிகோபயிண்டு விலை ரூபாய் 2 வி. பி. தபால் செலவு அணு 8

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதராஸ்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

னுக்கு அதுவும் கிடைக்க ஒட்டாமல்...'பக்தர்கள்' ஆனந்த மேலிட்டு ஈசனையே கண்ணுக்கண்டவர் போல ஆரவாரிப்பார்கள். மணியோசை பலமாகக் கேட்கும். புளகம் நிரம்பிய நீபாராதனைகள் நடக்கும். முன்னின்ற சில பிராமணர்கட்கும் பணமிறைக்க வந்த சில கனவான்களுக்குமேயன்றி மற்றைய ஏழைகளுக்குத் தரிசனமே கிடைக்காமல் ஏங்கிவிட்டு ஈசனே மனதினுல் மட்டும் நினைத்து விட்டுத் திரும்புவார்கள். இவ்விதம் அண்ட சப்தம், தொல்லை, தலைவலி, இவைகளின் மத்தியில் நமது ஏழைத்தொண்டனுனவன் மூர்த்தியை எவ்வாறுதரிசிக்க முடியும்? பாவம்! கோயில் விட்டுவெளியில் வந்து சுத்த ஆகாயத்தைப் பருகினுல் போதுமானது என்றிருக்கவேண்டியதுதான். அவ்வியமாகத் தோன்றும் தேங்காய் பழம் தந்த நீபாராதனை பண்ணலாம் என்றாலோ, முதலில் காசு இறைக்காமல் அக்கரிபம் கூடவாது. அதிலும் அதிகக்காசுக்குத்தான் முதலில் மரியாதை. காசுக்குத் தகுந்த மந்திரமும் ஏற்பட்டிருக்கின்றது. அர்ச்சிப்பவன் மனம் அக்காலத்தில் எப்பொருளை நாடியிருக்கிற தென்று எந்த மகானுலும் ஊகிக்க முடியாது. சில ஆலயங்களில் தேங்காய் பழம் அர்ச்சகரிடம் செல்வதற்கும் தரகுண்டு. இவ்விதமாக தாருகள் மூலமாக ஈசனுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டுமென்று எந்த ஆகமம் கூறுகிற தென்பதை இனி கண்டுபிடிக்கவேண்டியிருக்கிறது.

அர்ச்சகர்களிட மிருந்து தப்பி வெளிச் சென்றாலோ, சிறுவர்கள், சிறுமிகள், ஆய ஆட்கள், வாயில் காட்டிகள், பணிவிடைக்காரிகள், பூக்கட்டிகள் முதலான ஆட்களின் நடுவில் நிக்கிகொண்டுஅவர்கட்குக் காசு கொடுக்காமல் வெளியில் வருவது துர்லபம். இதற்குள்ளாக மடியிலிருந்த பணப்பையோ சட்டையில் இருந்த மூக்குக் கண்ணுடியோ, சாவிக்கொத்தோ மறைந்து போகும். மற்றும் கோபுரவாயிலில் வரும்போது தூரிஞ்சிகளின் அபான வாயுவினுல் குளிப்பாட்டப்படவேண்டும். கோபுரத்தைத்தாண்டி வெளியில் வந்தவுடன் இருபுறமும் வரிசையாக உட்கார்ந்து கிடக்கும் நடைப் பிணங்களின் அகோரமான காதால கேட்கக்கூடாத சப்தங்களும், காசு கொடாவிட்டால் விழும் திட்டுகளும் கேட்டுவிட்டு வீட்டுக்குச் செல்லவேண்டிய திருக்கிறது. இவ்விதம் இவ்வ தரிசனம் செய்து நம் ஆன்மாவை இடேறச் செய்வதற்காக திருத்தொண்டன் ஆலயம் ஏகுகிறன்.

ஆகாயத்தைப் பிளக்கவல்ல சப்தத்தினும் அசுத்தத்தினும் கோயிலுட் சென்ற ஈசனுடைய ஞாபகம் எங்கிருந்து வரும்? மனத்தை நிறுத்திக் கடவுளை நினைத்தல் கிடைக்குமா? மேலும் அப்பர் தவத்தைச் சோதிக்கச் சென்ற அப்சரைப்போல் மேல் மினுக்கிச் சிங்காரித்து நிற்கும் வேசிகளையும் அவர்கள்குணத்தைப்பற்றிக குலாவி நிற்கும் தற்கால ஏனைய பெண்மணிகளையும் ஆலயத்தில் எப்போதும் கூடிக் குலாவியிருத்தலைக் கண்டால், எவ்வித பரி

## ராயல் கமிஷன்.

### பஹிஷ்கார கண்டனம்.
### வேலூர் முஸ்லீம்களின் தீர்மானம்.

வட ஆற்காடு ஜில்லா வேலூர் முஸ்லீம் சனின் பொதுக்கூட்டம் ஒன்று மதரஸா பாக்கியாத்துல் ஸாலிஹாத்தின் பெரிய ஹாலில் 8—12—27 பிற்பகல் 5 மணிக்கு கூடிற்று. அச்சபைக்கு மேற்படி மத்ரஸாவின் காஜீராகிய ஆலாஹஜரத் மௌலானு மௌல்வி அல்ஹாஜ் ஜியாவுதீன் முகம் மது சாயபு அவர்கள் தலைமை வகித்தார்கள். அவ்வமயம் தலைவர் கூட்டத்தில் முன்னுரை யாகப் பேசியதின் சாரம்:—

கமிஷனில் இந்தியர்களே அங்கத்தினர்களாக சேர்த்துக்கொள்ளமையைப் பஹிஷ்காரத்திற்கு ஓர் முக்கிய காரணமாகக் கூறுகின்றனர். இக்காரணத்தைமுன்னிட்டு பஹிஷ்காரஞ் செய்ய முன்வருவது பெருத்த வறும் வருந்தத்தக்க வீடயமுமாகு மென்பதே எனது அபிப்பிராயம்.

இரண்டொருவர் சேர்த்துக் கொள்ளப் பட்டாலும் தற்கால நிலைமையில் முஸ்லீம் சமூகத்திற்குப் பெரும்நஷ்டத்தையே மீனுவிக்கும். தற்காலம் இத்தக்கட்டு முஸ்லீம்கள் பேரிலும் முஸ்லீம்கட்கு இத்தக்கள் பேரிலும் ஒரு சிறிதளவும் நம்பிக்கையென்பதே கிடையாது.

முற்காலத்தில் இஸ்லாமிய அரசாங்கங்களில் காசப்படுத்துவதில் சுபலக்கருதியோ அறியாமலோ மீர்சாஹிப் முதலியவர்கள் சம்மதப்பட்டிருந்தது போல் தற்காலம் சில முஸ்லீம் தலைவர்களும் பிதற்றுகின்றனர். அவர்களின்வார்த்தைகட்கு அஞ்சிசமூகத்திற்குநன்மையெனப்படும் விடயங்களில் பகிரங்கமாக எடுத்த சமூகத்தினருக்குப் போதிப்பதில் பின் வாங்கலாகாது.

கமிஷன் அங்கத்தினர்களில் இரண்டொரு இந்தியர்கள் சேர்க்கப்பட்டதாக வைத்தகொள்வோம். அவர்கள்தெரிந்திப்பர்களாயிருப்பார்களாயின் வடஇந்தியர்கட்குப் பிரியப்பட மாட்டாது. வடஇந்தியர்களாயிருக்கும்பட்சத்தில் தென்னிந்தியாகட்கு அவர்கள் பிரதிநிதியாயிருக்கமாட்டார்கள். இத்தன்மை போலவே அவர்கள் இத்தக்களாயிருப்பின் முஸ்லீம்கட்கும் அவர்கள் முஸ்லீம்களாயிருப்பின் இத்தக்கட்கும் பிரமணராயிருந்தால்பிரமணரல்லாதார்க்கும் பிராமணரல்லதாராயிருப்பின்பிராமணர்கட்கும்அவர்கள் பிரதிநிதிகளாக மாட்டார்கள் என்பது வெளிப்படை ஆகையால் கமிஷன் அமைப்பைப்பற்றி குறை கூறுவது வீணான விஷயமாகும்.

---

சுத்த மனத்தையுடையவனும் சிறிது மயங்கவும் இடம் வாய்க்கின்ற தல்லவா? இம்மாதிரி ஜாலக்களும், கோலாலல்களும் ஆலயத்திற்கு ஏதற்கு? இவைகளை ஏற்படுத்தும்படி எந்த ஆகமத்தில் சொல்லியிருக்கிறது?

ஆலயங்களில் இக்குறைபாடுகளை நீக்கும் காலம் எக்காலமோ?

இப்போது நமது கோரிக்கைகளைச் சர்வ கமிஷனர்கள் எடுத்து சபார்சு செய்வில்லியேல் நாம் அப்போது பஹிஷ்காரத்திற்குரிய சகல காரியங்களையும்செய்ய முன்வரவேண்டும். இதுவே எனது நிடமான அபிப்பிராயமாகும்.

### கூட்டுத் தொகுதியும் தனிப் பிரதி நிதித்துவமும்.

தற்கால அணுஷ்டானத்திலிருந்து வருகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் தனி வாக்காளர் தொகுதியையும் மாற்ற வேண்டுமெனக் கூறுபவர்களிடம் தற்போதனுஷ்டானத்திலிருந்த வரும் முறை முஸ்லீம்கட்கு என்ன கஷ்டம் நெடுநிபுண்டாகியிருக்கிற தென்பதையும் இம்முறையை மாற்றியமைப்பதனுல் முஸ்லீம்கட்கு என்ன கஷ்மை உண்டாகுமெனவும், ருசுப்பிக்கும்படி கேட்கின்றேன். இத்தக்களாவது அல்லது அவர்களின் தாட்சண்யத்துக்குட்பட்ட முஸ்லீம்களாவது தனிப்பிரதி நிதித்துவத்தினும் தனி வாக்காளர் தொகுதியிலும் இன்னின்ன கஷ்டங்கள் முஸ்லீம் சமூகத்திற்கு இருக்கின்றதென்றும் கூட்டுத்தொகுதியில் இன்னின்ன பிரயோஜனங்கள் உண்டாகு மென்ற நம்பிக்கையிருக்கிறதென்றும் தக்க காரணங்களுடன் ருசுப்பிப்பார்களேயாயின் நான் ஒப்புக்கொள்ளத்தயார்.

கனவான்களே:— இந்த நெருக்கடியான நிலைமையில் உண்மை முஸ்லீம்கள் முன் வந்து வரும் கமிஷனை பகிஷ்கரித்து அதன்முன் நமது நோக்கங்களை விபரமாக எடுத்துக் கூற வேண்டும்.

முஸ்லீம்கள் அனைவர்களையும் கசப்பாருக ஆமீன்.

தலைவர் அவர்களின் பிரசங்கம் முடிந்தவுடன் அச்சபையில் மேற்கானும் தீர்மானங்கள நிறைவேற்றப்பட்டன.

1. சிறுபான்மையினர்களின்உரிமைகளைக்காக்கும் பொருட்டாகாயல்கமிஷனை ஆதரித்துஅதற்குவேண்டிய உதவிசெய்ய வேண்டுமென்று இச்சபை அபிப்பிராயப்படுகிறது.

2. முஸ்லீம்கள் சிறுபான்மையினர்களாக இருப்பதை உத்தேசித்து முஸ்லீம்களுக்குத் தனிபிரதிநிதித்துவமும் தனிவாக்காளர் தொகுதியும் இருந்தே தீரவேண்டுமென்றும் இப்பிரதிநிதித்துவம் முனிசிபாலிட்டி போர்ட்டு முதலிய எல்லா இலாக்காக்களிலும் கொடுக்கப்பட வேண்டுமென்றும் இச்சபை அழுத்தமாகக் கேட்டுக்கொள்ளுகின்றது.

மேற்கண்டதீர்மானங்களைப்பிரேரேபணை செய்தவர்களும் ஆமோதித்தவர்களும் அழகிய பிரசங்கங்களைச் செய்தார்கள்.

'சிராவிடன்'

---

### இறந்தவான் நியாபகார்த்தமாக ஏழைகளுக்கு அன்னமிடல்

மாயவரம் பெரியகடைத்தெரு பிரபல வியாபாரி ஸ்ரீமான் சி. நாராயணசாமி பிள்ளையவர்கள் தமது மூத்த மனைவி இறந்த தினத்தில் சகலவித பழய மூடக் கொள்கைகளையும் அறவே நீக்கி புரோஹிதச் சடங்கை ஒழித்து பல ஏழைகளுக்குத் திருப்தியாக அன்ன மிட்டனர்.

## சீர் திருத்தம்.

சீர் திருததம் என்பதின் பொருள் :—

சீர் கேட்டதைச் சீர் உறத்திருத்துதல். அதாவது எது தப்பு என்று தோன்றுகிறதோ, எது தப்பாய் இருக்கின்றதோ அதை அடியோடு அழித்து பின் ஒழுங்காக ஒன்றை உறச்செய்தல். கெடுதல் முழுவதும் மாறினாலன்றித் திருத்தம் ஏற்படாது; கெடுதலில் கொஞ்சமிருந்தாலும் திருத்தம் முடியாது. எனவே முதலில் கெடுதலை அறச்செய்தல் வேண்டும். "ஆசு அற்றார்" "மாசு அற்றார்" "கற்க கசடற" "மாசறக் கற்றோனும்" என்பவையால் ஆசு' மாசு, கசடு, என்றது முற்றும் அறவேண்டும் என்பதே கருத்து

இன்னும், 'காமம்வெகுளி மயக்கம் இவை மூன்றின் காமம் கெடக்கெடும் நோய்' என்றதால், கெடுதிக்கு ஆதாரமானவைகளில் பெயரும் ஒன்றென்றும், அப்பேரையும் போக்கவேண்டும் என்பதும், அப்போதுதான் சரியான திருத்தம் ஏற்படும்என்பதும் கருத்து.

திருத்துவதற்கு முன்னும் செய்யவேண்டுவது, முன்புள்ள கெடுதிக்கு வித்தாயிருப்பவற்றை அறவே ஒழியச் செய்வதே. அதன் பிறகு தாம்வேண்டிய, நன்மைக்கு வேண்டிய வித்தினையிடுதல், விதைத்தல் வேண்டும். இம்மாதிரியைச் சாதாரணமாக்கன்மாட்டு அறியலாகும். அதாவது கல்வி, ஆராய்ச்சி முறையில்தேர்ச்சி, சான்றிதம் முதலியவை யில்லாதசமான்யரிடத்தும் அறிந்து கொள்ளலாம்என்பதே.

"பூமி திருத்தி உண்" என்றதை ஊன்றப் பார்த்தால் தெரியவரும்,

பூமியைத் திருத்துவதென்றால்:—

(1) மேடு பள்ளத்தை மாற்றி சமன் பண்ணுவது. (2)கட்டாந்தையாயிருந்ததை உழுது மண்ணை புரட்டச் செய்வது (3) முன்புள்ள கல், முள், புல், பூண்டு வகைகளைப்பிடுங்கி எட்ட எறிந்து விடுவது, மீண்டும் முளைக்காதபடி செய்வது, ஆகவே, பூமியைத் திருத்துவதனால் முன்புள்ள நிலைமையை அடியோடு மாற்றவேண்டும் என்பது. இதன பிறகு வித்திட்டால் தான் கல்ல பலனைத்தரும் என்பது யாவருக்குந்தணிபு. சீர் திருத்தக்காரர் யாவராயினும் இம்முறையில்.பிறழாத திருத்தினாலன்றி எதையும் திருத்தமுடியாது.

கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்பதை நோக்கி, கூழ் குடிக்கவேண்டுமானால் மீசையை எடுத்துவிடத்தான் வேண்டும், மீசை வேண்டுமானால் கூழைக்குடிக்காதிருத்தல் வேண்டும். மற்றெதையாவது கொள்ளட்டும். ஆகையால் மக்களைச் சீர் திருத்தவேண்டுமானால் மக்களின் கெடுதலை, கெடுதிக்கு ஆதாரமானதை, அடியோடு ஒழித்தே நீரவேண்டும் என்பதை ஒவ்வொரு சீர்திருத்தக் காரரும் அவரவர் மனதிலும நிதானம் பண்ணிவைத்துக் கொள்ள வேண்டும. அப்படிக் கில்லாவிட்டால் மக்களுக்கு கெடுதி யுண்டாகுமே யன்றி வேறென்ன?

மாணிக்க வாசக சுவாமிகள் கூறியதை இங்கு கவனிக்க வேண்டும். அதாவது சீர் திருத்தக் காரர் ஒவ்வொருவரும் தத்தம் மனதில் ஆராய்ந்து மக்களை திருத்தும் முறையில், இம்முறையான தறையில் இறங்குதல் வேண்டும்.

'என்புள்ளுருக்கி யிருவினையு மீடழித்துத்
தன்பக்கலேற்று தவத்துவங்கள் தாய்மை செய்து
முன்புள்ளவற்றை முழுதுநிய உள்புகுந்த
அன்பிவீ துலாந்நில்லை யாவ்டானைக் கொண்ட
ன்றே' (குலாப் பத்து 3)

'மதிக்கும் நிறலுடைய வல்லாக்கன் தோன்கெரிய
மிதிக்குர் திருவடி என்தலேமேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசு பாசம் ஒன்று மிலோம் எனக் களி
[த்தில்
கதிர்க்குங் குலாத்தில்லை யாண்டானைக் கொண்
[டன்றே' (குலாப்பத்து 7)

என்றவைகளால்கெடுதிகள்முழுவதும் அழியும்படி செய்வதும், கெடுதல்களில் ஒன்றும் இல்லையாகும்படி செய்வதும், திருத்தமாகும்

சுத்தப்படுத்துதல், தூய்மையாக்கல் என்பதன் இயல்பைத் திருவாசகத்தில்,

'காமன் உடல் உயிர் காலன் பல் காய்கதிரோன்
காமகன் காதி ரெம் பிரமன் சரம் எரியைச்
சோமன் கலை தலை தக்கனையும் எச்சனையும்
தூய்மைகள் செய்தவா தோணோக்க மாடாமோ'
(12)

என்பதால் காண்க.

இவைகளால், சீர்திருத்தம் என்பது முன்புள்ள கெடுதல்களை, குற்றங்களை 'காமஞ் கெட'க் கெடுத்து, 'முழுநிழிய' அழித்து, 'ஒன்றுமிலாமற்' செய்து தூய்மைப் படுத்துவதென்பதே. இது மாணிக்க வாசக சுவாமிகள் கருத்து.

கோயில்களில் வாழைப் பழத்தைத் திருத்துவது எப்படி யென்பதை எல்லோரும் அறிவார். பூமியைத் திருத்துவதையும் யாரும் அறிவார். மனத்தைச் செம்மைப் படுத்தித் திருத்துவதை மாணிக்க வாசகத்தில் யாரும் காணலாம்.

முற்றும் அழிக்காது விட்டால், கொஞ்சம், சிறிது, அணுவாயினும் தங்கியிருந்தால் இத்தகைய அணு பெருகி அழித்துவிடு மாதலால், குற்றங்களின் நாமமும் கெடும்படி ஒழித்தல் வேண்டும் என்றும், முழுவதும் அறவே ஒழியவேண்டும் என்றும் திருவள்ளுவரும், மாணிக்க வாசகரும் வெளிப்படையாகக் கூறினர்கள்.

இக்காலத்தில் குளங்களிலும் ஓடைகளிலும்,முன் இங்கிலாந்த இரசாயனப் பூண்டு, என்று சொல்லப்படும் 'Haycinth' ஒரு சிறுபாகம் இருந்தாலும் வெகு சீக்கிரத்தில் எங்கும் பரவிவிடுவதையும், அவ்வோடை குளங்களைத் தூர்ந்துவிடுவதையும யாரும் பார்த்திருக்கலாம். அது நிலைத்திருக்கும் குணத்தைபாவது ஓடையைபாவது சீர் திருத்த வேண்டுமானால், தூர்ந்து போகாதபடி திருத்தஞ் செய்யவேண்டுமானால், சுத்தப்படுத்த வேண்டுமானால், அப்பூண்டுகளே முழுமையும் அறும்படி, ஒழியும்படி செய்ய வேண்டுமே யல்லாது ஒன்றிரண்டு விட்டு வைத்தால் அஃதிருந்த குளத்தின் ஓடையின் கதி, நிலைமை எப்படியாகும். சீக்கிரத்தில் முன்போலவே அப்பூண்டு முதல்கள் பல்லாயிரக் கணக்கில் விருத்தியாகி இருக்குமிடத்தைக் கெடுத்துவிடும்.

ஆகையால் ஒரு நெறு பாகத்தைக் கூட குளத்தில் விடாமல் எடுத்து ஒழித்துவிட வேண்டும் என்பதே யாவரும் அறியக்கிடக்கும் என்று தோன்றுகிறது.

ஆகையால் உண்மையில் சீர்திருத்த முறையை இன்னது என்று முன்னமே அறிந்துகொண்டால், ஒருவரைப் பழிக்காதிருக்கலாம். நாம் அவருக்கு வேண்டிய உதவி புரியாவிட்டாலும் குறுக்கிடாதிருந்தாலே பெரிய சகாயமாகும்.

ஆகையால் காயக்காரர்களை சும்மா விட்டுவிட்டால் அவர்கள் போம்வழியே போய் மக்களை திருத்தி விடுவார்கள்; கூடியவரையில் திருத்தம் ஏற்படும்.

அதன்பிறகே, காமெல்லாம் குறுக்கிடாமலிருந்தது நல்லதாயிற்று என்ற உண்மை புலப்படும். அப்படிக்கில்லாமல் காயக்காரர்களை, வேறேரு காரணத்தை முன்னிட்டு, மனதில் வைத்து, சீர்திருத்தத்தை ஆதாரப்படுத்தி, அதன் காரணமாக தாள்தத்திற்குள் வசையிசையைக் கட்டுப்படுத்தி பாடும் உரிமையைப் பெற்றவர்கள் பாடுவதென்றால் பாடட்டும். அதன் மூலம் சொன்னோம், சொல்லிவிட்டோம், வாயாரத்திட்டிவிட்டோம் என்ற மனத்திருப்தியையும் அடையட்டும். கேட்போரும் கேட்டு ஆனந்தமடையட்டும். இறக்தவரின் பாரம் தாக்கியவரையே பொறுக்கும். அதுபோல் சீர் திருத்தமுறைக்குமாறுபடச் சொன்னவரைக்கேட்டதன்பலன் கேட்டார் அடையவேண்டுவதே.

V. கோபாலன்.


### டேபில் டைம்பீஸ் இனம் !!!

எங்கள் 22 காரட் கோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குபவர்களுக்கு மேஜையின் பேரில்வைக்கக்கூடியதருமையான டேபில் டயம் பீஸ் இனமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். முத்துங்கள் வீலே ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.

வி. பி. சட்டமில்லாத வெளிகாட்டு கேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

நி. பான்வி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி மதராஸ்.


### கடகத்தூர் ஜீவகாருண்ய சங்கத்தார்

ஜீவகாருண்யத்தைப் பற்றி பல புஸ்தகங்களும் பாடியும் பல தண்டு விளம்பரங்கள் எழுதியும் அச்சிட்டு வெளியாக்கி இருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நாம் பாராத்தோம் மிக உயர்ந்த கோக்கங்கொண்டதாகவே இருக்கின்றன ஆதலால் அவர்களுக்கு எழுதி தருவித்து வாசித்துப் பார்க்குமபடி வேண்டுகிறோம்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி).

ளுக்கிசைந்த வெவ்வேறு வழிகளில் அடைய முயலுகின்றனர். பொய் பேசுகின்ற ஒருவர் எப்பொழுதும் பொய் பேசுவதனாலேயே இன்பம் அடையக்கூடும். கன் முதலிய மயக்கப் பொருள்களை உண்டு மகிழ்வோருக்கு அவற்றை யருத்துவதே இன்பமாகத் தோன்றும். சூதாடும் ஒருவருக்கு அதனை ஆதலே இன்பமாகத் தோன்றும். இவைபோன்ற நீச் செயல்களிற் பழகியவர்களுக்குச் நீச்செயல்களைச் செய்வதே இன்பமாகத்தோன்றுதல் இயற்கை. ஆனல் இவையெல்லாம் நிலையுள்ள இன்பமாகா! அவை களைச் செய்யுங்காலத்தில் இன்பமாகத்தோன்றினும் செய்து முடித்த அடுத்த நேரமே துன்பமாகத் தோன்றுவதைக் காணலாம். ஆகவே நிலையுள்ள இன்பம் அறம் ஒன்றினுலேயே உண்டாகும், மற்ற வற்றால் வரும் இன்பம் இன்பமகா, துன்பமேயாம். அறமல்லாத மற்ற செயல்களாற் புகழ் பெறவும் முடியாது. திருவள்ளுவர் (9) "அறத்தின் வழியில் நடப்பதால் வரும் இன்பமே இன்பமாகும்: மற்ற வழியால் வரும் இன்பங்கள் துன்பங்களே. அவற்றால் புகழும் உண்டாகாது" என்று திருவள்ளுவர் கூறியதனாலறியலாம்.

ஒருவன் எந்த வழியினலும் அறஞ்செய்தல் கூடும். சிந்தை, சொல், உடல், இவை மூன்றும் மனிதன் செய்யுங் காரியங்களுக்குத் தலைமையாக விருக்கின்றன. இம்மூன்றினலும் அறத்தைச் செய்தால் அவனிடம் நிலையணுகுவதற்கு வேறுவழியில்லை. மனத்திற் கெட்ட எண்ணங்கள் உண்டாகாமல் நல்ல பொருள்களைப்பற்றி சிந்திப்பது சிந்தையால் செய்யும் அறமாகும். கெட்ட பொருள்களைப்பற்றி உரையாடாமல் நல்ல பொருள்களைப் பற்றி உரையாடுதலே சொல்லால்செய்யும் அறமாகும். கெட்ட செய்கைகளைச் செய்யாமல் நல்ல செய்கைகளைச் செய்வதே உடலால்செய்யும் அறமாகும். இம்மூன்றும் ஒன்றற்கொன்று சங்கிலித் தொடர்போல் இயைபுடையதாகும். சிந்தையில் எண்ணுவதை வாயினுற்சொல்லி, உடலாற் செய்வதனால் மூன்றும் தொடர்புடையதென்பதை யறியலாம். இம்மூன்றையும் நாயகமாகக் கொண்டிருக்கின்றவர்களே நாட்டுத்தொண்டுசெய்வதற்கும், சமூகத் தொண்டு புரிவதற்கும் தகுதியுடையவர்களாவார்கள். அத்தகையவர்களால் செய்யப்படும் செயலே செழித்தோங்கி நல்ல பலனைக் கொடுக்கும். ஆகவே ஒவ்வொருவரும் இம்மூன்றினும் நாயகமுடையவராக முயலவேண்டியவர்களாக விருக்கின்றோம். இதனைத்தான் வடமொழியில் 'நிர்கரணசுத்தி'என்று கூறுவார்கள். ஒவ்வொருவரும் தாம் செய்யக்கூடியது அறம் என்பதையும், அகற்றக்கூடியது பாவச்செயல்கள் என்பதையும் மறவாமலிருப்பார்களாயின் யாவரும் அறமுடையவர்களாகக் கூடும். இதனை (10) "ஒருவன் செய்யக்கூடிய செயல் அறமாகும். விடக்கூடிய செயல் பழிக்கக்கூடியவைகளாகும்" என்று திருவள்ளுவர் கூறியதனால் அறியலாம். இதனால் மக்களுடைய இன்னதென்பதைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் உணர்த்தியிருப்பதை அறியலாம். எல்லாமக்களும் நல்லறத்தை மேற்கொண்டொழுகி நன்மைபெற்று இன்பவாழ்க்கையில் நாடுபடுவோமாக.

சூத்திரன் என்று உன்னைச்
சொல்லிக் கொள்ளாதே.
சூத்திரன் என்றால் வேசி
மகன் என்று பொருள்.

எங்கும் கீர்யாதி பேற்ற

பழநி சி. எம். சாமி.

குருதாம்பரபஸ்பம்

ஒன்றுதான் உயர்தரமானது.

திமிர், குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து மேகம், தடிப்புகள், மாறி விட்டன. ஆருத குழிப்புண் ஆறிவிட்டது. இருமல், குன்மம், வெள்ளை, வெட்டை, பவுத்திரம், மூலம், நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலிய எல்லா வியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம்நற்சாட்சிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

100 வேளை பஸ்பமும் அனுபானமும் விலை ரூ. 50. 50 வேளைக்கு ரூ 25. எழைகளுக்குப்பாதிவிலை. வி. பி. வேறு.

நற்சாட்சி:—ஒரு வயிரில் இரண்டு தீராத ரோகஸ்தர்கள் எமது குருதாம்பர பஸ்பத்தால் பூர்ண குணம் பெற்ற போற்றுதலை கவனியுங்கள்.

எமது வயிரில் உங்கள் பெயர் சூரியஜைப்போல் பிரகாசிக்கிறது. மேகவியாதியால் ஒண்ணரை வருஷகாலமாய் படுக்கையிலிருக்கவன் குருதாம்பரபஸ்பத்தால் பூர்ணகுணமானன். மூல வியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூர்ண குணமானன். ஆனதால் என் வியாதிக்குத் தகுந்த மருந்தனுப்பக் கோருகிறேன்.

A. M. துரைசாமி, 80-நிர், மார்க்கட் ரோடு, சூலை பேங்களூர் 11—4—27.

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் எமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேதவைத்திய ஆசிரியர்,

C. மலையப்பசாமி. நித்தியானந்த வைத்தியசாலை

சென்னை போஸ்ட ஆபீஸ்:-முருகன் எஜன்ஸி, 43 அரண்மனைக்காரத் தெரு, ஜி.டி.சென்னை.

மிருத்யுஞ் ஜெய வம்பகஷணீய வைத்தியசாலை, மாயவரம்.

அமிர்த சஞ்சீவி ரசாயனம். விலை சேர் 1-க்கு ரூ. 4.

இது சகல வியாதிகளுக்கும் அமிர்தம் போன்ற தக்க ஷகண்ட மருந்து. விசேஷமாய் காளம், கூயம், பிரமேகம் (நீர் ரோகம்) குன்மம், சூலை, குஷ்டம், ரணம், மேகநீர், சொரி, சிரங்கு, வெட்டை இவைகளுக்கும், சரத்தம் குறைந்து இந்திரியம் நீர்த்துப்போய் இரவில் தூக்கமின்றி தவிப்பவர்களுக்கும் இன்றியமையாதது.

காமகல்பக ரசாயணம். விலை சேர் 1-க்கு ரூ. 7—8—0.

இது நித்யம் இரவில் சாப்பிட்டு பால் சாப்பிட்டால் சக நித்திரையும் சம்போக சாமர்த்தியமும் உண்டாவதுடன் மனநிற்கு சந்தோஷத்தையும் நிரேகத்திற்கு பலத்தையும் கொடுக்கும். தவிர அஜீர்ணம், நிரகணி, குன்மம், சூலை, பித்தவாயு, நீர் ரோகம், வெட்டை, காளம், கூயம் முதலிய வியாதிகளுக்கும் உத்தமமான மருந்து.

DR. T. S. நாயர், M. S. வைத்தியசாலை, மாயவரம்.

திருப்பூர் கதர் பனியன்கள்.

குளிர்காலத்துக்குத் தகுந்த உபயோகமானவைகள்.

சும்மிடம் உறுதியானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1-க்கு

28 இஞ்ச 7-14-0 30 இஞ்ச 8-4-0, 32 இஞ்ச 8-10-0 34 இஞ்ச 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ற எல்லா விதமானகதர்ஜவுளிதினுசுகளும் கிடைக்கும். விலை லிஸ்ட ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M, V. கருப்பண்ணசெட்டியார், திருப்பூர்,(தென் இந்தியா)

திருவண்ணுமலை நத்தமன்னர்மடம்.

எமது மடத்தின் அபிவிருத்தி விஷயமாய்ஆலோசனை செய்ய எனது 1928-ஆ ஜனவரி மாதம் 5 தேதி பகல் 1 மணிக்கு எமது மடத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். சத்த மன்னர் மஹாஜனங்கள் எல்லோரும் விஜயம்செய்யுமாறு வேண்டப்படுகிறது.

எம். எ. ஆதிமூல உடையார், கார்யதரிசி, சத்தமன்னர்மடம். திருவடல் வீ.தெ.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களே கம்பத்தெய்து சர்க்காருக்கு விண்ணப்பம் எழுதும் தொழிலில் சமர்த்தர்களாகச் செய்துகொள்ளவோமென்று நினைக்கும்படி ஆண்டிய சக்தியானது இன்றையதினம் ஈனமும் சோம்பலும் ஒவ்வொருவர் கம்பிக்கைக்குறைவும் எற்பட்டு மேற்குத்திசையாசிடமிருந்தே நியாயத்தையும் சௌகரியத்தையும் பிரிக்கும் வழியை கற்றுக்கொண்டு சாம்ராஜ்யத்தின் பங்கைக்கேட்க வேண்டியிருப்பதும் அவர்கள் ஜெயிலேயும் பீரங்கியையும் காட்டி நம்மை மிரட்டுவதுமாயிருக்கிறது. உயர் குடிப்பிறப்பென்னும் ஆணவம் கொண்டவர்கள் செல்வச் செருக்கும் அறியாமையுமுடையவர்களுடன் சேர்ந்து நாட்டின் ஏழை ஜனங்களை காலால் மிதித்து வருத்தினார்கள். அவ் வேழைகளும் இந்தக்கொடுமைக்கு வெகு நாளாக உள்பட்டு, ஆதரவற்ற வலியற்ற ஒளி மழுங்கி, தான் மனிதன் என்பதைக்கூட மறந்து விட்டு, கால சக்தியின் வினவால் இப்போது நிதி தலைதூக்கி, பாழாக்கின சாஸ்திர பொய்களையும் ஜீவனற்ற வெறும் கர்மங்களையும் விட்டு சுயசக்தி உடையவர்களாய் வருவதற்கு சயமரியாதை வேண்டுமென்று சொன்னால், பாப்பான் பழய இந்தாகரீகமென்றும், வருணாச்சிரமமென்றும், பழய எட்டாலும், நம் அடிமைச் சோம்பலுக்குக் காரணமாயிருந்த சாஸ்திரசெட்ட பல தெய்வங்களின் பேராலும் பயமுறுத்துகிறான். தும்பி, பட்டுப்பூச்சி, பொன்வண்டு இவைகளால் குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டினாலும் தன் மேலுள்ள கைகளை விபரம் வந்த பின்னைகள் கழட்ட ஒத்துக்கொள்ளாது. வலப்பறம் திரும்பவும் இடப்புறம் திருப்பவும் தோளிலே சுக்கான் ஒன்று தானுண்டு. அதுபோலவே மனிதன் ராஜ்ய விஷயத்திலும் ஜாதியாசார விஷயத்திலும் இரண்டிலும் உண்மை நிலைபெற வேண்டுமானால் அதற்கு ஒரே வழிதானுண்டு. அந்த வழிதான் சயமரியாதை. அதைத்தான் உங்கள் 'குடி அரசு' சொல்லுகிறது.

ஜட்ஜி வி. வி. அய்யங்கார் அவர்கள் நம் பூர்வீக காகரீகத்தை மேல் நாட்டார் மெச்சுகிறார்கள் என்று சொல்லுகிறார். பத்தி குருட்டு பத்தியாகவிருந்தாலும், எந்த ஜனங்களுடைய பூர்வீக வழக்கங்கள் ஆபாசமாகவிருந்தாலும் அதிலொரு வெளி அழகுண்டு. அவ்வழகை கமது நாட்டிலும் யாத்திரை செய்யும் அன்னியர் கண்டு சில சமயம் மெச்சுகிறார்கள். நித்திரக்காரன் ஒருவன் இடிந்த வீட்டின் புராதன அழகைப் பார்த்து மயங்கி அதில் குடியிருக்க யோக்கியதையில்லை என்பதை மறந்துவிடுவதுபோல தீர்த்தயாத்திரை விசஷத்திற்கும் திருவான்களுக்கும் ஜனங்களும் பெரும் பருதி வித்திரைகளும் போகையில், புகை வண்டியிலிருந்து புகைத்தோணிக்கும், புகைத்தோணியிலிருந்து புகை வண்டிக்கும், கோவிலிலிருந்து வெளியிலும், வெளியிலிருந்து கோவிலுக்கும், உண்ணையிலும் உடுக்கையிலும், குளிக்கையிலும் சாமி கும்பிடுகையிலும், புரோதெக் கொள்ளையிலும், குருக்களோடு மாரடிக்கையிலும், இருட்டுக் கொடுக்கையிலும், சோயுற்றப் படுக்கையிலும், அவர்கள் பழம் கஷ்டத்திற்கும் அவமானத்திற்கும் ஒய்வில்லை. அவர்களுடைய பரிதாபத்திற்கிடமான பொறுமையிலும் ஒருவித அழகும் மெச்சதலும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அவர்கள் கும்பிடுந் தெய்வம் அவ்வழகை எற்றதில்லை; மெச்சலையில்லை; கைமாறு தாராமல் அவர்களே தண்டனை செய்கிறது. அவர்களுடைய தயார்கள் எப்போதும் பெருகுன்றன. மீண் கிரிகை சடங்குகளுக்கிடையே அவர்கள் வளர்க்கும் பின்னைகள் இவ்வுலக இன்பங்களுக்குப் பின்னைக்காட்டி இரந்து பரலோகசிழலைக்கண்டுகழிக்குகிறார்கள். சாம்ராஜ்ய சார்தையில் நம் பெருமைக் கொள்வாருமில்லை, மெச்சுவாரு மில்லை.


மின்சார ரசம்.

சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம்.

பத்தியமில்லை! மின்சார ரசம்.

அநுபானமில்லை! மின்சார ரசம்.

REGISTERED TRADE MARK MINSARA RASAM LTD

இதற்கு இயற்கையாகவே ஒருவித மின்சார சக்தியுண்டு. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்ஷம், மனிதன் தினமுதல் கால் வரையில் வரும் எல்லா ரோகங்களுக்கும் தேவாமிருதம் போன்ற தென்பது ஜகத் பிரசித்தம். பலரின் அநுபவம். கைகண்ட மருந்து.

எச்சரிக்கை:- ரிஜிஸ்டரான டிரேட்மார்க்

தலிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். டாக்டர்களே தேட வேண்டியதில்லை. உங்கள் காலத்தையும் சௌகர்யத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்தும். ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றது.

உண்மை யறிய ஒரே முறை பரீக்ஷியுங்கள்! கேட்டால் இனம். இன்றைக்கே எழுதுங்கள்.

உங்களே ஆச்சரியமுறச் செய்யும்!

ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபாற் செலவு வேறு.

விலாசம்:- மின்சார ரசம் கம்பெனி Ltd., சேலம்.

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள் } மெசர்ஸ். T. N. சோக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ். இங்கிலீஷ் மருந்து ஷாப், வடக்குசித்திரை வீதி, மதுரை.


எஜமானனவன் வேலைக்காரனிடம் "உங்களப்பனைத் திட்டினாலும் செருப்பாலடித்தாலும் பொறுமையோடு அடக்கமாய் இருந்து கொடுக்கும் கூலியை வாங்கி மாடுபோல் அவன் வேலை செய்வான்" என்ற மகனிடம் மெச்சுவதுபோல் வெள்ளைக்காரர்களும் கம்மை மெச்சலாம். அதைத்தான் இவர்களும் சொல்லுகிறார்கள். ஸ்ரீ வி. வி. அய்யங்காருக்கும் சர். சி. பி. அய்யர் அவர்களுக்கும் இப்பொழுது வெட்டப்பட்டு அவர்கள் கடக்கும் பாதை இந்த பூர்வீக காகரீகமுமல்ல; இவர்கள் மூதாதை சொத்துமல்ல; இவர்கள் எத்தப் பாதையிலும் கடக்கலாம்; மற்றவர்களும் அதில் கடக்க வருகிறார்களே என்னும் ஒரே எண்ணத்தால் தடைகள் கட்டுவது இவர்களுடைய வாழ்க்கையின் பரம்பரைத் தொழிலாகக் காணப்படுகிறதே ஒழிய இவர்கள் பிரசங்கத்தின் கருத்தென்ன? அந்தடைகள் உயர்வதையே அபிவிர்த்தி என்று அவனுல் பிழைப்பவனும் அதைக் கேட்டு பாழாய் போகிறவனும் போகட்டும். இவர்கள் பூர்வீக காகரீகத்தை நம்பி வருணாசிரம தர்மத்தை சுத்தியமாக வினைநிருந்தால் ஸ்ரீ வி.வி. அய்யங்கார் அரசமரத்தடியும் ஆலமரத்தடியும் உட்காராமல், ஸனம் பாஷியம் அய்யங்காரின் வீட்டை வாங்கி இனியும் மேல் பதவிக்குத் தகுதவாற தன்னையும் வீட்டையும் அமைத்துக் கொள்வாரா? சர். சி. பி. அய்யர் மகன் கையில் சொம்பைக் காட்டி தான் தீர்த்த யாத்திரை போகாமல் மேளுடுபோய் தனக்கும் பின்னே குட்டிகளுக்கும் இருப்பிடம் தேடுவாரா? சர். டி. ஆர். ராமசந்திர அய்யர் சன்னியாசம் வாங்க வேண்டிய வயது வந்தும் வானப்பிரதாஸ்ரமம் கூட வாங்காமல், பணம் வாங்கினும் ஞாயமாக நடக்காத வக்கீல் தொழிலே இனியும் விடாமலிருப்பாரா? இவர்கள் எந்த வருணாசிரமத்தைச்சேர்ந்தவர்கள் என்பதே 'குடி அரசின்' கேள்வி. (தொடரும்).


விளம்பரம்.

வியாபாரிகளே!

உங்களுடைய வியாபாரம் செழிப்பாக நடக்க வேண்டுமா? அப்படியானுல் நீங்கள் முக்கியமான பத்திரிகைகளில் விளம்பரம் செய்தல்வேண்டும். உங்களுடைய விளம்பரத்தை எங்களிடம் அனுப்புங்கள். நாங்கள் அதை எப்படி எழுதினுல் ஜனங்களின் மனதைக் கவர்ச்சி செய்யுமோ அந்த வழியில் எழுதி அழகாகப் பிரசுரிப்போம். குறைந்த விதிதம் வேண்டுமானுல் நீங்கள் எங்களுக்குத் தான் எழுத வேண்டும். வியாபாரத்திற் கழகு விளம்பரம் செய்வதே

வாஸ் அட்வர்டைஸிங் சர்விஸ்,
தபால் பேட்டி 119, மதராஸ்.

காலந்திற்கேற்ற நூல்! காதலர்கள் தேடும் நூல்!!

நீங்கள் நெடுநாட்களாய் எதிர்பார்த்திருந்த

**இரகசிய புஸ்தகம் தயாராகிவிட்டது.**

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

அழகான பயிண்டு. சுமார் 400-பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம் நேர்த்தியான அச்சு.

நல்ல இனேல் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அருகே அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1. திறவிகளின் கதி யென்ன?
2. இல்வாழ்க்கை என் றெற்றது?
3. இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி?
4. இல்வாழ்க்கையின் இரகியத்தை யறியாதார் படும்பாடு.
5. பெண்ணின் பெருமை, பெண்கல்வி.
6. காணம் எப்படி உண்டாயிற்று?
7. உடைக்கும் ஞாணத்திற்கும் சம்பந்தம்.
8. ஒவ்வொரு தேசத்திலும் ஞாணம் எந்நிலைமையிலிருக்கிறது?
9. நாம் என் உடைதரிக்கவேண்டும்?
10. நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன?
11. இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்?
12. ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன? உண்மையான கலியாணம் எது?
13. காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
14. சாந்தி முகூர்த்தத்தில் எப்படி வெற்றியடைவது?
15. மனவியினைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
16. கணவன்மாரை மனவிகள் எப்படி வசியப்படுத்துவது?
17. தமக்குச்சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டுகொள்வது?
18. ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது?
19. அவர்களிடத்தில் அபிர்தமிலே எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நீலே பெயர்க்கிறது?
20. பலஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
21. சங்கமம் செய்யவேண்டிய காலும் காழிகையும்.
22. குதுவாவின் மர்மம் அல்லது மாதலீடாய் என்பதன் தத்துவமென்ன?
23. வாழ்க்கையில் முக்கியமாய் பெண்கள் அறிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள்.
24. பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்கு காரணம். இதைப்போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
25. மனம் போல் மக்களைப் பெறும் தூய உபாயங்கள்.
26. கருவிலிருப்பது ஆண பெண்ணை என்று எப்படி அறிந்து கொள்வது?
27. தம்மனோபாவனையின்படி ஆண், பெண் உற்பத்தி செய்துகொள்ளும் தன்மை.
28. கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் கடைந்து கொள்ளவேண்டிய முறைகள்.
29. கர்ப்பகாலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக்கூடிய வியாதிகள்.
30. அவைகளை போக்கடிக்கும் உபாயங்கள்.
31. சுகப்பிரசவத்திற்கு வேண்டிய மார்க்கங்கள். பிரசவித்த குழந்தையைப் பிரசவ காலத்தில் ரக்ஷிக்கும் விதம்.
32. முதல் மாதத்திலிருந்து கடைமாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
33. ஸ்திரீகள் மலடாவதண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப்போக்கடிக்கும் விதம்.
34. புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் என் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது? இதைப் போக்கிக்கொள்ளுவ தெப்படி?
35. அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? இமையாயின் அதைத்தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ, புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்க முடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசு கொலை அநியாயம்.
36. ஒருவன் எத்தனை மாதரை மணம் புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்க்கிறப்பவன் கவனிக்கவேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக் காப்பாற்றிக்கொள்வது? அவனுடைய மனவிகள் ஒருவருடனொருவர் பொறுமை கொள்ளாமலிருக்க வேண்டுமானால் அவன் எப்படி சாமர்த்தியமாய் நடந்து கொள்ளவேண்டும்.
37. தாகெள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா? தாகெள் வீடுபோரும் நபர்களுக்கு நாம் சொல்லக்கூடிய லெ வார்த்தைகள். எனென்றால் அங்கும் எமாற்றமடையாமல் இன்பம் காண்பதற்கு அநேக வழிகளுண்டு.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன்போன்ற இரகசிய விஷயங்களே இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

ஆகையால் நண்பர்களுக்கு நமது வேண்டுகோள் என்னவென்றால் இவ்வினம்பரத்தைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்னும் எமது புதிய நூலின் ஒரு பிரதியை வாங்குவாராக. குடும்பஸ்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் இதன் பிரதியொன்று இருக்கே தீரவேண்டும். உம்முடைய நண்பர்களிடத்தும் இந்நூலைப் பரப்பி நாட்டிற்கு நன்மைசெய்யுங்கள். இந்நூல் லாபக்கருதி அச்சிட்ட புத்தகமல்ல.

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்ற புத்தகம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள புத்தக வியாபாரியிடமும் கிடைக்கும் அல்லது எங்கள் விலாசத்துக்கு உடனே எழுதவும்.

முக்கிய குறிப்பு:—வெளி நாட்டார் கண்டிப்பாய் முன்பணம் அனுப்பவேண்டும்.

**வாஸன் புஸ்தகசாலை,**

தபாற் பெட்டி நெ. 119

97. அண்ணபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்.

தீராத குஷ்ட ரோகங்களை தீர்க்கும் வல்லமையுடையது பழனி ஸ்ரீமத் சற்குரு மகாதேவ ஸ்வாமிகளின் முதல் நெம்பர் தாம்பிரபற்ப மேயாதும். எவ்வளவான குஷ்ட ரோகின் இப்பழனியிலும் வெளியூர்களிலும் சௌக்கியமடைந்து புகழ்ந்து கொண்டாடி வருகிறார்கள். கண்பர்கள் கேரில் விசாரித்தால் உண்மை தெரியவரும். தன்முய் கவனித்து உண்மையைத் தெரிந்து வாங்கி உபயோகியுங்கள். நமக்கு அண்டப்புளுகு புளுகத்தெரியாது.

☞ அசட்டையால் வரும் ஆபத்தை நீக்கி, யோசிக்கும் திறமையால் குணம் பெறலாம்.

பாலாம்பிகை டிரேட்மார்க்

அறிமுகம்:— என் குருநாதர் ஹரித்துவாரம் மங்களபுரி பாவாஜி பெரிய யோகி மகான். காலஞ்சென்ற தலை முறையாகக் கையாண்டுவந்து இம்முறையை நான் இருபது வரு தொண்டு செய்து தெரிந்து கொண்டு சாதுக்கள் அகோரை வீட்டு பழனிக்கு வந்து அசேக கொடிய ரோகஸ்தர்களுக்குக் கொடுத்து குணம் செய்ததற்குள்ள சற் சாட்சிகள் பலவுள. பத்திரிபுக்கள் வேண்டுகோளுக் கினங்கி குறைந்த விலைக்கு வெளியிடப்பட்டிருக்கின்றன. பலவித குஷ்ட ரோகங்களுக்கும் இன்னும் அசேக ரோகங்களுக்கும் எற்பட்ட அனுபானத்துடன் கொடுத்துக்கை கண்டது. பல சிதோஷ்ண வ்திதிக்கும் ஆண், பெண் இருபாலரும் எந்த வயதாயிருந்தாலும் சாப்பிடச் சரியாய் அமைக்கப்பட்டது. அபார சக்தி வாய்ந்தது. வாந்தி முதலிய எவ்விதச் கெடுதலும் செய்யாதது.

# முதல் நெம்பர் தாம்பர பற்பம்.

தீரும் வியாதிகள்:— கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெள்ளுகுஷ்டம், சொரிகுஷ்டம், பொரிகுஷ்டம், விரிகுஷ்டம், எரிகுஷ்டம், சபலகுஷ்டம், குறைநோய், கில்லட்டைக்கடி, கடிவிஷங்கள் 8-ம், நீராம்பல், பெரு வயிறு, மகோதரம், நீர் வகரை, குன்மம், அண்டவாய்வு, ஆனைக்கால், சூலை, நிமிர், மரமரப்பு, உன்னங்கை உன்னங்கால் எரிச்சல்கள், நிரேகம், அழுகி அர்ந்தற்ற முடையவர்கள், ஆணிப்புண்கள், குழிப்புண், சொரி, கண்ட மாலை, பவுத்திரம் இன்னும் அசேக கொடிய ரோகங்களெல்லாம் சித்திரத்தில் 5, 10, 21, வேளைகளில் குணப்படுத்தும்.

விலை விபரம் { முதல் நெம்பர் தாம்பர பற்பம் அனுபான சூரணத்துடன் 21-நாள் விலை ரூ. 30 } தபால் சார்ஜ்
" " " " 10-நாள் " " 15 } பிரத்தியேகம்.
2 நெம். " " " 40-நாள் " " 40 }

நற்சாட்சியைக் கவனியுங்கள்:— (1) பழனியில் தாம்பிர பற்பம் என்னும் பொழுது அதன் ஆரியரும், உற்பத்தி கர்த்தாவும்—வட இந்தியா இமயகிரிச் சாரல் பெரிய யோகி மகான், மங்களபுரி பாவாஜியின் சீடர் பழனியில் சதானந்த மெடிக்கல் ஹால் வைத்திருக்கும் ஸ்ரீமான் சற்குரு மகாதேவ சுவாமிகள் என்ற ஞாபகம் நூனக்களுக்கு இருக்கவேணுமாய் வற்புறுத்தி பொர்க செய்வேன். எங்கள் குடும்பத வனிலேயும் எங்கள் பந்துக்கள் குடும்பங்களிலேயும், எங்கள் சிநேகிதர்களின் குடும்பங்களிலேயும் நீராத ரோகங்களை எல்லாம் தீர்த்து வந்தவர் இவரைத் தவிர வேறு ஒருவரையும் காணோம். சுவாமிகள் அயல் நாட்டிலுள்ள வியாதியஸ்தர்களின் மேல் வைத்துள்ள அன்பு மிகவும் பாராட்டத்தக்கதே. கண்பர்கள் சுவாமிகளின் மருந்தைக் கையான சகல வியாதிகளும் நீங்கி சுகமடைவார்களென்று என் உறுதியாய்ச் சொல்லுகிறேன். (எம். வேலுச்சாமி சாடான்வார். மிராசுதார், தாமரைக்குளம் பழனி 8-1!-25.)

(2) எனக்குள்ள பெரும் வடினமான குஷ்டரோகத்தைத் தீர்த்தவர் சுவாமிகளே [மாரியப்பக் கவுண்டர் விசுகாயி பழனி 14-7-25]

(3) எனக்கு 6- ஆம் காலமாய் உள்ள சபல குஷ்டம் சுவாமிகளின் முதல் நெம்பர் தாம்பிர பற்பத்தால் பூரண குணமடைந்தேன். பி. வி. சேஷய்யர், பழனி தேவஸ்தானம் மணியம். 14-1-25.

(4) மஸ்ரா-ஸ்ரீ மகாஜனம் பொருந்திய ஸ்ரீமத் சற்குரு மகாதேவஸ்வாமி அவர்களுக்கு பிஞ்சு பிறையில் (Prye) இ. வி தோமால் எழுதிக்கொண்டது.—

ஐயா, எனக்கு நீங்கள் அனுப்பிய முதல் நெம்பர் தாம்பிர பற்பத்தை நான் ஐந்து நாள் சாப்பிட்டேன், கருமேக நீர் சம்மந்தமான சகல ரோகங்களும் நீங்கி சுகமாகி விட்டது. இனியும் பார்வி மருந்து கையருகிருக்கிறது. கஷ்டப்படுபவர்களே சௌக்கியப்படுத்தி ரட்சிக்கும் பொருட்டு கடவுள் உங்களை அவதாரரூபமாக இப்பேர்ப்பட்ட ரோகங்களை சௌக்கியப்படுத்துவதற்காகவே ஏற்படுத்தியிருக்கிறார் என நான் உறுதியாய் நம்புகிறேன். இப்படிக்கு சி. வி. தோமால் அனர்தபுரம், பிதை, பிஞ்சு 16-2-25

(5) பழனி டவுன் சேர்மேன் அவர்கள் கொல்வதைக் கவனியுங்கள்:—என் வீட்டிற்கு சமீபமாயுள்ள ஒருபெண்ணுக்கு குமரண்ட வலிப்பு கண்டு இங்கிலீஷ் டாக்டர்களாலும், நாட்டு வைத்தியர்களாலும் கைவிடப்பட்டு சுவாமிகளின் முதல் நீர், தாம்பிர பற்பத்தால் ஒரு சிக்கிரத்தில் சௌக்கியப்படுத்திவிட்டார். சுவாமிகள் வியாதியஸ்தர்களின் விஷயத்தில் பாராட்டும் தயாள குணமும், இரக்கச் சித்தையும் மிகவும் பாராட்டத்தக்கது. இவர் தயாரிக்கும் பற்பகைகளும், செந்தூரங்களும், லேகிய வகைகளும், தைல முறைகளும் மிகவும் மேன்மையானதும் அருமையான முறைகளால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. சுவாமிகள் வசூலிலுள்ள அசேக கொடிய ரோகங்களையும், அயலூர்களிலுள்ள பிணியாளர்களையும் வெகு ஜன்றியில் சொஸ்தம் செய்திருர். மேலும் வியாதிபஸ்தர்களால் அசேக சற்சாட்சிகளும் பெற்றிருக்கிறர். ஷ சுவாமிகளிடம் அயலூர்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும், மருந்த சாப்பிடலாமென்ற விஷயத்தையும் இவரு டையபெருமையை பொது ஜனக்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்வதில் எனக்கு பிரியம் அதிகம்.

M. P. மங்கல கவுண்டர். காணியாளர், மிராண்தார், முனிசிபல் சேர்மென் & பழனி தேவஸ்தானம் ஆனரரி டிரஸ்டி.

லீவரமான கேட்லாக்குக்கு எழுதுங்கள். ஆர்டர் செய்யுங்கள். மற்ற எவ்வளவான சற்சாட்சிகளை மது கேட்லாக்கில் பார்க்கவும்

மலாய் நாட்டில் உள்ள நண்பர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது முன் பணம் ரூ 5 அனுப்பவும்

தங்கபற்பம், வெள்ளி பற்பம் முதலிய விளம்பரத்தை அடுத்தவாரப்-திப்பில் பார்க்கவும்

## ஸ்ரீமத் சற்குரு மகாதேவ ஸ்வாமிகள்.

சதானந்தா மெடிக்கல் ஹால் பழனி. மதுரை ஜில்லா, தென்னிந்தியா.

தந்தி விலாசம்:— "சற்குரு" பழனி. Tel-address. "Sarguru" Palni.

ஸ்ரீமதி நாகம்மாள் வர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.